REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஜுலை 16 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

92 1932–2024 ANNIVERSARY

வரு. 92 இல. 168 | Tuesday 16, July, 2024 | 16 பக்கங்கள் | 50/-





இன்று 16ஆம் திகதி முதல் 19 வரை

## வெளிநாட்டமைச்சர் அலி சப்ரி ருமேனியா, போலந்து விஜயம்



வெளிநாட்டமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி இன்று ருமேனியா மற்றும் போலந்துக்கு உத்தியோகபூர்வ விஜயங்களை மேற்கொள்ளவுள்ளார்.

இன்று 16 ஆம் திகதி முதல் 19 வரை அவரது உத்தியோகபூர்வ விஜயம் அமைந்துள்ளதாக வெளிநாட்டமைச்சு அறிவித்துள்ளது. இந்த விஜயத்தின் போது அவர் அந்நாட்டின் சிரேஷ்ட அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளை சந்தித்துப் பேசவுள்ளார். 06


ஹைதராபாத்தில் இன்று ஆரம்பமாகும்

## நீரியல் வள மாநாட்டில் பங்கேற்க அமைச்சர் டக்ளஸ் இந்தியா பயணம்



இந்தியாவின் தெலுங்கானா மாநில தலைநகர் ஹைதராபாத்தில் இன்று (16) நடைபெறும் நீரியல் வள மாநாட்டில் இலங்கையின் சிறப்பு அதிதிகளாக கலந்து கொண்டு கடல் வளங்கள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதற்காக நேற்று (15) மாலை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமை 06

## பொருளாதார நெருக்கடியில் தேவையறிந்து உதவிய இந்தியா



இலங்கை மிகவும் நன்றிக்கடன்பட்டுள்ளது -ஹக்கீம்

இலங்கை சில வருடங்களுக்கு முன்னர் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டவேளை பெரும் நிதி உதவியை வழங்கியமைக்காக இந்தியாவுக்கு இலங்கை எப்போதும் நன்றிக்கடன்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் 06

## ஆனைமடு ஜயசூரிய வித்தியாலய மாணவர் கோரிக்கையை நிறைவேற்றிய ஜனாதிபதி



ஆனைமடு ஜயசூரிய மகா வித்தியாலய மாணவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி அலுவலகத்தில் அண்மையில் சந்தித்து சிநேகபூர்வமாக உரையாடினர். மிகவும் வேலைப்பளுவிலிருந்த போதிலும், ஜனாதிபதி அந்த மாணவர்களுடன் கலந்துரையாடியதுடன் அவர்களின் கல்விப் பணிகள் குறித்து கேட்டறிந்ததோடு, மாணவர்கள் தமது கல்லூரியின் சில குறைபாடுகள் 06

### மக்களின் வாழ்வாதாரத்துக்கு வழங்கப்பட்ட சலுகை

# மின் கட்டணம் மேலும் குறைப்பு

வீட்டுப் பாவனை 27 வீதம்
மத வழிபாட்டுத் தலங்கள் 30 வீதம்
உணவகங்கள், கைத்தொழில் துறை 25 வீதம்

### வருடத்தின் 02ஆவது மின் கட்டணம் 22.5 வீதத்தால் குறைப்பு இன்று முதல் அமுல்

லோரன்ஸ் செல்வநாயகம்

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவானது இந்த வருடத்தின் இரண்டாவது மின் கட்டணத் திருத்தத்திற்கிணங்க மின் கட்டணத்தை 22 .5 வீதத்தினால் குறைப்பதற்கு தீர்மானித்துள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மஞ்சுள பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் வீடுகளுக்கான மின்சாரக் கட்டணம், மத வழிபாட்டுத்தலங்கள், ஹோட்டல்கள், கைத்தொழிற்சாலைகள், பொது மற்றும் அரச நிறுவனங்கள் ஆகியவற்றின் மின்சார கட்டணங்களும் இன்று முதல் குறைக்கப்படவுள்ளன.

மின்சார கட்டணத்தை குறைப்பது தொடர்பான முன்மொழிவுகளை மின்சார சபை அண்மையில் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்திருந்தது.



அதற்கிணங்க, நேற்றைய தினம் அந்த ஆணைக் குழு அதற்கான அனுமதியை மின்சார சபைக்கு வழங்கியுள்ளது. மின்சார சபையானது அதன் யோசனைகள் முன் மொழிவின்போது நூற்றுக்கு 10 வீத கட்டணக் குறைப்பை தெரிவித்திருந்தபோதும் பொது பயன்பாட்டு ஆணைக்குழுவானது அதனை 22.5 வீதத்தால் குறைத்துள்ளது. 06

Domestic Bill Calculator - As per the revised tariff

| No. of Units | Previous Bill (Rs.) | Revised Bill (Rs.) | % Change |
|---|---|---|---|
| 180 | 8,400.00 | 6,360.00 | -24.3% |

| No. of Units | Previous Bill (Rs.) | Revised Bill (Rs.) | % Change |
|---|---|---|---|
| 30 | 390.00 | 280.00 | -28.2% |
| 60 | 1,140.00 | 700.00 | -38.6% |
| 90 | 2,800.00 | 1,840.00 | -34.3% |
| 120 | 4,900.00 | 3,340.00 | -31.8% |
| 150 | 6,900.00 | 5,100.00 | -26.1% |
| 180 | 8,400.00 | 6,360.00 | -24.3% |
| 210 | 11,150.00 | 8,810.00 | -21.0% |
| 240 | 13,400.00 | 10,760.00 | -19.7% |
| 270 | 15,650.00 | 12,710.00 | -18.8% |
| 300 | 17,900.00 | 14,660.00 | -18.1% |

மின் கட்டண குறைப்பு;

## சமய, சமூக தலைவர்கள் வரவேற்று கருத்து






1. பாபு சர்மா குருக்கள்

பொருளாதார சுமைகளிலிருந்து மக்கள் படிப்படியாக மீண்டு வரும் இச்சந்தர்ப்பத்தில் மின் கட்டணங்களை குறைப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கை காலத்துக்கேற்ற செயற்பாடாகும். ஜனாதிபதி தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் இத்தகைய நடவடிக்கைகளுக்காக நாட்டு மக்கள் அவரைப் பாராட்டுவதுடன் 06

## கிழக்கு பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் எதிர்கொண்ட போக்குவரத்து பிரச்சினைக்கு தீர்வு!

உள்ளக வீதியை திறந்து வைத்தார் அமைச்சர் பந்துல குணவர்தன



மட்டக்களப்பு சுழற்சி நிருபர்

கிழக்கு பல்கலைக்கழகத்தின் மட்டக்களப்பு பிள்ளையாரடியிலுள்ள மருத்துவபீட மாணவர்கள் எதிர்கொண்ட போக்குவரத்து பிரச்சினைக்கு தீர்வுகாணும் முகமாக பெருந்தெருக்கள் அமைச்சு, சுமார் 30 கோடி ரூபா நிதியில் காபட் இடப்பட்ட 06

ஈஸ்டர் தாக்குதல் சம்பவ நட்ட ஈடு

## முழு இழப்பீட்டுத் தொகையையும் ஆக. 30க்கு முன் செலுத்த வேண்டும்

மைத்திரிக்கு உயர்நீதிமன்றம் உத்தரவு



நெல்கா மெதகெதர

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் வழங்கிய தீர்ப்பின்படி அனைத்து இழப்பீடுகளையும் ஆகஸ்ட் 30 க்கு முன் வழங்குமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பொலிஸ் மாஅதிபர் பூஜித் ஜயசுந்தர, அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர், பிரதிப் பொலிஸ் மாஅதிபர் 06

ஜனாதிபதித் தேர்தலை தடுக்கக் கோரும்


## இரண்டாவது மனுவும் நேற்று உயர் நீதிமன்றத்தினால் நிராகரிப்பு

5 லட்சம் ரூபாவை வழக்குப் பணமாக செலுத்தவும் மனுதாரருக்கு உத்தரவு



லோரன்ஸ் செல்வநாயகம்

ஜனாதிபதி தேர்தலை தடுக்கும் வகையில் உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட இரண்டாவது மனுவையும் நீதிமன்றம் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாது 06



03 பல்கலைக்கழக கல்விசாரா ஊழியரின் வேலை நிறுத்த போராட்டம் நிறைவு

03 கடவுச்சீட்டு, பணம் கொடுக்கும் முன் முகவரைப் பற்றி அறிவது அவசியம்

பொன்சேக்கா MPக்குப் பதிலாக

## ஐ.ம.ச புதிய தவிசாளராக கபீர் ஹாசீம் MP நியமனம்



ஐக்கிய மக்கள் சக்தியின் புதிய தவிசாளராக கபீர் ஹாசீமை நியமிப்பற்கு தீர்மானித்துள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் கட்சியின் தவிசாளர் சரத் பொன்சேக்காவுக்குமிடையிலான முறுகல் நிலையின் உச்சக்கட்டமாக சரத் பொன்சேக்காவை கட்சியின் தவிசாளர் பதவியிலிருந்து நீக்கிய பின்னர் கபீர் ஹாசீமை நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. 06

அவுஸ்திரேலியாவில் மகனும்,

## இலங்கையில் தாயும் ஒரே நாளில் மரணம்



இலங்கையில் தாயும் அவுஸ்திரேலியாவில் மகனும் ஒரே நாளில் மரணமான சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. களனி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் லக்ஷ்மன் சுனில் விஜேசிறியின் மகன் (வயது 40) அவுஸ்திரேலியாவில் பணிபுரியும் போது 06

## ஜனாதிபதி வேட்பாளராக ரணிலையே நியமிக்கவும்

திருமலை உள்ளூராட்சி உறுப்பினர்கள் தீர்மானம்

திருகோணமலை மாவட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி வேட்பாளராக முன்னிறுத்த வேண்டுமென தீர்மானித்துள்ளனர். கட்சியின் சிரேஷ்ட அமைச்சர் என்ற வகையில், அந்த செய்தியை கட்சிக்கும் தெரிவிக்குமாறு அமைச்சர் கலாநிதி பந்துல குணவத்தனவிடம் கேட்டுக்கொள்கிறோமென முன்னாள் மொறவெவ பிரதேச சபைத் தலைவர் ஜகத் குமார தெரிவித்தார்.

போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் ஒதுக்கீட்டின் கீழ் கார்பட் செய்யப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட திருகோணமலை மாவட்டத்தின் மொறவெவ விமானப்படைத் தளத்துக்கான 06

## திருமலை வர்த்தகர் கடத்தப்பட்டு வாகனத்துடன் எரித்துக் கொலை

பன்மதவாச்சி காட்டுக்குள் சடலம் மீட்பு



திருகோணமலை வர்த்தகர் ஒருவர் கெப் வாகனமொன்றில் கடத்திச் சென்று வாகனத்துடன் தீயிட்டு கொளுத்தி படுகொலை செய்யப்பட்டுள்ளதாக உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர். 06

# அனைவரும் ஓரணியில் நின்று அடுத்த ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்கவையே தெரிவுசெய்ய வேண்டும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்டுள்ள அரசாங்கத்தின் திட்டம் தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்தும் 'ஒன்றாக வெல்வோம்' என்ற தொனிப்பொருளிலான கண்டி பொதுக்கூட்டத் தொடரில் அமைச்சர் ஜீவன் தொண்டமான்

'மக்கள் எல்லோருமே ஓரணியில் நின்று, அடுத்த ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க அவர்களையே தெரிவு செய்ய வேண்டும்' என்று நீர்வளங்கள், தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

"மலையகத் தமிழன் என்பது எனது அடையாளம். ஆனால், நான் ஒரு இலங்கையன். அதை என்னால்



எந்த இடத்திலும் விட்டுக் கொடுக்க முடியாது" என்றும் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

### 'மலையகத் தமிழன்' என்பது எனது அடையாளம். ஆனால், நான் ஒரு இலங்கையன். அதை என்னால் எந்த இடத்திலும் விட்டுக் கொடுக்க முடியாது!



வினால் முன்வைக்கப்பட்டுள்ள அரசாங்கத்தின் திட்டம் தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்தும் முகமாக, 'ஒன்றாக வெல்வோம்' என்ற தொனிப்பொருளிலான பொதுக்கூட்டத் தொடரின், இரண்டாவது பேரணி கண்டி பொது வர்த்தக நிலையத்திற்கு முன்பாக நேற்றுமுன் தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் பல்வேறு அரசியல் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் என பலர் கலந்து கொண்டனர். இக்கூட்டத் தொடரில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் ஜீவன் தொண்டமான் மேலும் தெரிவித்ததாவது:

"2024 ஆம் ஆண்டில் அடுத்த ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுபவர் ரணில் விக்கிரமசிங்க அவர்களேயாவார். மலையக மக்களின் அடையாளத்துக்கு தீர்வு கிடைக்க வேண்டுமானால் அடுத்த ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட வேண்டும்.

'கெஞ்சிக் கேட்டால் பிச்சை, துணிந்து கேட்டால் உரிமை'. நாம் இந்த 1700 ரூபா சம்பளத்தை மட்டும் இறுதிக் கோரிக்கையாக வைக்கக் கூடாது. ஏனென்றால், நம்மைப் பொறுத்தவரை 'அடையாளப் பிரச்சினை' ஒன்று இருக்கின்றது. அந்த அடையாளத்திற்கு கட்டாயம் ஒரு தீர்வு கிடைத்தாக வேண்டும். அந்த அடையாளத்திற்கு கட்டாயம் ஒரு தீர்வு கிடைத்தாக வேண்டுமென்றால், கட்டாயம் அடுத்த ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க வர வேண்டும்.

அப்படி இருக்கும் போது, நான் என்னுடைய மக்களிடம் ஒரே ஒரு விடயத்தை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன்.

'மலையகத் தமிழன்' என்பது கலாசார ரீதியில் என்னுடைய அடையாளம். ஆனால், நான் ஒரு 'இலங்கையன்'. அதை நான் எந்த ஒரு இடத்திலும் விட்டுக்கொடுக்க முடியாது. அப்படி இருக்கும் தருணத்தில் உங்கள் எல்லோரிடமும் நான் ஒரே ஒரு விடயத்தைத்தான் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

நிறையப் பேர் ஜனாதிபதிப் பதவியைப் பார்த்து பயந்து ஓடிப் போனார்கள். ஆனால் இறுதியில் ஒன்றுமே செய்ய முடியாமல், 'நான்தான் நாட்டுக்கு அடுத்த ஜனாதிபதி' என்று சொல்லிக் கொண்டு வருகிறார்கள். ஆனால், மக்கள் எல்லோருக்கும் தெரியும், யார் துணிச்சலாக நின்று வெற்றி பெற்றது என்று.

இந்நிலையில் மக்கள் எல்லோருமே ஒன்று திரண்டு, அனைவருமே ஒன்றிணைந்து, கட்டுக்கோப்பாக இருந்து அடுத்த ஜனாதிபதியாக யாரை தெரிவுசெய்யப் போகின்றோம்? நிச்சயம் அது ரணில் விக்கிரமசிங்க அவர்களாகவே இருக்க வேண்டும்.

உங்கள் எல்லோரிடமும் நான் ஒரேயொரு விடயத்தை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு JDB, SPC காணியாக இருக்கட்டும் , JDB, SPC தொழிலாளர்களாக இருக்கட்டும். இன்றைக்கு உங்கள் எல்லோருக்கும் ஒரு நற்செய்தியை சொல்ல நான் விரும்புறேன். உங்களின் ETF, EPF பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் JDB, SPC தோட்டங்களுக்கு சுமார் 5000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்து இருக்கிறார். ஜனாதிபதி மக்களுக்கு முன்னுரிமை கொடுக்கின்றார்.

நாம் சம்பள உயர்வு கோரி வீதியில் இறங்கினோம். நாம் நம்முடைய இனத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தினோம். காணி உரிமைக்காகவும் வீதியில் இறங்குவோம். 200 வருடமாக இங்கு நாம் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றோம். அப்படி இருக்கும்போது நமக்குத் தேவையான விடயம் காணி உரிமை ஆகும்.

காணி உரிமை கட்டாயம் நமக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் நான் ஜனாதிபதி அவர்களிடம் ஒரு கோரிக்கையை முன்வைத்தேன். 'மக்களிடம் காணி உரிமையைக் கொடுங்கள், கட்டாயம் அவர்கள் மேலே வருவார்கள். எமக்கு இலவச வீடு தேவையில்லை. வீடு கட்டுவதற்கான வாய்ப்பை உருவாக்கித் தாருங்கள். அது போதும்' என்று நான் அவரிடம் கூறினேன்.





இன்றைக்கு ஜனாதிபதி சுமார் 4,000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்து இருக்கின்றார். அந்த நிதி ஒதுக்கீடு செய்வதற்கான காரணம் என்னவென்றால், மக்களுக்கு காணி உரிமையை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதே ஆகும்.

சில மலையகத் தலைவர்கள், பெருந் தலைவர்கள் கூறுகின்றார்கள், "இல்லை நம் மக்களிடம் காணி உரிமையைக் கொடுத்தால் காணியை அவர்கள் விற்று விடுவார்கள்" என்று. விற்பார்கள் அல்லது விற்காமல் விடுவார்கள். அது அவர்களின் இஷ்டம்.

மறைந்த தலைவர் அமரர் ஆறுமுகம் தொண்டமான் ஐயா என்றைக்குமே கூறும் ஒரு விடயம் உள்ளது. 'கெஞ்சிக் கேட்டால் பிச்சை, துணிந்து கேட்டால் உரிமை'. அந்த உரிமையை நாம் பாதுகாப்போம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் மலையகத்தின் அபிவிருத்தியின் பொருட்டு கல்வி மற்றும் சுகாதாரத்திற்கு சுமார் 2000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்து இருக்கின்றார். அந்த 2000 மில்லியன் ரூபாவில் 150 மில்லியன் ரூபா கண்டி மாவட்டத்திற்கு மட்டுமே ஆகும். வரலாற்றிலேயே கண்டி மாவட்டத்திற்கான அதிகமான அளவு நிதி ஒதுக்கீட்டை நாமே வழங்கி இருக்கிறோம். அதற்கு பாராளுமன்ற உறுப்பினர் ராமேஸ்வரன்தான் பொறுப்பாக இருக்கின்றார். எந்த இடத்திலும் நாங்கள் பயந்து கொண்டு ஓடிப் போகவில்லை. பிரச்சினை என்று வரும் போது நாங்கள் பயந்து கொண்டு காட்டில் உள்ள மிருகங்களை படம் எடுக்க யால சரணாலயத்திற்கு ஓடிப் போகவில்லை.

மக்களுக்கு ஒரு பிரச்சினை என்றால் நின்று சந்திப்போம். அதுமட்டுமல்லாமல், நின்று சாதிப்போம். மக்கள் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பக்கம் இருக்கின்றார்கள் என்ற ஒரு நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

அதேநேரத்தில், இன்றைக்கு கண்டி மாவட்டத்தின் நாவலப்பிட்டி பகுதியில் மஹிந்தானந்த இருக்கின்றார் அவருக்கு நாம் கட்டாயம் ஆதரவு கொடுத்தாக வேண்டும்.

அதே போன்று பன்விலயில் ரோஹான் ரத்வத்த இருக்கின்றார் அவருக்கும் நாம் ஆதரவு கொடுப்போம். மேலும் திலும் அமுனுகம இருக்கிறார் அவருக்கும் நாம் ஆதரவு கொடுப்போம்.

கம்பளையில் அனுராத ஜெயரத்ன இருக்கிறார். அவருக்கும் நாம் ஆதரவு கொடுப்போம். ஆனால், அவர்கள் அனைவருக்கும் ஜீவன் தொண்டமானின் ஆதரவு தேவை. அதை அனைவரும் மனதில் கொண்டாக வேண்டும். அவர்கள் மலையக மக்களின் பக்கம் நின்றால் நாம் எப்போதும் அவர்களை ஆதரிப்போம்".

இவ்வாறு அமைச்சர் ஜீவன் தொண்டமான் தனது உரையில் தெரிவித்தார்.

# மக்கள் பெருமையுடன் முன்னோக்கிச் செல்லக்கூடிய சூழலை உருவாக்குவதுதான் உண்மையான புரட்சி

## தம்புத்தேகம மகாவலி விளையாட்டரங்கில் உறுமய நிரந்தர காணி உறுதி வழங்கும் நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

"மக்களைக் கொல்வதோ வீடுகளை எரிப்பதோ உண்மையான புரட்சி அல்ல. மாறாக நாட்டில் மக்கள் பெருமையுடன் முன்னோக்கிச் செல்லக்கூடிய சூழலை உருவாக்குவதே உண்மையான புரட்சி" என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

'உறுமய' வேலைத்திட்டத்தின் ஊடாக இந்த நாட்டு மக்களால் அந்தப் பின்னணியை உருவாக்க முடிந்துள்ளதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, உண்மையான சோசலிச வேலைத்திட்டத்தை மக்கள் மயப்படுத்தும் உறுமய வேலைத்திட்டத்துடன் அரசியல் நோக்கமின்றி அனைவரும் ஒன்றிணைய வேண்டுமெனவும் தெரிவித்தார்.

தம்புத்தேகம மகாவலி விளையாட்டரங்கில் கடந்த 13 ஆம் திகதி நடைபெற்ற உறுமய நிரந்தர காணி உறுதி வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள மகாவலி எச். மற்றும் ஹுருலுவெவ ஆகிய இரண்டு வலயங்களில் உள்ள 9 மகாவலி பிரிவுகளில் 4,012 பேருக்கு இலவச காணி உறுதிகள் வழங்கப்பட்டன. 47 காணி உறுதிகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அடையாளமாக வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்ததாவது:

"தம்புத்தேகம பிரதேசத்திற்கு 50 வருடங்களுக்கு முன்னர் 1974 ஆம் ஆண்டு நான் சென்றிருந்தேன். இங்கு இருந்த அப்போதைய இடதுசாரி முன்னணி எம்.பியான ரத்னமலானவின் மரணத்திற்குப் பிறகு அந்த வெற்றிடத்திற்குப் போட்டியிடும் வேட்பாளர் தொடர்பில் பண்டாரநாயக்க குடும்பத்துக்குள் பிரச்சினை எழுந்தது. தான் போட்டியிடுவதாக அனுர பண்டாரநாயக்க தெரிவித்தார். அவருக்கு ஆதரவு வழங்குவீர்களா என எதிர்க்கட்சித் தலைவர் ஜே.ஆர். ஜயவர்தனவிடம் கேட்டபோது, ஆம் என அந்த நேரத்தில் அவர் பதில் அளித்தார். அப்போது திருமதி சந்திரிகா மற்றும் விஜயகுமாரதுங்க ஆகியோர் அதனை எதிர்த்தனர். இறுதியாக ரத்னமலானவின் மகனை திருமதி பண்டாரநாயக்க தேர்தலில் நிறுத்தினார். இடைத்தேர்தலுக்கு ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அதிகாரி நிறுத்தப்பட்டார். அந்த சமயம் நாம் இங்கு வந்தோம். மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கலாவெவ பிரதேசத்தின் பிரதான நகரமான தம்புத்தேகம புதிய நகரத்தை காமினி திஸாநாயக்க திறந்து வைத்தார். அன்றைய தினம் மத்திய மகா வித்தியாலயம், புதிய பஸ்தரிப்பு நிலையம், அனைத்து வசதிகளுடன் கூடிய மருத்துவமனை, பிரதி அரச அதிபர் அலுவலகம் மற்றும் வர்த்தக நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டன.

கல்வி அமைச்சராக அந்த நிகழ்வில் நான் கலந்து கொண்டேன். இன்று தம்புத்தேகம மிகவும் அபி



விருத்தியடைந்த நகரமாக மாறியுள்ளது. 1984 ஆம் ஆண்டு நான் இந்த பிரதேசத்திற்கு வந்தபோது எனது நண்பர் அனுர திஸாநாயக்க அந்தப் பாடசாலையில் கற்றார். அந்தக் கல்லூரியில் உயர்தரக் கல்வி ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்ததால் உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து, நாம் ஆரம்பித்த களனிப் பல்கலைக்கழகத்தில் கற்று அதிலிருந்து பட்டம் பெற்று இப்போது பாராளுமன்றத்தில் எங்களுடன் இணைந்து பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றுள்ளார்.

கல்வி வெள்ளை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டபோது, ஜே.வி.பி. தரப்பில் இருந்து கடும் எதிர்ப்பு கிளம்பியது. இந்த கல்வி வெள்ளை அறிக்கையி ல் இருந்து உருவான அவர் இன்று ஜனாதிபதி வேட்பாளராக உருவெடுத்திருப்பதையிட்டு நான் பெருமையடைகிறேன். இது கல்வி முறையின் வெற்றியைக் காட்டுகிறது.

இன்று நான் வந்தபோது, பாடசாலையின் வளங்கள் இன்னும் போதுமானதாக இல்லை என அதிபர் குறிப்பிட்டார். எனவே தம்புத்தேகம கல்லூரிக்கு புதிய கட்டடமொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன். இந்தப் பிரதேசங்களில் பாரிய முன்னேற்றத்தை ஏற்படுத்தி முன்னோக்கிக் கொண்டு வந்தோம். நீர்ப்பாசன அமைச்சர்கள், மகாவலி அமைச்சர்கள் இந்த பிரதேசத்தில் இருந்து உருவானார்கள்.

அநுர திஸாநாயக்கவும் நானும் பாராளுமன்றத்தில் இணைந்து செயற்படுகின்ற போதிலும் எமது அரசியல் வேறுபட்டது. சில நாட்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர் அரசியலின் ஆட்டக்காரர் மஹிந்த ராஜபக்ஷ என்று தெரிவித்தார். அது எனக்கு பிரச்சினை இல்லை. அவர் ஒரு ராஜபக்ஷவாதி என்பதில் எனக்கு எந்தப் பிரச்சினையும் கிடையாது. அரசில் பல ராஜபக்ஷவாதிகள் உள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவானவர்கள் பலர் உள்ளனர். ஏனைய கட்சிகளை சேர்ந்தவர்களும் உள்ளனர். நாம் அனைவரும் இணைந்து செயல்பட வேண்டும்.

இன்று அரசியல் நோக்கமின்றி அனைவரும் ஒன்றிணைந்திருக்கிறோம். அவர்கள் ராஜபக்ஷவாதிகளா அல்லது ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களா என்ற கேள்விக்கு இடமில்லை. வீழ்ந்த நாட்டை மீட்க அனைவரும் ஒன்று சேர்ந்துள்ளோம். இலங்கையைப் போன்று வீழ்ச்சியில் இருந்து மீண்டு வேகமாக முன்னேறும் வேறு எந்த நாடும் கிடையாது என அமெரிக்கா அறிவித்துள்ளது. இதை ஏனைய நாடுகள் முன்னுதாரணமாகப் பின்பற்ற வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது. இரண்டு வருடங்களுக்கு முன்னர் இந்த நாட்டின் அரசியல் கட்டமைப்பு வீழ்ச்சியடைந்தது. எந்த நாட்டிலாவது பிரதமர் பதவி வேண்டுமா என கையேந்திச் சென்றதுண்டா? 3 நாட்களாக பிரதமரை தேடினார்கள். வேறு நாடுகளின் அரசியலில் அவ்வாறு நடக்க வாய்ப்பில்லை. எந்த நாட்டிலும், ஒரு ஆசனம் மாத்திரம் இருப்பவர் ஜனாதிபதியானதுண்டா? இந்த வீழ்ச்சியடைந்த அரசியல் முறைமையில் இருந்து இன்று நாம் அனைவரும் ஒன்றிணைந்து நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரமான நிலைக்கு கொண்டு வந்துள்ளோம். அரசியலின்றி உழைத்ததால் அந்த வெற்றியைப் பெற முடிந்தது. அதற்குமுன் எங்களுக்குள் பல்வேறு அரசியல் முரண்பாடுகள் இருந்தன.

ஆனால் நாடு வீழ்ச்சியடையும் போது அவ்வாறு செயற்பட முடியாது. அந்த நேரத்தில் நாம் ஒன்றுபடாவிட்டால் அரசியல் செய்ய ஒரு நாடு எஞ்சியிருக்காது. கடந்த இரண்டு



வருடங்களாக மக்களுக்கு நிவாரணம் வழங்கப் பாடுபட்டோம். இந்த வங்குரோத்தடைந்த நாட்டில் சமுர்த்திக்குப் பதிலாக, மக்களுக்கு மும்மடங்கு நிவாரணம் வழங்கப்பட்டது. மேலும், அரசு ஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபாய் கொடுப்பனவு வழங்கப்பட்டது. 2015ஆம் ஆண்டு நான் பிரதமராக பதவியேற்றதன் பின்னர் வழங்கிய சம்பள அதிகரிப்பின் பின்னர் முதன்முறையாக அந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டது. மேலும், விவசாயிகளுக்கு தேவையான அளவு உரத்தை வழங்கி நாட்டின் விவசாயம் முன்னேற்றப்பட்டுள்ளது. கடந்த பொருளாதார நெருக்கடியால் நாட்டின் அனைத்து மக்களும் பாதிக்கப்பட்டனர். இப்போது நாட்டின் பொருளாதாரம் கட்டியெழுப்பப்பட்டுள்ள நிலையில் அவர்களை மறக்க முடியாது. கடந்த காலங்களில் இப்பிரதேச விவசாயிகள் எமக்கு நல்ல அறுவடையை வழங்கியுள்ளனர். அதனால்தான் பொருளாதாரத்தை வலுப்படுத்தி முன்னேற்ற முடிந்தது. அந்த மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் இன்று நிரந்தரக் காணி உரிமை வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளோம்".



இவ்வாறு ஜனாதிபதி தனது உரையில் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். சந்திரசேன உரையாற்றுகையில், "இன்று ரஜரட்ட மக்களுக்கு மிகவும் மகிழ்ச்சியான நாள். பாரம்பரியமாக, இந்த பிரதேசத்தில் ஏராளமான மக்கள் வாழ்கின்றனர். அடுத்த தலைமுறைக்கு பலத்தை வழங்குவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று ரஜரட்டவிற்கு வந்துள்ளார். காணிப் பிரச்சினை மக்களுக்கு பெரும் பிரச்சினையாக உள்ளது. இந்நாட்டில் உள்ள பெரும்பாலான நீதிமன்றங்கள் நிலம் தொடர்பான வழக்குகளை விசாரிக்கின்றன என்றே கூற வேண்டும். நிலம் தொடர்பான வழக்குகளை தீர்க்கப் பல ஆண்டுகளாக மக்கள் நீதிமன்றத்திற்கு சென்று வருகின்றனர். இந்தப் பிரச்சினைகளில் இருந்து மக்களை விடுவிப்பதற்காக உறுமய வேலைத்திட்டத்தை ஜனாதிபதி ஆரம்பித்தார்" என்றார்.

முன்னாள் அமைச்சர் பி.ஹெரிசன், பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திசாநாயக்க,

வனஜீவராசிகள் மற்றும் வனவளப் பாதுகாப்பு அமைச்சர் பவித்ராதேவி வன்னியாராச்சி உட்பட பலரும் உரையாற்றினர்.

இந்நிகழ்வில், மகாசங்கத்தினர் தலைமையிலான மதத் தலைவர்கள், வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான், ஐக்கிய தேசியக் கட்சியின் மாவட்டத் தலைவர் கஸ்தூரி அனுராதநாயக்க, நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர் சமன் தர்ஷன் படிகோரள, மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் மகேந்திர அபேவர்தன, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிகச் செயலாளர் சந்திரா ஹேரத், மாவட்ட செயலாளர் ஜே.எம்.ஜே.கே. ஜயசுந்தர மற்றும் அரச அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

(ஜனாதிபதி ஊடகப் பிரிவு)

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2024 ஜூலை 16 செவ்வாய்க்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්


**தொழுகை நேரம்**
சுபஹ் - 04.39
லுஹர் - 12.17
அஸர் - 03.44
மஃரிப் - 06.32
இஷா - 07.48

**இன்றைய சுபதினம்**
குரோதி வருடம் ஆனி 32
ராகுகாலம் : பகல் : 3.00 - 4.30வரை
சுபநேரம் : காலை : 10.45 - 11.45வரை
யோகம்: சித்தயோகம்
திதி: தசமி

# பல்கலைக்கழக கல்விசாரா ஊழியரின் வேலை நிறுத்த போராட்டம் நிறைவு

## இன்று முதல் கடமைக்கு திரும்புவதாக அறிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் மேற்கொண்ட வேலை நிறுத்தப் போராட்டம் நேற்று முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. அவர்கள் இன்று முதல் கடமைக்குத் திரும்பவுள்ளதாக பல்கலைக்கழக ஒருங்கிணைந்த தொழிற்சங்க கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் அமைச்சருடன் நேற்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் காணப்பட்ட இணக்கப்பாட்டுக்கமைய வேலை நிறுத்தப் போராட்டத்தை கைவிடத் தீர்மானித்ததாக பல்கலைக்கழக ஒருங்கிணைந்த தொழிற்சங்க கூட்டமைப்பின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார். பல்கலைக்கழக அனைத்து தொழிற்சங்கங்களின் தலைவர்களும் கொழும்பு அழகி யல் நுண்கலை பல்கலைக்கழகத்தில் நேற்றைய தினம் ஒன்று கூடி இந்த தீர்மானத்தை எடுத்ததாகவும் அவர் தெரிவித்தார்.

சேவைக்கு சமுகமளிப்பதற்கான நிபந்தனைகள் உள்ளடங்கிய உடன்படிக்கையில் கல்வி அமைச்சும் பல்கலைக்கழக ஒன்றிணைந்த தொழிற்சங்க கூட்டமைப்பும் கையொப்பமிடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேற்படி உடன்படிக்கையை தயாரிப்பதற்காக தொழிற்சங்க கூட்டமைப்பின் 06 பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டதாகவும் உடன்படிக்கையில் கையொப்பமிடப்பட்ட பின்னர் இன்று முதல் அவர்கள் கடமைக்குத் திரும்பவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் கடந்த 75 தினங்களாக வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மாரவிலயில் முட்டைலொறி விபத்து 06 பேர் காயம்; 02 பேர் கவலைக்கிடம்

## 01 இலட்சம் முட்டைகளில் 02 மட்டுமே மீதம்

**புத்தளம் மாவட்ட குறூப் நிருபர்**

சிலாபம் – கொழும்பு பிரதான வீதியில் மாரவில, முஹுதுகடுவ பிரதேசத்தில் முட்டைகளை ஏற்றிவந்த சிறிய ரக லொறியொன்று காரொன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் 06 பேர் காயமடைந்துள்ளனர்.

இவர்கள் மாரவில் ஆரம்ப வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மூவர் ஆபத்தான நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். இந்த விபத்து 14ஆம் திகதி பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

புத்தளம் பகுதியிலிருந்து முட்டைகளை ஏற்றிக்கொண்டு கொழும்பு நோக்கி பயணித்த லொறியும், கொழும்பிலிருந்து சிலாபம் நோக்கி பயணித்த காரும் ஒன்றுடன் ஒன்று மோதியே விபத்துக்குள்ளாகியுள்ளன.



06

### கனடாவில் தொழில் தருவதாக

# பண மோசடி செய்த இரண்டு பேர் கைது

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கனடாவில் தொழில் வாய்ப்பைப் பெற்றுத் தருவதாகக் கூறி பண மோசடியில் ஈடுபட்ட இரு நபர்களை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் விசேட புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

கொழும்பு,பொரளை பிரதேசத்தில் செயற்பட்டு வரும் முகவர் நிறுவனமொன்று கனடாவில் தொழில் வாய்ப்பைப் பெற்றுத் தருவதாக கூறி 10 இலட்சம் ரூபாவை பெற்றுக் கொண்டுள்ள போதும் வாக்குறுதியளித்தபடி தொழில் வாய்ப்பை பெற்றுத் தராமல் ஏமாற்றியுள்ளதாக நபர் ஒருவர் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்திற்கு முறைப்பாடு செய்துள்ளார்.

06

# ஜனாதிபதித் தேர்தலுக்காக 1,000 கோடி ரூபா ஒதுக்கீடு

## நிதி அமைச்சு அறிவித்துள்ளது




ஜனாதிபதித் தேர்தலுக்காக (10 பில்லியன்) 1,000 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் செலவினங்களுக்காக தேவைப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நிதியை விடுவிக்க முடியுமென நிதி அமைச்சின் சிரேஷ்ட பேச்சாளரொருவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், நாளை 17ஆம் திகதி தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வருகைதருமாறு நிதி அமைச்சின் அதிகாரிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவரின் அறிவுறுத்தலுக்கமைய இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தலுக்கான நிதியை விடுவித்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

### வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு செல்வோர்

# கடவுச்சீட்டு, பணம் கொடுக்கும் முன் முகவரைப் பற்றி அறிவது அவசியம்


## SLBFE பொதுமக்களுக்கு அறிவுறுத்தல்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கு செல்வோர் அது தொடர்பான முகவர்களுக்கோ அல்லது நபர்களுக்கோ கடவுச்சீட்டை அல்லது பணத்தை வழங்குவதற்கு முன்பதாக அந்த நிறுவனம் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதா? என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு அந்த பணியகம் மீண்டும் மக்களை அறிவுறுத்தியுள்ளது.

அவ்வாறு அந்த நிறுவனங்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தால் அந்த வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையம் தொழில் கோரல் உத்தரவைப் பெற்றுள்ளதாக என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும் என்றும் அந்த பணியகம் பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளது.

அதற்கு வசதியாக 1989 என்ற துரித தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பை மேற்கொண்டு தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அல்லது பணியகத்தின் உத்தியோக பூர்வ இணையதளம் ஊடாகவும் அது தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அந்த பணியகத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஆடி மாதம் 01ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 முஹர்ரம் பிறை 09

## குறள் தரும் சிந்தனை



கெடுவாக வையாது உலகம் நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு

*நடுவுநிலைமை தவறாமல் அறவழியில் வாழ்கிற ஒருவருக்கு அதன் காரணமாகச் செல்வம் குவியாமல் வறுமை நிலை ஏற்படுமேயானால் அவரை உலகம் போற்றுமே தவிரத் தாழ்வாகக் கருதாது.*

# மின்கட்டண குறைப்பின் பலன்கள் மக்களுக்குக் கிடைக்க வேண்டும்

இன்றைய நவீன உலகில் அத்தியாவசிய சேவைகளில் ஒன்றாக மின்சாரம் விளங்குகின்றது. இந்நாட்டில் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்காக தண்ணீர், காற்று, டீசல், நிலக்கரி ஆகியன பயன்படுத்தப்படுகின்றன. இம் மின்னுற்பத்திக்கான செலவும் மிக அதிகமாகும்.

அதேநேரம் அரச மின்னுற்பத்தி நிலையங்களின் மின்னுற்பத்தி போதியதாக இல்லாத சமயங்களில் அதிக விலைக்கு தனியார் நிறுவனங்களிடமிருந்து மின்சாரத்தைக் கொள்வனவு செய்து குறைந்த கட்டணத்தில் மக்களுக்கு பெற்றுக் கொடுக்கும் திட்டத்தையும் இலங்கை மின்சார சபை முன்னெடுக்கின்றது. இடையூறுகள் இன்றி மக்களுக்கு தொடராக மின்சாரத்தைப் பெற்றுக் கொடுப்பதே இந்நடவடிக்கையின் நோக்கமாக உள்ளது.

நாடு 2022 இல் முகம்கொடுத்த பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து மின்னுற்பத்திக்கான செலவு பெரிதும் அதிகரித்ததோடு, மின்பாவனைக் கட்டணத்தையும் உயர்த்தும் நிலையும் ஏற்பட்டது. அதன் விளைவாக மின்பாவனையாளர்கள் அசௌகரியங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் உள்ளானார்கள்.

இருந்த போதிலும் நாட்டின் அன்றைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு மின்பாவனையாளர்களில் பெரும்பாலானவர்கள் பொறுமை காத்தார்கள். அந்த பொருளாதார வீழ்ச்சியில் இருந்து கட்டம் கட்டமாக மீட்சி பெற்ற நாடு, தற்போது நம்பிக்கை அளிக்கும் வகையில் முன்னேற்றப் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கிறது. அதன் பயனாக, நாடு அடைந்து கொள்ளும் பொருளாதார ரீதயிலான பிரதிபலன்களை மக்களுக்கு பெற்றுக் கொடுக்கவும் வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தப் பின்னணியில்தான் அத்தியாவசியப் பொருட்கள் அடங்கலான பொருட்களின் விலைக்குறைப்பு, சம்பள உயர்வு, கட்டணங்கள் குறைப்பு என நாட்டு மக்களுக்கு நன்மை அளிக்கும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் இலங்கையின் பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் சிபாரிசுகளுக்கு அமைய இன்று முதல் இலங்கை மின்சார சபை மின்கட்டணத்தைக் குறைக்க நடவடிக்கை எடுத்திருக்கிறது. இதற்கமைய இம்மின்கட்டணக் குறைப்பு 22.5 சதவீதமாக அமையும் என்று பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்திருக்கிறது.

இக்கட்டணக் குறைப்பின் ஊடாக வீடுகள், மதவழிபாட்டுத் தலங்கள், ஹோட்டல்கள், கைத்தொழிற்சாலைகள், பொது மற்றும் அரச நிறுவனங்கள் என்பன நன்மை பெற்றுக் கொள்ளும். இது பாரியதொரு மின்கட்டணக் குறைப்பு மாத்திரமல்லாமல் மின்பாவனையாளர்களுக்கு பெரிய நிவாரணமாகவும் மின்கட்டணக் குறைப்பை எதிர்பார்த்திருந்த மக்களுக்கு ஆறுதலான நடவடிக்கையாகவும் விளங்கும் என்பதுதான் சமூகநல ஆர்வலர்களின் கருத்தாகும்.

இப்புதிய மின்கட்டணத் திருத்தத்தின்படி, முதல் 30 அலகுகளுக்கு ரூ. 2.00 படியும், 30 முதல் 60 வரையான அலகுகளுக்கு ரூ. 11.00 படியும், 60 முதல் 90 வரையான அலகுகளுக்கு ரூ. 12.00 படியும், 90 முதல் 120 வரையான அலகுகளுக்கு ரூ. 20.00 வரையிலும் மின்கட்டணம் குறைக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மஞ்சுள பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்த மின்கட்டணக் குறைப்பிற்கு இணங்க வீட்டுப் பாவனைக்கான மின்கட்டணம் 27 வீதத்தினாலும் மதவழிபாட்டுத் தலங்களுக்கான மின்கட்டணம் 30 வீதத்தினாலும் மற்றும் உணவகங்கள், கைத்தொழில் நிறுவனங்களுக்கான கட்டணம் 25 வீதத்தினாலும் குறைவடைவதாக ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்நிலையில் மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, இம் மின்கட்டணக் குறைப்பின் ஊடாக நாட்டிலுள்ள 68 இலட்சம் மின்பாவனையாளர்களில் சுமார் 40 இலட்சம் பேர் பயனடைவார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்நாட்டில் நான்கு மாதங்களுக்கு ஒரு தடவை மின்கட்டணம் திருத்தம் செய்யப்படும் கொள்கை நடைமுறையில் உள்ளது. அதற்கு அமைச்சரவை அங்கீகாரமும் வழங்கியுள்ளது. இக்கொள்கைக்கு அமையவே தற்போது இம்மின்கட்டணத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றது.

ஆகவே இம்மின்கட்டணத் திருத்தத்தின் பிரதிபலன்கள் நாட்டின் அனைத்துத் தரப்பினருக்கும் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும். ஏற்கனவே மின்கட்டண அதிகரிப்பின் போது மின் பயன்பாட்டுடன் சம்பந்தமான பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளும் அதிகரிக்கப்பட்டன. அதனால் தற்போதைய விலைக்குறைப்புக்கு அமைய அவ்வாறான பொருட்கள், சேவைகளின் விலைகளும் குறைக்கப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அதுவே மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. அவ்வாறான நடவடிக்கைகள் மக்களின் வாழ்வாதார சுமையைக் குறைப்பதற்கு பெரிதும் பங்களிக்கும்.

editor.tkn@lakehouse.lk

# சாவகச்சேரி வைத்தியசாலை குறைகளை தீர்ப்பதற்கான வழிவகைகள் எவை?




சாவகச்சேரி வைத்தியசாலை ஏன் அபிவிருத்தி செய்யப்படவில்லை என்பதைப் பற்றி கடந்த காலத்தில் சுகாதார அமைச்சின் திட்டமிடல் பிரிவின் சிரேஷ்ட மருத்துவ நிபுணராக கடமை ஆற்றியவர் என்ற வகையில் ஆராய்ந்து கொண்டிருக்கிறேன்.

இரு தசாப்தங்களுக்கு முன்னரேயே சாவகச்சேரி வைத்தியசாலை ஆதார வைத்தியசாலை வகை B என அடையாளப்படுத்தப்பட்டு இருந்தது. வகை பி வைத்தியசாலை ஒன்றில் இருக்க வேண்டிய அடிப்படை வசதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள வசதிகளில் முக்கியமாக சத்திரசிகிச்சைக் கூடம், மற்றும் அதி தீவிர சிகிச்சை பிரிவு ஆகிய பௌதீக மற்றும் சத்திர சிகிச்சை நிபுணர் ஆளணி வளங்கள் ஆகியன சாவகச்சேரி வைத்தியசாலையில் காணப்படவில்லை என்பது முக்கியமான குறைபாடாக உள்ளது. இவை அனைத்தையும் முழுமையாக இயக்குவதற்கு தற்போதுள்ள ஆளணியான 25 மருத்துவர்கள் போதாது என்பதையும் நாம் கருத்தில் எடுக்க வேண்டும்.

எவ்வாறு இந்த இழிநிலை ஏற்பட்டது என்று ஆராய்ந்தால், 2009 வரை போர் இடம்பெற்ற காலத்தில் வடபகுதி வைத்தியசாலைகள் அனைத்தும் அபிவிருத்தி செய்யப்படாமல் இருந்தன என்பதும், அதன் பின்னர் பிரதேச பாராளுமன்ற உறுப்பினர்கள் அபிவிருத்திக்குரிய அழுத்தங்களை பிரயோகிக்காததால் 2010_2018 வரை மந்தகதியிலேயே அபிவிருத்திகள் இடம்பெற்றன என்பதும் வெளிப்படை.

தற்போது பெருமளவு சத்திரசிகிச்சை நிபுணர்கள், மயக்கமருந்தியல் நிபுணர்கள் மற்றும் குழந்தை வைத்திய நிபுணர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ள நிலையில், பெரிய வைத்தியசாலைகளே சத்திரசிகிச்சை நிபுணர்கள் பற்றாக்குறை காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், சாவகச்சேரிக்குக் குறித்த நிபுணர்களை நியமிப்பது குதிரைக்கொம்பாகவே இருக்கப் போகிறது.

எனவே இந்நிலை சாவகச்சேரி வைத்தியசாலைக்கு ஏற்பட்டதற்கு, தென்மராட்சியில் இருந்து வெளியேறிய மருத்துவர்களும் ஒரு காரணம் என்பதை அவர்கள் நேர்மையாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

கடந்த காலங்களில் தவறான முகாமைத்துவம் மூலம் நோயாளிகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டு இருப்பதாகக் கூறப்படுவது தொடர்பில் நோக்குவோமாயின், அதற்குரிய நிவாரணம் முகநூல் பதிவுகளினால் கிடைக்கப் போவது இல்லை.

காலி முதலான தென்பகுதியில் வசிக்கும் வைத்தியர்களைக் கட்டாயப்படுத்தி சாவகச்சேரியில் வேலை செய்ய வைத்தால், அவர்களும் மனிதப் பிறவிகளாக வீட்டுக்குப் போகத் துடிப்பார்கள். அதுதவிர, சாவகச்சேரியின் அபிவிருத்தியில் அவர்களுக்கு ஆர்வமும் இருக்காது. மக்களுக்கு வைத்தியர்களோடு சரளமாக உரையாடுவதற்கும் வாய்ப்பில்லை.

தென்மராட்சியைச் சேர்ந்த பல வைத்தியர்களும், வைத்திய நிபுணர்களும் வெளிநாட்டில் வசதியாக இருந்துகொண்டு, 'நாங்கள் 50 பவுண் அனுப்பினோம், 100 டொலர் அனுப்பினோம் ஏன் இன்னமும் வைத்தியசாலையை அபிவிருத்தி செய்யவில்லை?' என்று சமூக ஊடகங்களில் கேட்பதை விடுத்து, உங்களுடைய ஊர் வைத்தியசாலையில் சிறிது காலம் சேவை செய்யலாம் அல்லவா?

குறிப்பாக இலங்கைப் பல்கலைக்கழகங்களில் இலவச மருத்துவக் கல்வியைப் பயின்ற பின்னர் இப்போது வெளிநாடுகளில் வேலை செய்யும் தென்மராட்சியை சேர்ந்த மருத்துவர்களும் சத்திரசிகிச்சை நிபுணர்கள் உள்ளிட்ட விசேட வைத்திய நிபுணர்களும் சிறிது காலமாவது சாவகச்சேரியில் வேலை செய்ய முன்வர வேண்டும்.

ஏனைய மாவட்டங்களில் யுத்த காலத்திலும் அதற்கு பின்னரும் பல வைத்தியர்கள் மற்றும் மருத்துவ நிபுணர்கள் தமது சொந்த மண்ணை அபிவிருத்தி செய்வதற்காக வெளிநாட்டில் இருந்து வந்து சுகாதார அமைச்சின் அனுமதியுடன் அரசாங்க வைத்தியசாலைகளில் வேலை செய்திருக்கிறார்கள். எனவே நான் முன்மொழிவது புதிய ஒரு விடயம் அல்ல.

தென்மராட்சியைச் சேர்ந்த வெளிநாட்டில் வேலை செய்யும் வைத்தியர்கள் மூன்று மாதம் ஆவது சாவகச்சேரியில் வந்து வேலை செய்தால் தற்போதைய நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையை அதற்குரிய வசதிகளுடன் விரைவாக இயங்க வைக்க முடியும்.

இதை விடுத்து 'கடந்த காலத்தில் என்ன நடந்தது?' என்று மற்றவர்களைக் குற்றம் சாட்டிக் கொண்டிருப்பதால் எந்தப் பலனும் கிடைக்கப் போவதில்லை.

தற்போது உள்ள கேள்வி சாவகச்சேரியை சேர்ந்த வெளிநாட்டில் உள்ள வைத்தியர்கள் எனது கோரிக்கையை சவாலுக்கு உட்படுத்தப் போகிறார்களா அல்லது ஏனைய மாவட்ட வைத்தியர்களை போலத் தியாகத்தை செய்ய முன்வருவார்களா என்பதுதான்!



**டொக்டர் முரளி வல்லிபுரநாதன்...**
*(சமுதாய மருத்துவ நிபுணர்)*

# சித்தாண்டியில் வசதி குன்றிய குடும்பத்துக்கு தனவந்தரின் நிதியுதவியில் புதியதொரு வீடு




மட்டக்களப்பு மாவட்டம் சித்தாண்டியில் அடிப்படை வசதிகளற்ற வீடொன்றில் வசித்து வந்த குடும்பத்தினரின் நலன் கருதி புதிய வீடொன்றை நிர்மாணித்துக் கொடுக்கும் முகமாக அடிக்கல் நடப்பட்டது.

சித்தாண்டி_3 ஐச் சேர்ந்த 3 பிள்ளைகளைக் கொண்ட மா.செல்லத்துரை என்பவரின் குடும்பத்தினருக்கு இவ்வுதவி வழங்கப்பட்டுள்ளது. இவர்களது வாழ்வாதார நிலைமை தொடர்பாக சமூக வலைத்தளமொன்றில் விடயம் வெளிவந்ததை அறிந்த மாத்தளையைச் சேர்ந்த தனியார் நிறுவனமொன்றின் பணிப்பாளர் 1.4 மில்லியன் ரூபா செலவில் இந்த மனிதநேய உதவியினை இக்குடும்பத்தினருக்கு வழங்கியுள்ளார். இவ்வீடு கட்டுவதற்கான பொறியியல் நடவடிக்கைகளை இலங்கை இராணுவத்தின் கட்டட நிர்மாணப் பிரிவினர் இலவசமாக மேற்கொள்ளவுள்ளனர். கிழக்கு கமாண்டர் பாதுகாப்புப் படை மேஜர் ஜெனரல் எஸ்.ஏ.குலதுங்கவின் ஒருங்கிணைப்பின் கீழ் 23 ஆவது காலால் படைப்பிரிவு தளபதி மேஜர் ஜெனரல் டபிள்யு. பி.காரியவசம், பிரிகேடியர் ஆ.பி.எஸ்.பிரசாத் ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ் 4 ஆவது இராணுவப் படைப்பிரிவின் கட்டளை அதிகாரியான மேஜர் எஸ்.பி.ஜ.எச். சேனநாயக்கவின் மேற்பார்வையில் இப்பணி மேற்கொள்ளப்படுகின்றது.

சகல வசதிகளுடனும் கூடிய வீடொன்றை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நடப்பட்டது. இந்நிகழ்வில் 232 ஆவது படைப்பிரிவின் பிரிகேடியர் பிரசாத் சந்துனு பிரதம அதிதியாக கலந்து கொண்டு அடிக்கல்லை நாட்டி வைத்தார்.செங்கலடி பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

**க.ருத்திரன்...**
*(பாசிக்குடா நிருபர்)*

# பரிஸ் ஒலிம்பிக்ஸ் இற்கு பதிலாக ரஷ்யாவில் பிரிக்ஸ் போட்டி

2024 ஒலிம்பிக் போட்டிகளிலிருந்து ரஷ்யாவும், அதன் ஆதரவு நாடுகளும் விலக்கப்பட்டுள்ள நிலையில், கசானில் நடந்த பிரிக்ஸ் (BRICS) விளையாட்டுப் போட்டிகளில் பெருமளவு நாடுகள் பங்கேற்றுள்ளன.

கசானில் ஆரம்பமான பிரிக்ஸ் விளையாட்டுப் போட்டிகள் கடந்த ஜூன் 23இல் நிறைவடைந்தன. போட்டிகளின் முடிவில் பதக்கப் பட்டியலில் ரஷ்யா முன்னிலை பெற்றுள்ளது.

ரஷ்ய விளையாட்டு வீரர்கள் 173 தங்கம், 101 வெள்ளி, 69 வெண்கலம் என மொத்தம் 343 பதக்கங்களை குவித்தனர். பெலாரஸ் 32 தங்கம், 56 வெள்ளி, 68 வெண்கலப் பதக்கங்களையும், சீனா 17 தங்கம், 17 வெள்ளி, 12 வெண்கலப் பதக்கங்களையும் பெற்றன.

தெற்கு ரஷ்யாவில் உள்ள Tatarstan குடியரசின் தலைநகரான கசான் நகரில் ஜூன் 23 வரை நடந்த இரண்டு வார நிகழ்வுகளில் ஏறக்குறைய 80 நாடுகள் பங்கேற்றன. பிரிக்ஸ் விளையாட்டுப் போட்டியின் ஐந்தாவது நிகழ்வாக, இந்த அமைப்பை உருவாக்கிய நாடுகளை விட பல நாடுகளை உள்ளடக்கி நடந்துள்ளது.

அல்ஜீரியா, பஹ்ரைன், பங்களாதேஷ், பெலாரஸ், பொலிவியா, கியூபா, கஜகஸ்தான், குவைத், பாகிஸ்தான், செனகல், தாய்லாந்து, வெனிசுலா, வியட்நாம் மற்றும் ஏமன் ஆகிய மொத்தம் 15 நாடுகள் பிரிக்ஸ் அமைப்பில் சேர முறையாக விண்ணப்பித்துள்ளன.

அத்துடன் பின்வரும் நாடுகள் பிரிக்ஸ் அமைப்பில் சேர விருப்பம் தெரிவித்துள்ளன: அங்கோலா, கேமரூன், கொலம்பியா, கொமரோஸ், டிஆர் காங்கோ, காபோன், கினியாபிசாவ், கயானா, இந்தோனேசியா, ஜமைக்கா, லிபியா, மியான்மர், நிகரகுவா, கத்தார், சவுதி அரேபியா, இலங்கை, சூடான், சுரினாம், செர்பியா, சிரியா, துனிசியா, துருக்கி, சோமாலியா, உகண்டா மற்றும் ஜிம்பாப்வே.




ரஷ்யாவின் மூன்றாவது தலைநகரம் என்று அழைக்கப்படும் கசானில் இப்போட்டி நடைபெற்றது. ரஷ்யா, பிரேசில் மற்றும் சீனாவில் இருந்து அதிக எண்ணிக்கையிலான வீரர்கள் கலந்து கொண்டனர்.

அதேவேளை ரஷ்யா, பெலாரஸ் நாடுகள் 2024 ஒலிம்பிக் போட்டிகளிலிருந்து விலக்கப்பட்டமை அறிந்ததே.

ரஷ்யாவில் நடைபெற்ற பிரிக்ஸ் விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவுக்கும் பதக்கம் கிடைத்துள்ளது. மகளிர் குழுவுக்கான டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்திய அணி வெண்கலப் பதக்கம் வென்று அசத்தியுள்ளது.





இத்தகைய வெற்றிகள் மூலம் இந்தியா பதக்கப்பட்டியலில் 8வது இடத்தினை பெற்றுள்ளது. டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்திய மகளிர் அணி பதக்கம் பெற்றுள்ளது. பதக்கப் பட்டியலில் ரஷ்யா முன்னிலை பெற்றுள்ளது.

ரஷ்ய விளையாட்டு வீரர்கள் 173 தங்கம், 101 வெள்ளி, 69 வெண்கலம் என மொத்தம் 343 பதக்கங்களை குவித்தனர். பெலாரஸ் 32 தங்கம், 56 வெள்ளி, 68 வெண்கலப் பதக்கங்களையும், சீனா 17 தங்கம், 17 வெள்ளி, 12 வெண்கலப் பதக்கங்களையும் பெற்றன.

பிரேசில் ஒட்டுமொத்தமாக 5வது இடத்தையும், ஈரான் 6வது இடத்தையும், இந்தியா 8வது இடத்தையும், தென்னாபிரிக்கா 11வது இடத்தையும், எகிப்து 20வது இடத்தையும், ஐக்கிய அரபு இராச்சியம் 23 ஆவது இடத்தையும் பெற்றுள்ளன.

BRICS விளையாட்டுகளின் போது 27 விளையாட்டுகளில் மொத்தம் 387 பதக்கங்கள் வழங்கப்பட்டன, இதில் தென் மற்றும் வட அமெரிக்கா, ஐரோப்பா, ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவில் இருந்து சுமார் 3,000 விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வு குறிப்பிடத்தக்க சர்வதேச கவனத்தை ஈர்த்தது. அத்துடன் 18 நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் 750 ஊடகவியலாளர்களும் கலந்து கொண்டதாக TV BRICS தெரிவித்துள்ளது.



**ஐங்கரன் விக்கினேஸ்வரா...**

# நியமனம் பெற்ற ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வு



மேல்மாகாணத்திற்கு புதிதாக நியமனம் பெற்றுள்ள பட்டதாரி ஆசிரியர்களுக்கான தெளிவுக் கருத்துரைகளை வழங்கி, அவர்களை வரவேற்று கௌரவிக்கும் நிகழ்வொன்றினை மேல்மாகாண புத்திஜீவிகள் ஒன்றியம் கொழும்பில் நடத்தியது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட கொழும்பு மாநகர முன்னாள் முதல்வர் எம்.ஹுசைன் முகம்மது, மற்றும் கௌரவ அதிதியாகக் கலந்து கொண்ட தொழிலதிபர் ஏ.எச்.எம்.மாஹிர் ஆகியோர் பயிற்சியை நிறைவு செய்த ஆசிரியைகளுக்கு சான்றிதழைக் கையளிப்பதையும், ஒன்றியத்தின் தலைவர் முன்னாள் பரீட்சைகள் ஆணையாளர் ஏ.எஸ்.முகம்மதுவின் சேவையைப் பாராட்டி பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும் படங்களில் காணலாம். *(படங்கள்: எம்.கே.எம்.அஸ்வர், மொறட்டுவை மத்திய விசேட நிருபர்)*

# இறையியல் பார்வையில் அருங்காட்சிகள்

## நம்பிக்கை என்பது நாம் எதிர்நோக்கி இருப்பவை கிடைக்கும் என்னும் உறுதி

அருங்காட்சிகள் என்றவுடன் இரு வித்தியாசமான நிலைப்பாடுகள் நம் எண்ணத்திற்கு வருகின்றன. மக்கள் அருங்காட்சிகளை வெகுவாக நம்புகிறார்கள். அத்தகைய அருங்காட்சித் திருத்தலங்களுக்கு இலட்சக்கணக்கில் திருப்பயணம் மேற்கொள்கிறார்கள்.

அந்தக் காட்சித் தலங்களில் தங்களையே மறந்து செபிக்கிறார்கள். அக்காட்சித் திருத்தலங்களில் தரப்பட்டுள்ள செய்திகளை தங்கள் வாழ்வுச் செய்தியாக ஏற்றுக் கொள்கிறார்கள். இத்தகைய எளிய மக்களின் மனநிலை, ஆன்மீக உணர்வு ஆசிய நாடுகளில் மட்டுமன்று, 'கடவுள்' காட்சிப் பொருளாகிக் கொண்டிருக்கக் கூடிய ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளிலும் காணப்படுகிறது.



குறிப்பாக மேலை நாடுகளில் அன்னையின் அருங்காட்சித் திருத்தலங்கள் இல்லாத நாடுகளே இல்லை என்று சொல்லலாம். பேராலயங்களெல்லாம் கண்காட்சிக் கூடமாக மாறிக் கொண்டிருக்கின்ற ஐரோப்பிய நாடுகளில் லூர்துநகர், பாத்திமா போன்ற அன்னையின் காட்சித் திருத்தலங்கள் ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான மக்களை ஈர்த்துக் கொண்டிருக்கின்றன. இவ்வாறு ஏழை, எளிய மக்களின் புகலிடங்களாக அன்னையின் காட்சித் திருத்தலங்கள் காட்சி தருகின்றன.

அதே சமயம் இத்தகைய காட்சித் திருத்தலங்களும் அங்கே கொடுக்கப்பட்டுள்ள காட்சிகளும் செய்திகளும் பல சிந்தனையாளர்கள் மற்றும் இறையியலார்களிடையே பல கேள்விகளை எழுப்பியுள்ளன. விமர்சனக் கண்ணோட்டத்தோடு நோக்கும் சிந்தனையாளர்கள் நாத்திக மனப்பான்மையின் காரணமாக அவ்வாறு செய்வதில்லை.

மாறாக, விசுவாசப் பார்வையே அவர்களை சற்று விமர்சனக் கண்ணோட்டத்தோடு உற்று நோக்க வைக்கிறது. இவர்களது விமர்சனக் கேள்விகளுக்கு ஒருசில அடிப்படைக் காரணங்கள் உண்டு. அருங்காட்சிகள் பற்றிய அறிவியல் உண்மை , அருங்காட்சித் திருத்தலங்களில் காணப்படும் பரவச மூட்டும் பக்தி முயற்சிகள், விவிலிய மரியாள் பற்றிய மரியியல் ஆகியவை அவர்களை அருங்காட்சிகளை ஐயக் கண்கொண்டு பார்க்க வைக்கின்றன.எனவே அருங்காட்சிகள் பற்றிய அறிவியல், விசுவாச உண்மைகளை முதலில் அறிந்து கொள்வது அருங்காட்சிகளை உரிய விதத்தில் மதிப்பிட உதவும்.

பொதுவாக அறிவுத்திறனை வளர்த்து அறிவின் வழி உலகை உற்று உரத்தம் பண்பு கொண்டோர்க்கு காட்சி அனுபவம் கிடைக்கப்படாது. கட்சி காணும் பேறு குழந்தை உள்ளம் கொண்டோர்க்கும் காணமலேயே நம்பும் பேறு பெற்றோர்க்கும் (யோவா 20:29) கிடைக்கும் பேறு ஆகும்.

ஒழுக்க இறையியல் காட்சிகளை மறுக்கிறது. காட்சி அனுபவ இறையியல் காட்சிகளை ஏற்கிறது. காட்சி அனுபவ இறையியல் காட்சி அனுபவத்தை ஆழ்ந்த விசுவாசத்தின் கனியாகக் கருதுகிறது. நம்பிக்கை என்பது நாம் எதிர்நோக்கி இருப்பவை கிடைக்கும் என்னும் உறுதி; கண்ணுக்கு புலப்படாதவை பற்றிய ஐயமற்ற நிலை " (எபி 11:1).

மத்தேயு, லூக்கா நற்செய்தியாளாகள் குழந்தைப் பருவ நிகழ்ச்சியுரைகளில் யோசேப்பு, மரியா, சக்கரியாஸ் ஆகியோர் காட்சி கண்டதாகக் கூறுகின்றனர். இயேசு, சாத்தான் மின்னல் போல விழக் கண்டார். இயேசுவின் உருமாற்ற நிகழ்ச்சியை உடன் இருந்த திருத்தூதர்கள் கண்டார்கள்.

இயேசுவின் உயிர்ப்புக் காட்சிகளையும் அவருடைய சீடர்கள் கண்டார்கள். பவுலின் மனமாற்றம் காட்சியின் வழியாக நிகழ்ந்ததாக திருத்தூதர்பணி கூறுகிறது. புறவினத்தாருக்கும் கிறிஸ்தவம் உரியது என்ற உண்மையை கடவுள் ஒரு காட்சி வழியாக (திப 10) பேதுருவுக்கு உணர்த்துகிறார். இவ்வாறு புதிய ஏற்பாடு பல்வேறு காட்சிகள் பற்றிய உண்மையை ஏற்றுக் கொள்கின்றது.

திருச்சபையின் வரலாற்றில் பல்வேறு காலக் கட்டங்களில் இயேசு, புனிதர்களின் அருங்காட்சிகள் பல்வேறு நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இக்காட்சிகளில் அதிகம் அறிமுகமானவை மரியன்னையின் காட்சிகள். இருப்பினும், தூய மார்க்கரீத் மதியாபுக்கு இயேசு தந்த காட்சி, பிரான்சிஸ் அசிசியார் கண்ட காட்சிகள், குழந்தை தெரசா கண்ட காட்சி, புனித யோசேப்பு கொடுத்த காட்சிகள் போன்றவை பற்றியும் செய்திகள் உள்ளன. இக்காட்சிகளில் திருச்சபையில் ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தியவை மரியன்னையின் காட்சிகள் என்றால் அது மிகையாகாது. மரியன்னை கொடுத்ததாகச் சொல்லப்படும் காட்சிகள் எல்லாம் திருச்சபையால் அங்கீகரிக்கப்படவில்லை. நீண்ட ஆழ்ந்த ஆய்விற்குப் பிறகே காட்சிகள் திருச்சபையால் அங்கீகரிக்கப்படுகின்றன. காட்சிகளைப் பொறுத்தளவில் திருச்சபை தொடக்கம் முதல் மிகுந்த நிதானத்துடனும் விவேகத்துடனும் செயல்பட்டு வந்துள்ளது.

எல்.எஸ்




# இறைவனைச் சரணடைவதற்காக உலக செல்வங்களைத் துறந்த புனித ரோசாலியா

நாம் அனைவரும் பிறருக்கு அன்பை வழங்கவும் அதற்கு தங்களை தியாகம் செய்யவும் அழைப்பு விடுக்கின்றார் புனித ரோசாலியா.

ஒரு பெண் அப்போஸ்தலராக இறைவனின் அன்பிற்காக தன்னுடைய தனிமையின் சோதனைகளை ஏற்கத் தயங்காதவர் தூய ரோசாலியா என்றும் அவரின் நான்காம் நூற்றாண்டைக் கொண்டாடும் மக்கள் அனைவரும் ஏழைகள் மீதான ஆர்வமும் நற்செயல்கள் மீதான நம்பிக்கையும் கொண்டு செபத்தில் இணைந்து இவ்வாண்டை சிறப்பிக்க வேண்டும்



என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

இத்தாலியின் தூய ரோசாலியாவின் அருளீக்கம் கண்டுபிடிக்கப்பட்டதன் நான்காம் நூற்றாண்டு நிறைவையொட்டி ஜூலை 8 ஆம் திகதி தமது செய்தியில் இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார். இறைவனைச் சரணடைவதற்காக உலக செல்வங்களைத் துறந்த தூய ரோசாலியா கிறிஸ்தவர்களாகிய நாம் அனைவரும் பிறருக்கு அன்பை வழங்கவும் அதற்காக தங்களையே



தியாகம் செய்யவும் அழைப்பு விடுக்கின்றார் என்று சுட்டிக்காட்டியுள்ள திருத்தந்தை,கிறிஸ்துவின் நற்செய்தியின் சாட்சிகளாக நம்பிக்கை மற்றும் பிறரன்புப் பணிகளில் அப் புனிதையைப் போல நாமும் சிறந்து விளங்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

நம்பிக்கையுள்ள பெண்ணான புனித ரோசாலியா போன்று அனைவரும் புதிய நம்பிக்கையின் கலங்கரை விளக்கமாக இருக்க வேண்டும் என்றும் ஒரு வாழும் சமூகமாக மீட்பராம் கிறிஸ்துவிற்கு உண்மையான மற்றும் ஒளிவிடும் சான்றுகளாக இருக்க வேண்டும் என்றும் திருத்தந்தை தெரிவித்தார்,

நம்மைத் தன்னிடம் அழைக்கின்ற இணக்கம் மற்றும் அமைதியின் பலனை நம் வாழ்க்கையில் உணர்த்துகின்ற இரக்கமுள்ள தந்தையின் அரவணைப்பில் மகிழ்வைக் கண்டுணர்ந்து வாழவும் நம்பிக்கையை இழக்காது ஊக்கமின்மைக்கு இடமளிக்காது துணிவுடன் வாழவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மெரினா ராஜ்

# நல் மரணமாதா ஆலயத்தில் மடுமாதா திருவிழா






கொழும்பு புதுக்கடை நல் மரண மாதா ஆலயத்தில் மருதமடு அன்னைக்கு 23 வது வருட திருவிழா கடந்த வாரம் கொண்டாடப்பட்டது. 5ஆம் திகதி கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமானதுடன் 7ஆம் திகதி காலை திருவிழா திருப்பலி மற்றும் அதனைத் தொடர்ந்து திருச்சுரூப பவனியும் அன்னையின் திருச்சுரூப ஆசீர்வாதமும் இடம்பெற்றது. இந்திய கார்மேல் சபை குருவான அருட்பணி ஸ்டீபன் ராஜ் அடிகளாரின் தலைமையில் அருட்பணி எமார்ட், அருட்ப பணி இக்னேசியஸ், அருட்பணி சமந்த ஆகியோர் இணைந்து திருவிழா திருப்பலியை ஒப்புக்கொடுத்தமை குறிப்பிடத்தக்கது. மடுமாதா திருவிழாவில் பங்குபற்ற முடியாத கொழும்பு உயர்மறை மாவட்ட மக்களுக்காக வருடம் தோறும் இந்த திருவிழா கொண்டாடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

படங்கள் உதவி: மத்தியூ ஜேசுதாசன்

# "எனக்கு உறுதியூட்டும் இறைவனால் எதையும் செய்ய ஆற்றல் உண்டு"

நாம் வாழும் இன்றைய கால கட்டத்தில் திறமையும் சக்தியும் வாய்ந்த மனிதர்களைத் தேடிச் செல்கின்றது மனித சமுதாயம்.

திறமை மிக்க ஆசிரியர்களைத் தேடுகிறார்கள் பெற்றோர்கள் திறமை வாய்ந்த மருத்துவரை நாடுகின்றான் ஒரு நோயாளி. திறமை வாய்ந்த சமையல் கலைஞனை தேடுகின்றான் உணவக உரிமையாளன்.

திறமை வாய்ந்த ஒட்டுநரை நாடுகின்றான் ஒரு அதிகாரி.இவ்வாறு ஒவ்வொரு துறையிலும் திறமையை நாடுகின்றோம். ஆனால் திறமையானது பிறப்பிலே வந்துவிடுவதும் இல்லை. புத்தக அறிவால் நிறைவு பெறுவதும் இல்லை.

மாறாக மனிதனின் அன்றாட அனுபவத்தில் நிறைவு காண்பதுதான் திறமை. பழமொழி ஆகமம் 24 ஆம் அதிகாரம், 34 வசனங்கள் தருவது போல எந்த ஒரு செயலும் முதலில் ஞானத்தோடு திட்டமிடுவதால், அறிவோடு செயல்படுவதால், காலக்குறிகளுக்கு ஏற்றவாறு அமைப்பதால் திறமை மிக்க செயலாகும் என்று நிரூபிக்கப்படுகிறது

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஞானத்தின் இருப்பிடமாகத் திகழ்ந்த இயேசு என்ற திறமை மிக்க ஒப்பற்ற தலைவர் திறமை மிக்கவர்களைத் தேடவில்லை. ஆனால் சாதாரண, படிப்பறிவில்லா பாமரராக கடலிலே தொழில் நடத்திய மீனவர்களை அழைத்தார். தன் ஞானத்திலே பயிற்சி கொடுத்தார். ஆவியின் சக்தியிலே பலப்படுத்தினார். திறமை மிக்க சீடர்களாக உருவாக்கினார். தான் கொடுத்த நற்செய்தியை அறிவிக்க இருவர் இருவராக அனுப்பினார். நற்செய்தியை அறிவிக்க திறமை மிக்க பாத்திரங்களாக மாறினார்கள்.



சாட்சி பகரும் உண்மை வீரர்களாக மாறினார்கள். இவர்கள் ஆற்றிய அரும் பெரும் செயல்களை நற்செய்தியிலே நாம் காணலாம்.

இன்றைய நாட்களிலே இறைவன் எம்மையும் அழைக்கலாம். தனியாக அல்லது குடும்பமாக . எதற்காக? குடும்பங்களைக் கட்டி எழுப்ப அழைக்கலாம். இன்று எத்தனையோ குடும்பங்கள் பிளவுபட்டுக் கிடக்கின்றன. கணவன் மனைவிக்குள்ளே பிரிவு. பெற்றோர் பிள்ளைகளுக்குள்ளே விரிசல். திருமணத்தில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் மீறப்படுகின்றன அல்லது மறைக்கப்படுகின்றன. கணவன் குடித்து குடும்பத்தின் பொறுப்பற்ற நிலையிலே வாழும் காட்சி. அதனால் மனைவி கண்ணீர் கடலிலே தவிக்கும் காட்சி. மனைவி கணவனை மதிக்காத நிலையிலே தான் தோன்றித் தனமாக மாறும் காட்சி.

பணம், பதவி, இன்பம் இவைகளுக்கு இடம் கொடுத்து, உண்மை அன்புக்கு இடமின்றி வறண்ட பாலைவனமாக இன்று எத்தனையோ குடும்பங்கள் காட்சி தருகின்றன. இத்தகைய குடும்பங்களைக் கட்டி எழுப்ப இறைவன் உன்னையும் உன் வாழ்க்கை துணைவர், துணைவியையும் அழைக்கலாம்.

ஒரு தம்பதிகள். என்னைச் சந்தித்தபோது அவர்களின் பணி வாழ்வில் ஒன்றை என்னிடம் மகிழ்ச்சியோடு கூறினார்கள். வாரத்தில் இரண்டு நாட்கள் மாலையில் சில குடும்பங்களை நாங்கள் கணவன் மனைவியுமாக சந்திக்கின்றோம்.

இறைவன் அன்றாட வாழ்வில் எங்களுக்குச் செய்த இணையற்ற கொடைகளை எடுத்துச் சொல்லுகின்றோம். எப்படி எங்கள் வாழ்வில் துன்பங்களையும், சவால்களையும் சந்திக்கின்றோம் என்பதையும் பகிர்ந்து கொள்ளுகிறோம். நாங்கள் சந்திக்கும் குடும்பங்கள் எங்களிடம் பகிர்ந்து கொண்ட நிகழ்ச்சிகளைக் கவனத்தோடு நாங்கள் செவிமடுக்கின்றோம்.

இறுதியாக எங்களுக்குத் தெரிந்த சிறிய செபத்தால் குடும்பத்தோடு சேர்ந்து செபிக்கின்றோம்.

இது எங்களைப் பலப்படுத்துகிறது என்றும் குறிப்பிட்டார்கள்.

நீயும் உன் மனைவியும் இதற்குச் சான்றாகத் திகழலாம் அல்லவா! நீயும் உன் கணவனும் இதற்குச் சான்று பகரலாமே! என்ன தகுதி எனக்கு உண்டு? என்ன திறமை எனக்கு உண்டு என்று திகையாதே! இறைவனுக்குத் தகுதியுள்ளவர்கள் தேவையல்ல. தகுதியற்ற உன்னை தகுதியுள்ளவராக்குவார்.

உறுதியூட்டும் இறைவனால் எனக்கு எதையும் செய்ய ஆற்றல் உண்டு என்று புனித பவுல் அடிகளார் பிலிப்பியருக்கு எழுதிய மடலிலே 4ஆம் அதிகாரம் 13 ஆம் வசனத்தில் குறிப்பிடுவது போல் தேவன் உன்னை ஆற்றல் மிக்க பாத்திரமாக மாற்றுவார்.

ஆனால் ஒன்று, நீ பிற குடும்பங்களுக்கு திருத்தூதராக மாறும்போது முதலில் நீ உன் குடும்பத்திற்கு திருத்தூதராக மாறுவாய். அது உன்னைப் பலப்படுத்தும். உன் குடும்பம் நிறைவும் மகிழ்ச்சியும் பெறும்.

அருட்தந்தை முனைவர் அருள்

# இ.போ.சவுக்கு 370 புதிய நியமனங்கள்



இலங்கை போக்குவரத்து சபையில் சாரதி மற்றும் நடத்துனர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 370 பேருக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தலைமையில் கொழும்பு சம்புத்தத்வ ஜயந்தி மண்டப கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

விசேடமாக மேல்மாகாண டிப்போக்களிலுள்ள சாரதிகள் மற்றும் நடத்துனர்களின் வெற்றிடங்களுக்கே இவர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

மேல்மாகாணத்தில் பத்து வருடங்களுக்கு மேலாக பணிபுரிந்த வெளிமாவட்ட சாரதிகள் மற்றும் நடத்துனர்களை இடமாற்றம் செய்யவே இந்த புதிய சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் நியமனம் மேற்கொள்ளப்படவுள்ளது. இவர்கள் நீண்ட காலமாக இடமாற்றத்துக்காக விண்ணப்பித்திருந்தனர். இவ்வாறு இணைத்துக் கொள்ளப்படும் சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் மேல் மாகாணத்தில் மூன்று வருடங்கள் தமக்கென ஒதுக்கப்பட்டுள்ள டிப்போவில் கடமையாற்ற வேண்டுமெனவும், எந்தவொரு அரசியல் செல்வாக்கினாலும் மாற்றம் செய்யப்படமாட்டாதெனவும் அமைச்சர் வலியுறுத்தினார்.

# இன்றைய பலன்கள்
(16.07.2024)



**கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா**
**(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)**

**மேஷம்** :
பொதுவாழ்வில் இருப்பவர்கள் நிதானமாக செயல்படுவது நல்லது. வியாபாரம் தொழில் செய்பவர்கள் கணக்கு வழக்குகளில் கவனமாக இருக்க வேண்டும்.

**ரிஷபம்** :
எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு போட்டிகளுக்கு மத்தியில் வெற்றி கிடைக்கும்.

**மிதுனம்** :
ஆதாயம் தரும் தகவல் கிடைக்கும். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு வாடிக்கையாளர்களின் ஆதரவு பெருகும்.

**கடகம்** :
வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு எதிர்பார்த்த இலக்கை அடைய முடியாது. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சக பணியாளர்களால் பிரச்சனைகள் வரலாம்.

**சிம்மம்** :
பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு ஓய்வில்லாமல் உழைக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

**கன்னி** :
பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு புதிய பொறுப்புகள் வந்து சேரும். வியாபாரம் தொழில் செய்பவர்கள் எதிர்பார்த்த இலக்கை அடைவர்.

**துலாம்** :
பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு பிறருக்கு பொறுப்புச் சொல்வதால் பிரச்சினைகள் வரலாம். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு வேண்டிய முதலீடுகள் கிடைக்கும்.

**விருச்சிகம்** : பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு முன்னேற்ற பாதையை நோக்கி அடியெடுத்த வைப்பர். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு கணிசமான தொகை கைகளில் புரளும்.

**தனுசு** :
வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு ஆலோசனை கைகொடுக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் மட்ட அதிகாரிகளால் நன்மை கிடைக்கும்.

**மகரம்** :
விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்து இணைவர். தொழில் சீராக நடைபெறும். பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு முக்கிய பிரமுகர்களின் சந்திப்பால் முன்னேற்றம் கிடைக்கும்.

**கும்பம்** :
பொழுது பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு புது முயற்சிகளை யோசித்து செய்வது நல்லது. வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு தொழில் போட்டி அதிகரிக்கும்.

**மீனம்** :
தன விரயம் அதிகரிக்கும். அதனால் பொது உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயிர் அதிகாரிகள் முக்கியத்துவம் கொடுப்பர்.

## ஆனைமடு ஜயசூரிய வித்தியாலய...

குறித்து ஜனாதிபதியிடம் தெரிவித்தனர். பாடசாலைக்கு குடிநீர் வசதிகளை வழங்கும் நீராதாரம் மிகவும் உப்புத்தன்மை கொண்டதாக காணப்படுவதால், தற்போது கடற்படையினரால் நிர்மாணிக்கப்பட்டு வரும் ‘RO Plant’ கட்டமைப்பை துரிதமாக நிர்மாணித்து தருமாறு மாணவர்கள் விடுத்த கோரிக்கை தொடர்பில் கவனம் செலுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதற்குத் தேவையான பணிகளை துரிதப்படுத்துமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

அத்துடன், பாடசாலைக்கு ஸ்மார்ட் வகுப்பறையைப் பெற்றுக்கொள்ளல், கணனிகள், அழகியல் பிரிவுக்குரிய கட்டடத்துக்கான தேவை என்பன தொடர்பில் மாணவர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் நிறைவேற்றப்படுமென ஜனாதிபதி உறுதியளித்தார்.

காட்டு யானைகளின் அச்சுறுத்தல்கள் மற்றும் சிரமங்களுக்கு மத்தியில் கல்வியைத் தொடரும் ஆனைமடு ஜயசூரிய மகா வித்தியாலய மாணவர்கள் சிறந்து விளங்குவதைப் பாராட்டிய ஜனாதிபதி, அவர்களின் எதிர்கால கல்விப் பணிகள் சிறக்க தனது ஆசிர்வாதத்தையும் தெரிவித்தார்.

## இலங்கையில் தாயும்...

அகால மரணமடைந்துள்ளார். மகன் மரணமடைந்த அதே தினத்திலேயே தாயாரும் (68 வயது) இலங்கையில் மரணமடைந்துள்ளார்.

மகனின் இறுதிக் கிரியைகள் நேற்று மதியம் 12:00 மணியளவில் மெல்பேர்னில் நடைபெற்றது. தாயாரின் இறுதி கிரியைகள் நேற்று மாலை 5.00 மணிக்கு களனி, பிலப்பிட்டிய மயானத்தில் நடைபெற்றது.

## வெளிநாட்டமைச்சர்...

2023 ஆண்டு முதல் ருமேனியாவின் Bucharest (Bucharest, in southern Romania) நகரில் செயற்பட ஆரம்பித்த புதிய இலங்கைத் தூதரகத்தையும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கவுள்ளார்.

## சமய, சமூக தலைவர்கள்...

பொருளாதார சுமையிலிருந்து மக்கள் மீள்வதற்கு மேற்கொள்ளப்படும் இத்தகைய நடவடிக்கைகள் வரவேற்கத்தக்கவை.

### 2.அப்துல் சத்தார்

மின் கட்டணத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தம் நாட்டின் அனைத்து மக்களுக்கும் பாரிய நிவாரணமாகுமென குருநாகல் மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் எம். அப்துல் சத்தார் தெரிவித்துள்ளார்.

இன்று முதல் நடைமுறைக்கு வரும் மின் கட்டணக் குறைப்பு குறித்து குறிப்பிடும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்ட அப்துல் சத்தார், பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளாகி இருந்த நாடு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் மீட்சி பெற்று முன்னேற்றப் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கிறது. இதன் போது நாடு பெற்றுக்கொள்ளும் பொருளாதாரப் பிரதிபலன்களை மக்களுக்கு பெற்றுக் கொடுக்கும் திட்டத்தின் கீழேயே இக்கட்டணக் குறைப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இது நாட்டின் அனைத்து மின்பாவனையாளர்களுக்கும் பாரிய ஆறுதலாகவும் நிவாரணமாகவும் இருக்கும் என்றும் குறிப்பிட்டார்.

### 3.ஆனந்தகுமார்

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாடு இயல்பு நிலைக்கு கட்டியெழுப்பப்படும் நிலையில் மக்களின் பொருளாதார சுமைகளை குறைப்பதே ஜனாதிபதியின் நோக்கமாகும்.

நாட்டில் தற்போது பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் மின்சாரம் உள்ளிட்ட மக்களுக்கான அத்தியாவசிய தேவைகள் தொடர்பில் கவனம் செலுத்தி ஜனாதிபதி பல முக்கிய நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றமைபாராட்டத்தக்கது.

### 4.குமரகுருபரன்

அதிகரித்து வந்த நுகர்வோர் விலைச்சுட்டெண் பாதிப்பிலிருந்து மக்களை மீட்கும் வகையில் ஜனாதிபதி மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் பாராட்டத்தக்கவை.

எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களுக்கு கியூ வரிசை காணப்பட்ட நிலைமை மாற்றமடைந்து மக்கள் பொருளாதார சுமைகளிலிருந்து மீள்வதற்காக பல்வேறு நடவடிக்கைகளை ஜனாதிபதி மேற்கொண்டுள்ளமை வரவேற்கத்தக்கது.

எனினும் அரசியலில் காழ்ப்புணர்வு கொண்டவர்கள் இது தேர்தலுக்கான உபாயம் என கூறினால் அதை ஏற்றுக் கொள்ள முடியாது. இவ்வாறான நடவடிக்கைகளுக்கு திறமை வேண்டும், அந்த திறமை ஜனாதிபதியிடமே காணப்படுகிறது.

## பொருளாதார நெருக்கடியில்...

ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். இந்தியாவிலுள்ள இந்து நாளிதழுக்கு வழங்கிய செவ்வியிலேயே பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். யுத்தத்தின் பின்னர் பொருளாதாரம் மீண்டும் முன்னேற்றப்பாதைக்கு திரும்பிய போதிலும் அதிகரித்த கடன்கள் காரணமாகவும் வெளிநாடுகளிடமிருந்து பெற்ற கடன்களை திருப்பி செலுத்த முடியாததாலும் இலங்கை சில வருடங்களுக்கு முன்னர் பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டது.

எரிபொருள் நெருக்கடி மக்களை பாதித்தது. இலங்கை மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டது. இதன் போது இந்தியா பாரிய நிதியுதவியை இலங்கைக்கு வழங்கியது. தக்கதருணத்தில் இந்தியா வழங்கிய உதவிகள், ஆதரவு காரணமாக இலங்கையால் இந்த நெருக்கடியை கையாள முடிந்த்தாகவும் தெரிவித்த ரவூப் ஹக்கீம் எம்.பி, இதற்காக இலங்கை என்றும் இந்தியாவுக்கு நன்றிக் கடன்பட்டதாக காணப்படுமென தெரிவித்துள்ளார். திருச்சி விமான நிலையத்தில் கருத்து தெரிவித்துள்ள அவர், இலங்கையில் காற்றாலை மின்உற்பத்தி திட்டத்தை முன்னெடுப்பதற்காக இந்தியாவுடன் இலங்கை உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மூன்றாவது தடவையாக நரேந்திரமோடி இந்திய பிரதமராக தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறித்து கருத்து தெரிவித்த அவர், இந்தியாவில் யார் அதிகாரத்துக்கு வந்துள்ளார் என்பதை விட ஜனநாயகம் வெற்றிபெற்றுள்ளதாக தான் கருதுவதாக தெரிவித்துள்ளார்.

## ஐ.ம.ச புதிய தவிசாளராக...

அதேவேளை, சரத் பொன்சேக்கா வகித்து வரும் களனி தொகுதி அமைப்பாளர் பதவிக்கு பாராளுமன்ற உறுப்பினர் நாலக கொடஹேவா நியமிக்கப்படவுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. இதற்கமைய, ஐக்கிய மக்கள் சக்தியின் சகல பதவிகளிலிருந்தும் முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேக்கா நீக்கப்படவுள்ளார்.

## திருமலை வர்த்தகர்...

திருகோணமலை – அலஸ் தோட்ட பகுதியை சேர்ந்த 41 வயது நபர் ஒருவரே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளார்.

காணாமல்போன வர்த்தகர் இறுதியாக மொரவெவ பகுதிக்கு வந்ததாக கிடைத்த தகவலின்படி விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், இவர் பயணித்ததாக கூறப்படும் வாகனம் கடந்த 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 2.45 மணியளவில் வில்கம் விகாரைப்பகுதியை கடந்து பயணித்துள்ளதை சி.சி.ரி.வி காணொளி மூலம் தெரியவந்துள்ளது.அவரது வாகனம் மொராவெவ பகுதிக்கு வராத்தால் இடைப்பட்ட காட்டுப்பகுதியில் தேடுதல் நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போதே பன்மதவாச்சி காட்டுப் பகுதியில் இவர் பயணித்ததாக கூறப்படும் வாகனத்துடன் எரிந்த நிலையில் சடலம் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி வேட்பாளராக...

வீதியை மக்கள் வசம் ஒப்படைக்கும் நிகழ்வு போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.தொடர்ந்து பேசிய அவர், விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரால் திருகோணமலை மாவட்டத்தில் முதன் முதலாக வீதியை திறந்து வைக்கும் வாய்ப்பு மொறவெவ பிரதேசத்துக்கு கிடைத்ததில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ காலத்தில் எமது பிரதேசத்துக்கு இத்திட்டம் வழங்கப்பட்டது, ஆனால் பொருளாதார நெருக்கடி மற்றும் போராட்டத்தினால். , அந்தத் திட்டங்கள் அனைத்தும் நிறுத்தப்பட்டன, திருகோணமலை மாவட்டம் ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதால் இம்மாவட்டத்துக்கான ஒதுக்கீடுகளை வழங்குவதில் பாரிய சிக்கல்கள் காணப்படுகின்றன. எனவே, ஒதுக்கீடுகள் மற்றும் திட்டங்களை வழங்கும் போது ஆளும் கட்சியை பிரதி நிதித்துவப்படுத்தும் முன்னாள் ஜனாதிபதிகளின் முன்மொழிவுகளுக்கு விசேட கவனம் செலுத்தி முன்னுரிமை வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

## நீரியல் வள மாநாட்டில்...

யிலான குழுவினர் இந்தியா புறப்பட்டுச்சென்றுள்ளனர். குழுவில் நெக்டா (NAQDA) இலங்கை தேசிய நீர்வேளாண்மை அபிவிருத்தி அதிகார சபையின் வடமாகாண இணைப்பாளர் நிருபராஜ், நாரா (NARA) தேசிய நீரியல் வளங்கள் ஆய்வு மைய பணிப்பாளர் சபை முக்கியஸ்தர்கள் சிலரும் சென்றுள்ளனர்.

## மின் கட்டணம் மேலும்...

அந்த பரிந்துரைக்கு அமைய 0 முதல் 30 வரையான மின் அலகு ஒன்றிற்கான கட்டணம் 2 ரூபாவினாலும் 30 முதல் 60 வரையான அலகு ஒன்றிற்கான கட்டணம் 11 ரூபாவாலும் குறைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 60 முதல் 90 வரையான அலகு ஒன்றிற்கான கட்டணம் 12 ரூபாவினாலும் 90 முதல் 120 வரையிலான அலகு ஒன்றிற்கான கண்டனம் 20 ரூபாவாலும் குறைக்கப்பட்டுள்ளதாக பொது பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்த மின் கட்டண குறைப்பிற்கு இணங்க வீட்டுப் பாவனைக்கான மின் கட்டணம் 27 வீதத்தினாலும் மத வழிபாட்டுத் தலங்களுக்கான மின் கட்டணம் 30 வீதத்தினாலும் மற்றும் உணவகங்கள்,கைத்தொழில் நிறுவனங்களுக்கான கட்டணம் 25 வீதத்தினாலும் குறைவடைவதாக அந்த ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

புதிய கட்டணக் குறைப்புடன் பொது பயன்பாட்டு ஆணைக்குழு மின்சார சபைக்கு ஏழு நிபந்தனைகளையும் விதித்துள்ளது. அதன்படி மின் பாவனையாளர்கள் கோரும் சந்தர்ப்பத்தில் மின் கட்டணப் பட்டியலை வழங்குவதற்கு அறிவுறுத்தியுள்ளது.

## கிழக்கு பல்கலைக்கழக மருத்துவபீட...

உள்ளக வீதியை நிர்மாணித்துள்ளது. பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட மாணவர்கள், போக்குவரத்துக்காக தாம் எதிர்நோக்கி வந்த நீண்ட காலப் பிரச்சினையை தீர்த்து வைக்குமாறு கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தனிடம் விடுத்த வேண்டுகோளின் அடிப்ப

## பண மோசடி... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

அந்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணை நடத்தப்பட்டுள்ளதுடன் சம்பந்தப்பட்ட நிறுவனம் அதிகாரிகளால் முழுமையான சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனம் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் உத்தியோகபூர்வ அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக நடத்தப்பட்டு வந்த வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையம் என்றும் அதன் போது உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதனையடுத்து மேற்படி முகவர் நிறுவன உரிமையாளர் உட்பட இரண்டு நபர்களை அந்த அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதுடன் அவர்களை10 இலட்சம் ரூபா பிணையில் விடுவிக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

## மாரவிலயில் முட்டைலொறி... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

காரில் பயணித்தவர்கள் மாரவில தொடுவாவ பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் லொறியில் பயணித்த இருவர் பேருவளையிலிருந்து வந்தவர்கள் என்றும் தெரியவந்துள்ளது.

விபத்தில் லொறியிலிருந்த பல இலட்சம் ரூபா பெறுமதியான முட்டைகளும் வாகனங்களும் பலத்த சேதமடைந்தன. லொறிக்குள் ஏற்றப்பட்டிருந்த சுமார் ஒரு இலட்சம் அளவிலான முட்டைகளில் இரண்டு மட்டுமே எஞ்சியிருந்தன. விபத்து நடந்த உடனேயே, அங்கு கூடிய மக்கள் சிலர் விபத்தில் காயமடைந்தவர்களிருக்கும் போதே முட்டைகளை எடுத்துச் சென்றதாகவும் வாகனத்திலிருந்து வெளியே தூக்கியெறியப்பட்ட பெட்டிகளிலுள்ள முட்டைகள் உடைந்து நாசமாகியதாகவும் பிரதேச வாசி ஒருவர் தெரிவித்தார். மாரவில பொலிஸ் போக்குவரத்து பிரிவின் அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இரண்டாவது மனுவும்...

நிராகரித்துள்ளது. அத்துடன் வழக்கு செலவுக் கட்டணமாக ஐந்து லட்சம் ரூபாவை செலுத்துமாறு மனுதாரருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சட்டத்தரணியான அருண லக்சிறி உனவட்டுன என்பவர் தாக்கல் செய்த மேற்படி மனுவையே உயர்நீதிமன்றம் நேற்று நிராகரித்துள்ளது. பிரதம நீதியரசர் தலைமையிலான மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில் மேற்படி மனு நேற்று பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மனுதாரர் தமது மனுவில் அரசியலமைப்பின் 19 திருத்தச் சட்டம் சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் முறையாக அங்கீகரிக்கப்படும் வரை தேர்தல் நடத்துவதை தடை செய்யுமாறு நீதிமன்றத்தைக் கோரியிருந்தார்.

எவ்வாறாயினும் மேற்படி மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாமல் நிராகரிப்பதற்கு நேற்று உயர் நீதிமன்றம் நடவடிக்கை எடுத்தது.

அத்துடன் வழக்கு செலவுக் கட்டணமாக ஐந்து லட்சம் ரூபாவை செலுத்துமாறும் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் அதனை செலுத்த வேண்டும் என்றும் உயர்நீதிமன்றம் மனுதாரருக்கு உத்தரவிட்டுள்ளது.

## முழு இழப்பீட்டுத் தொகையையும்...

நிலாந்த ஜயவர்தன ஆகியோருக்கு உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது. அந்தத் திகதிக்கு முன்னர் அவர்கள் இழப்பீட்டுத்தொகையைச் செலுத்தத் தவறினால், தீர்ப்பின் படி செயல்படாமல் நீதிமன்றத்தை அவமதித்ததாக செப்டம்பர் 20 ஆம் திகதிக்கு முன்னர் அவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யுமாறு சட்டமாஅதிபருக்கு உத்தரவிடப்பட்டது.

அத்துடன், உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம், அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர் நிலந்த ஜயவர்தனவுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட பதினொரு அடிப்படை உரிமை மனுக்கள் மீதான தீர்ப்பை வழங்கும் போது ஏழு நீதிபதிகள் கொண்ட உயர் நீதிமன்ற குழாம் விதித்துள்ள இழப்பீட்டுத் தொகை குறித்து பரிசீலிக்க, அது தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மற்றும் பிரேரணைகள் பரிசீலிக்கப்பட்டது. பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய மற்றும் முர்து பெர்னாண்டோ, எஸ்.துரைராஜா, ஏ.எச்.எம்.டி.நவாஸ், குமுதுனி விக்கிரமசிங்க, ஷிரான் குணரத்ன மற்றும் அசல வெங்கப்புலி ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் இந்த மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

இந்த மனுக்கள் தொடர்பாக அளிக்கப்பட்ட தீர்ப்பின் மூலம் எதிர் மனுதாரர்கள் இதுவரை வழங்கிய இழப்பீடு தொகையை இதுவரை வழங்கியுள்ளார்களா? என்று நீதிபதிகள் விசாரித்தனர். முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோவின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, தமது கட்சிக்காரருக்கு வழங்குமாறு உத்தரவிடப்பட்ட நட்டஈடு தற்போது முழுமையாக வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

முன்னாள் பொலிஸ் மாஅதிபர் திரு. பூஜித் ஜயசுந்தரவின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஷியாமல் கொல்லுரே, தனது கட்சிக்காரர் தனக்கென நிர்ணயிக்கப்பட்ட 75 மில்லியன் ரூபா நட்டஈட்டில் 1.9 மில்லியன் ரூபாவை ஏற்கனவே செலுத்தியுள்ளதாக தெரிவித்தார். கடந்த வருடம் ஜூன் மாதம் 28ஆம் திகதி இந்த கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இன்று வரை எஞ்சிய தொகையை செலுத்த எந்த முயற்சியும் எடுக்கவில்லையென பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய இங்கு சுட்டிக்காட்டினார்.

நீதிபதி எஸ். துரைராஜா தெரிவிக்கையில், நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சொத்துப் பிரகடனத்தின் பிரகாரம் முன்னாள் பொலிஸ் மாஅதிபருக்கு சுமார் முப்பது அசையா சொத்துக்கள் இருப்பதாக அங்கு தெரிவித்தார். மேலும், அவரது பெயரில் 14 மில்லியன் நிலையான வைப்புத்தொகை வைத்திருப்பதை சுட்டிக்காட்டிய நீதியரசர் துரைராஜா, அந்த நிலையான வைப்புத்தொகை அல்லது சொத்துக்களை விற்று அதற்கான இழப்பீட்டை வழங்குவதற்கு ஏன் ஏற்பாடு செய்யவில்லையென சட்டத்தரணியிடம் வினவினார்.

தனது கட்சிக்காரரின் அசையா சொத்துக்களில் பெரும்பாலானவை பரம்பரை பரம்பரையாக வந்த நெற்காணிகள் என்றும் அவற்றை அதிக விலைக்கு விற்பது கடினம் எனவும் சட்டத்தரணி குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்க வேண்டிய நட்டஈடு வழங்கப்பட்டுள்ளதா? என நீதியரசர்கள் குழு வினவியது.

முன்னாள் ஜனாதிபதி சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி பைசர் முஸ்தபா, தமது கட்சிக்காரருக்கு வழங்கப்படவிருந்த 100 மில்லியன் ரூபாவில் 58 மில்லியன் ரூபாவை செலுத்தியுள்ளதாக தெரிவித்தார்.

எஞ்சிய நாற்பத்தெட்டு மில்லியன் ரூபாவை தவணையாக செலுத்த ஆறு வருட கால அவகாசம் வழங்குமாறு நீதிமன்றத்திடம் கோரினார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சொத்து அறிக்கையின் பிரகாரம் ஸ்வர்ண பூமி பத்திரத்தின் கீழ் 10 சொத்துக்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளதாக மனுதாரர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சீவ ஜயவர்தன சுட்டிக்காட்டினார். அவற்றில் ஐந்து வீடுகளுடன் கூடிய சொத்துக்கள் எனவும், அவை அனைத்தும் அவர் ஜனாதிபதியான பின்னர் பெறப்பட்டவையெனவும் ஜனாதிபதி சட்டத்தரணி குறிப்பிட்டார். மேலும், தனக்கு ஐந்து சொத்துக்கள் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சுவர்ண பூமி காணிச் சொத்தை கையகப்படுத்தியமை ஊழல் மோசடி எனவும் அது தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டுமெனவும் ஜனாதிபதி சட்டத்தரணி குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி பதவியிலிருக்கும் போது, ஒரு நபர் எப்படி இவ்வளவு சொத்துக்களை வாங்க முடியுமென அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜனாதிபதி சட்டத்தரணி பைசர் முஸ்தபா, முன்னாள் ஜனாதிபதி தனது வருமானம் முழுவதிலுமிந்து உரிய நட்டஈட்டை செலுத்தியதாக குறிப்பிட்டார். சொத்துப் பிரகடனத்தின் போது, ஒவ்வொரு வருடமும் ஒரே சொத்து பற்றிய தகவல்கள் முன்வைக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். மீதித் தொகையை செலுத்த கால அவகாசம் எடுக்கும் என்று குறிப்பிட்டுள்ளார். முன்னாள் தேசிய புலனாய்வுப் பிரிவின் தலைவர் சிசிர மெண்டிஸ் அவருக்கு செலுத்த வேண்டிய அனைத்துப் பணத்தையும் செலுத்தி விட்டார் என அவரது சட்டத்தரணி தெரிவித்தார்.

மாணவர்களின் எதிர்காலம் கருதி செயற்படும்

# ஜனாதிபதி ரணிலுக்கு எப்போதும் நன்றியுள்ளவர்களாக இருப்போம்

## புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வில் ஆளுநர் தெரிவிப்பு

கரவெட்டி தினகரன் நிருபர்





நாட்டிலுள்ள வறிய குடும்பங்களை சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு, ஜனாதிபதியின் எண்ணக்கருவிற்கு அமைய, புலமைப்பரிசில் வழங்கும் தேசிய திட்டத்தின் கீழ், கிளிநொச்சி மாவட்டத்திற்கான நிகழ்வு கடந்த ஞாயிற்றுக் கிழமையன்று (14/07/2024) நடைபெற்றது. கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இரண்டு கல்வி வலயங்களிலும் இருந்து தெரிவுசெய்யப்பட 662 மாணவர்களுக்கு இதன்போது புலமைப்பரிசில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், ஜனாதிபதியின் மேலதிக சிரேஷ்ட செயலாளர் சமன் பந்துசேன, வட மாகாண பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர், கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர், கல்வித் திணைக்கள அதிகாரிகள், பாடசாலை மாணவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் உரையாற்றிய வடக்கு மாகாண ஆளுநர்,

"இலவச கல்வியை வழங்கும் நாடுகளில் இலங்கை முன்னிலையில் உள்ளது. கொவிட் பெருந்தொற்று, பொருளாதார நெருக்கடி, இயற்கை அனர்த்தம் என நாடு நெருக்கடியான சூழ்நிலையில் காணப்பட்ட போதும், இலவச கல்வி மற்றும் மருத்துவ சேவையை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றது. ஜனாதிபதி நிதியமானது பல்வேறு சேவைகளை வழங்கி வருகிறது. இலவச மருத்துவ சேவைக்கு அப்பால், கடுமையான நோய்களுக்கு சிகிச்சை பெறுவதற்கான நிதியை, வழங்கி வருகிறது. மாணவர்களுக்கு இலவச கல்வி வழங்கப்படுகிறது.

பல்கலைக்கழக மாணவர்களுக்கான மஹாபொல புலமைப்பரிசில் வழங்கப்படுகிறது.

இந்த செயற்பாடுகளை தவிர பாடசாலை மாணவர்களின் நாளாந்த கற்றல் செயற்பாடுகளுக்கு உதவும் வகையில் ஜனாதிபதியால் இந்த புலமைப்பரிசில் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் பல சிக்கல்களுக்கு மத்தியிலும், மாணவர்களின் எதிர்காலம் கருதி ஜனாதிபதி இவ்வாறான தீர்மானத்தை மேற்கொண்டுள்ளமை தொடர்பில் மாணவர்களும், பெற்றோர்களும் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும் எனத் தெரிவித்தார்



தமிழீழ விடுதலை இயக்கத்தின் (டெலோ) தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதனின் மன்னார் அலுவலகத்திற்கு நேற்று (15) எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச விஜயம் செய்து கலந்துரையாடினார்.

நவாலியில்

## தமிழ்ச்சங்கத்தின் ஆடிப்பிறப்பு விழாவும் சோமசுந்தரப் புலவர் நினைவரங்கமும்



க. சோமசுந்தரப் புலவர்

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் நடத்தும் ஆடிப்பிறப்பு விழாவும் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் நினைவரங்கமும் இம்மாதம் 17ஆம் திகதி புதன்கிழமை காலை 11 மணிக்கு நவாலி மகாவித்தியாலயத்தில், தமிழ்ச்சங்கத் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் தி.வேல்நம்பி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் கி. கிருஷ்ணானந்தா வாழ்த்துரையையும் ஜீவா. சஜீவன் தொடக்கவுரையையும் வழங்குவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர்; செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம் ஆடிப்பிறப்பும் நவாலியூர் சோமசுந்தரப்புலவரும் என்ற பொருளில் சிறப்புரையாற்றுவார். பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.



தொல்புரம் ஸ்ரீ மகாசக்தி அம்பாள் ஆலய கும்பாபிஷேக நிகழ்வுகளின் போது பிடிக்கப் பட்ட படம்.

## மன்னார் கருங்கண்டல் பாடசாலையில் இலத்திரனியல் வகுப்பறைகள் திறந்துவைப்பு

மன்னார் குறூப் நிருபர்

எதிர்க்கட்சி தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சஜித் பிரேமதாஸவின் பிரபஞ்சம் நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட கருங்கண்டல் பாடசாலைக்கான இலத்திரனியல் மூல வகுப்பறை (SMART CLASS ROOM) கையளிக்கும் நிகழ்ச்சித்திட்டம் நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்றது.

பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைகலநாதனின் ஏற்பாட்டில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது மடு கல்வி வலயத்திற்கு உட்பட்ட கருங்கண்டல் பாடசாலையில் அமைக்கப்பட்ட குறித்த இலத்திரனியல் மூல வகுப்பறை (SMART CLASS ROOM) வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டு மாணவர்களின் பயன்பாட்டிற்காக கையளிக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவுடன் இணைந்து மடு வலயக் கல்வி பணிப்பாளர், கருங்கண்டல் பாடசாலை அதிபர், பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைகலநாதனின் பிரதிநிதி வசந்த் ஆகியோர் இணைந்து குறித்த SMART வகுப்பறைகளை வைபவ ரீதியாக திறந்து வைத்தனர்.

## சிறப்புற நடைபெற்ற மணிவாசகர் குருபூசை



ஓமந்தை விஷேட நிருபர்

மணிக்கவாசகர் குருபூசை நிகழ்வானது நேற்றுமுன்தினம் (14) முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு ஐயப்பன் ஆலயத்தில் நடைபெற்றது.

ஆலய தலைவர் அமுதலிங்கம் தலைமையில் ஆரம்பமாகிய விழாவில் பிரதம விருந்தினராக முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், கௌரவ விருந்தினராக கிருபாலிங்கம், மணியம்மா, ஜெயபாலன், இலங்கை வங்கி முன்னாள் முகாமையாளர் பால்ராஜா, கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் தயாரூபன், அரச உத்தியோகத்தர்கள், பொது அமைப்புக்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்நிகழ்வானது மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகி வரவேற்புரை, தலைமையுரை, அறநெறி மாணவர்களின் நிகழ்வு, வரவேற்பு நடனம், பேச்சு, கதை, பிரதம,கௌரவ,சிறப்பு விருந்தினர்கள் உரை, பரிசில்கள் வழங்கல், நன்றியுரையை தொடர்ந்து அன்னதானம் என்பன வற்றுடன் நிறைவுபெற்றிருந்தது.

## செவிப்புலனற்றோரின் நலன்பேணல்: முல்லைத்தீவில் விஷேட கூட்டம்



ஓமந்தை விஷேட நிருபர்

முல்லைத்தீவு மாவட்ட செவிப்புலனற்றோர் நலன் தொடர்பிலான விஷேட கூட்டம் ஒன்று நேற்று முன்தினம் முல்லைத்தீவில் நடைபெற்றது.

முல்லைத்தீவு கள்ளப்பாட்டு கிராமத்தில் உள்ள பொதுநோக்கு மண்டபத்தில் முல்லைத்தீவு மாவட்ட செவிப்புலனற்றோர் சங்கத்தினரால் இக்கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது.

இந்த ஒன்றுகூடலில் புலம்பெயர் நாட்டிலிருந்து வருகை தந்திருந்த செவிப்புலனற்றோரின் உறவினால் அவர்களுக்கான சீருடை அறிமுகம் செய்து வைக்கப்பட்டதுடன், உலருணவு பொதிகளும் வழங்கப்பட்டது, செவிப்புலனற்றோரின் நலன் சார்ந்த விடயங்களும், கலந்துரையாடப்பட்டிருந்தது.

குறித்த கூட்டத்தில் முல்லைத்தீவு மாவட்ட செவிப்புலனற்றோர் சங்க உறுப்பினர்கள், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் என பலரும் கலந்து கொண்டிருந்தார்கள்.

## தென்னாடு சிவமடத்தின் ஏற்பாட்டில் சைவ அறங்காவல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம் தென்னாடு – செந்தமிழ் ஆகம சிவ மடத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற சைவ அறங்காவல் என்ற பொருளில் அமைந்த முழு நாள் கருத்தரங்கு யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல நட்சத்திர விடுதியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

தென்னாடு அமைப்பின் நிறுவுனர் பொறியாளர் குணரத்தினம் பார்த்திபன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்விற்கு தென்னாடு பத்திரிகை ஆசிரியர் செந்தமிழாதன் தலைமை தாங்கினார்.

தருமபுரம் ஆதீனத்தின் திருக்கேதீச்சரக் கிளைமட கட்டளை தம்பிரான் ஸ்ரீமத் மீனாட்சி சுந்தர தம்பிரான் சுவாமிகள், யாழ்ப்பாண பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி சிறீசற்குணராஜா சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம் ஆகியோர் நிகழ்வில் முன்னிலை வகித்தனர்.

நிகழ்வில் கருத்துரைகளை இலங்கையில் சைவம் அன்றும் இன்றும் என்ற பொருளில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசனும், சைவத்தின் சமகால செல்நெறி – சில அவதானிப்புகள் என்ற பொருளில் கொழும்பு ஆறுமுகநாவலர் சபை செயலாளர் மருத்துவர் கி. பிரதாபனும் திருமுறைச் சிறப்பும் சாத்திரச் சிறப்பும் என்ற பொருளில் தமிழ்நாடு செந்தமிழரசு கி சிவகுமாரும் சைவ அறங்காவல் என்ற பொருளில் பொறியியலாளர் குணரத்தினம் பார்த்தீபனும் திருமுறை மகத்துவம் என்ற பொருளில் சைவநீதி அமைப்பின் தலைவர் குணாதுரைசிங்கமும் வழங்கினர்

## தனக்குரிய கடிதங்களை பெறவே அருச்சுனா வைத்தியசாலைக்கு வருகை தந்தார்

### குழப்பம் விளைவிக்க அல்லவென்கிறார் சாவகச்சேரி வைத்திய அத்தியட்சகர்

(யாழ்.விசேட நிருபர்)




சாவகச்சேரி வைத்தியசாலையின் முன்னாள் வைத்திய அத்தியட்சகர், நேற்றைய தினம் வைத்தியசாலைக்கு வருகை தந்து தனக்கு உரிய கடிதங்களை பெற்றுச் சென்றுள்ளதாக வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் கே. ரஜீவ் தெரிவித்துள்ளார்.

முன்னாள் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் அருச்சுனா இராமநாதன், தானே தற்போதும் சாவகச்சேரி வைத்தியசாலையின் அத்தியட்சகர் எனக்கூறி வைத்தியசாலைக்கு சென்றமையால் நேற்றைய தினம் திங்கட்கிழமை சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது .

பின்னர் வைத்தியசாலையை விட்டு, முன்னாள் வைத்திய அத்தியட்சகர் வெளியேறிய பின்னர், சம்பவம் தொடர்பில் வைத்திய அத்தியட்சகர் கே. ரஜீவ் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது, வைத்தியர் அருச்சுனா வருகை தந்து, அவரது கடமைக் காலத்தில் அவருக்கு வந்த கடிதங்களை பெற்றுக்கொண்டதுடன், இதுவரை காலம் அவர் விடுப்பில் நின்றமைக்கான காரணங்களை, விடுப்பு தொடர்பான குறிப்பேட்டில் பதிந்து கையொப்பத்தை இட்டுச் சென்றுள்ளார்.

தனக்கு மத்திய அரசால் வழங்கப்பட்டதாகச் சொல்லப்படும் கடிதம் தொடர்பில் தனக்கு எதுவும் தெரியாது எனவும், தான் நேரில் சென்ற போதும் தனக்கு கடிதம் எதுவும் தரப்படவில்லை எனவும் அவர் கூறினார்.




## அறிவித்தல்

### ஹஜ் யாத்திரிகை 2024

**ஹஜ் பயணத்தினை உறுதிப்படுத்துவதற்காக திணைக்களத்திற்கு செலுத்திய மீளளிப்புப் பணத்தினை பெற்றுக்கொள்ளல்**

2024 ஆம் ஆண்டுக்கான ஹஜ் பயணத்தினை உறுதிப்படுத்துவதற்காக திணைக்களத்திற்கு செலுத்திய மீளளிப்புத் தொகை ரூபா 25,000/- இனை 2024 ஆம் வருடம் ஹஜ் பயணம் மேற்கொண்டவர்களும் அதற்கு முன்னைய வருடங்களில் ஹஜ் பயணம் மேற்கொண்டு மீளப்பெற்றுக்கொள்ளாதவர்களும் பின்வரும் ஆவணங்களை சமர்ப்பித்து மீளளிப்புத் தொகையினை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

1. திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டின் மூலப்பிரதி (Original Receipt)
2. கடவுச்சீட்டின் பிரதி (Passport copy)
3. ஹஜ் விசாவின் பிரதி
4. வங்கிக் கணக்கை உறுதிப்படுத்தும் ஆவணம்.(கணக்கு வைத்திருப்பவரின் பெயர், கணக்கிலக்கம் தெளிவாக இருத்தல் வேண்டும்)
5. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் (விண்ணப்பப்படிவத்தினை www. muslimaffairs.gov.lk எனும் திணைக்கள இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்).

மேற்குறித்த ஆவணங்களை பணிப்பாளர், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம், இல.180, டீ.பீ.ஜாயா மாவத்தை, கொழும்பு -10. எனும் முகவரிக்கு 2024 ஆகஸ்ட் 31 ஆம் திகதிக்கு முன்னர் நேரடியாக அல்லது பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

ஹஜ் யாத்திரிகை மேற்கொள்ள பதிவு செய்து ஹஜ் பயணத்தை மேற்கொள்ளாதவர்கள் மீளளிப்புத் தொகையினை பெற்றுக்கொள்வதாயின் திணைக்களத்திற்கு ஹஜ் யாத்திரிகைக்கு செல்ல முடியாமைக்கான விளக்கத்தையும் தகுந்த ஆவணங்களையும் வழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

மேலதிக தகவல்களுக்கு 0112667909 / 0112667901 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் திணைக்கள ஹஜ் பிரிவை தொடர்பு கொள்ளவும்.

**பணிப்பாளர்**
முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

**தலைவர்**
ஹஜ் - உம்ரா கமிட்டி

**இல. 180, டீ.பீ. ஜாயா மாவத்தை, கொழும்பு 10**

# காத்தான்குடியில் நூறு பேர் ஒரே மேடையில் கௌரவிப்பு














**மட்டக்களப்பு குறூப் நிருபர்**

காத்தான்குடியில் கடந்த வெள்ளிக்கிழமையன்று நூறு பேர் ஒரே மேடையில் கௌரவிக்கப்பட்டனர்.

சிரேஷ்ட ஊடகவியலாளர், கவிமாமணி ரீ.எல். ஜவ்பர்கான் தலைமையில் "வாரவலம்" ஊடக அமைப்பினால் இந்த கௌரவிப்பு நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது காத்தான்குடியில் சமூக சேவை, கல்வி, சுகாதாரம், இலக்கியம், கலை, ஆன்மிகம்,வர்த்தகம்,தொழில் முயற்சி ,உட்பட 10 துறைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 100 பேருக்கு நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப் பட்டன. இந்த நிகழ்வில் "வாரவலம்" பத்திரிகையின் இரண்டாவது ஆண்டையொட்டிய சிறப்பு பத்திரிகையும் வெளியிடப்பட்டதுடன் "வேர்கள்" என்ற சஞ்சிகையும் வெளியிடப்பட்டது. காத்தான்குடியைச் சேர்ந்த கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் கலாநிதி எம். எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் உட்பட 100 பேர் கௌரவிக்கப்பட்டனர். நிகழ்வில் கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம்.எஸ்.எஸ். அமீர் அலி, மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.ஜே. முரளிதரன், கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் வல்லிபுரம் கனகசிங்கம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



மறைந்த ஈரானிய ஜனாதிபதி அல்ஹாஹித் செய்யீத் இப்ராஹிம் ரைசியின் நினைவுப் பேரூரை கடந்த சனியன்று அக்கரைப்பற்று அத்தாவுல்லா அரங்கில் நடைபெற்றது. சுதந்திர ஊடக கண்காணிப்பு மையம் ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்வில் ஈரான் அல் முஸ்தபா சர்வதேச பல்கலைக்கழகத்தின் பணிப்பாளர் எஸ். இஸட். மிர்பாரெமி விஷேட அதிதியாக கலந்து கொண்டார். இதில் பாலஸ்தீன மக்களுக்கான துஆ பிரார்த்தனையும் இடம்பெற்றது.

## இடம்பெயர்ந்தோருக்கான புதிய வீடுகளுக்கு அடிக்கல்

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**



கடந்த கால அசாதாரண சூழ்நிலைகளால் இடம் பெயர்ந்து வாழ்வதற்கு நிரந்தர வீடு இல்லாத பயனாளிகளுக்கான வீடுகளை நிர்மாணித்து கொடுக்கும் திட்டத்தின் கீழ் மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவில் 6 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான வீடுகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு சுற்றாடல் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

சுமார் 10 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் மணிமுனை வடக்கு பிரதேச செயலக பிரிவில் நிர்மாணிக்கப்படவுள்ள 6 வீடுகளுக்கான அடிக்கல்லை சுற்றாடல் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் நட்டு வைத்ததுடன், பிரதேச செயலக உயரதிகாரிகள் உள்ளிட்ட அதிகாரிகளும், இராஜாங்க அமைச்சரின் உத்தியோகத்தர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதனடிப்படையில் நாவற்குடா கிழக்கு, நொச்சிமுனை, திருப்பெருந்துறை மற்றும் சின்ன ஊறணி ஆகிய கிராமங்களில் குறித்த 6 பயனாளிகளுக்குமான வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மூதூரில் மாபெரும் இரத்ததான நிகழ்வு

**தோப்பூர் தினகரன் நிருபர்**




மூதூர், நடுத்தீவு வலுவூட்டல் மற்றும் நலன்புரிச் சங்கம், இரத்ததான முகாமொன்றை அண்மையில் ஏற்பாடு செய்திருந்தது. இவ்வமைப்பு கடந்த பல மாதங்களாக கிராமத்திற்கான பல நலத் திட்டங்களை செய்து வருகின்றது. 'உயிர் காக்கும் உயரிய தானம்' எனும் கருப்பொருளின் கீழ் 13.07.2024 அன்று மூதூர் தழுவிய இரத்ததான முகாம் ஒன்றை திருகோணமலை மாவட்ட வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவுடன் இணைந்து மூதூரின் கலா சார மண்டபத்தில் ஏற்பாடு செய்திருந்தது. இந்நிகழ்வில் மும்மதத் தலைவர்கள் உட்பட மூதூர் பொலிஸ், இராணுவம் மற்றும் கடற்படை உயர் அதிகாரிகளும் கலந்து சிறப்பித்திருந்ததோடு மூதூரின் பல பாகங்களிலும் இருந்து வந்து ஏராளமானோர் இரத்த தானம் செய்தனர்.

## அறுவடை விழா

**பாசிக்குடா நிருபர்**

வாகநேரி நீர்பாசன திட்டத்தின் கீழ் செய்கை பண்ணப்பட்ட சிறுபோகத்துக்கான அறுவடை விழா நேற்று (15) அடம்படிவெட்டுவான் கண்டத்தில் நடைபெற்றது. வாகநேரி திட்ட முகாமைத்துவக் குழுத் தலைவர் சி.சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.ஜே.முரளிதரன் சிறப்பு விருந்தினராகவும் மட்டக்களப்பு நீர்பாசன பணிப்பாளர் எந்திரி.ந.நாகரெத்தினம், செங்கலடி உறுகாமம் நீர்ப்பசான பொறியிலாளர் எஸ்.விஷ்ணுரூபன் ஆகியோரும் கலந்து கொணடனர். அந்த விவசாயக் கண்டத்தில் அமைந்துள்ள பிள்ளையார் ஆலயத்தில் விசேட பூசைகள் நடைபெற்று தமிழர் பாரம்பரிய கலாசார முறையில் நிகழ்வுகள் நடைபெற்று அறுவடை விழா நிகழ்வு நடைபெற்றது.

## கிழக்கின் குரல்



## தேர்தலுக்கு முகம்கொடுக்க ஐக்கிய தேசியக் கட்சி தயார்

### ஐ. தே. க மட்டக்களப்பு தொகுதி அமைப்பாளர் பிர்தௌஸ்

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**



ஜனாதிபதி தேர்தலை முகம் கொடுக்க ஐக்கிய தேசியக் கட்சி தயாராகி விட்டது. பொது வேட்பாளரா க ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க களம் இறங்குவார் என ஐக்கிய தேசியக் கட்சியின் மட்டக்களப்பு தொகுதி அமைப்பாளர் பிர்தௌஸ் தெரிவித்தார்

ஏறாவூரில் (14) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், நமது தலைவர் ரணில் விக்கிரமசிங்க, இந்த நாட்டை மிகவும் கடினமான காலத்தில் வழிநடத்திச் செல்கிறார். அவர் முன்னெடுத்து செல்கின்ற விடயங்கள் அனைத்தும் வெற்றி கண்டுள்ளன.

இந்த நாட்டை பொறுப்பேற்க எல்லோரும் தயங்கிய போது ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க துணிவுடன் அதனைப் பொறுப்பேற்று நாட்டை பழைய நிலைக்கு கொண்டு செல்கிறார்.

நாட்டுக்காக எங்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவை வெல்ல வைப்பது நமது தேவையும் கடமையுமாகும் என்றும் அவர் கூறினார்.

## பட்டியடிப்பிட்டி மையவாடியில் சிரமதானம்

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**



அக்கரைப்பற்று, பட்டியடிப்பிட்டி இளைஞர்கள் விவகார அகடமியின் (Academy For Youth Affairs) ஏற்பாட்டில் அக்கரைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட பட்டியடிப்பிட்டி முஸ்லிம் மையவாடிக்கான சிரமதான நிகழ்வு அப்பிரதேச இளைஞர்களின் ஒத்துழைப்புடன் கடந்த சனிக்கிழமை (13) காலை நடைபெற்றது.

"மண்ணறையை நினைவூட்டும் மையவாடியை சுத்தம் செய்ய முன் வருவோம், மையவாடியை சுத்தம் செய்வது எமது ஒவ்வொருவரினதும் தார்மீக கடமை" என்ற நோக்கத்தின் அடிப்படையில் இப்பிரதேசத்தை சேர்ந்த உலமாக்கள், அரசியல்வாதிகள், பள்ளிவாசல் நிர்வாகிகள் கல்வியலாளர்கள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் இச்சிரமதான பணியில் கலந்து கொண்டு மையவாடியில் இருந்த பொதுமக்களுக்கு இடைஞ்சல் தரக்கூடிய மரக்கிளைகள் மற்றும் புற்களை அப்புறப்படுத்தினர்.

இச்சிரமதான பணி ஒவ்வொரு வருடமும் இப்பிரதேசத்தில் உள்ள அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், பொது சமூக சேவை அமைப்புகள் மற்றும் விளையாட்டு கழகங்களின் ஏற்பாட்டில் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கெப் வாகனத்துடன் எரியூட்டப்பட்ட நிலையில் சடலம் மீட்பு

**கந்தளாய் தினகரன் நிருபர்**

திருகோணமலை பம்மதவாச்சி காட்டுப் பகுதியில் கெப் வாகனத்திற்குள் எரியூட்டப்பட்ட நிலையில் சடலமொன்று கடந்த14 ஆம் திகதி மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட சடலம் திருகோணமலை அலஸ்தோட்டம் பகுதியைச்சேர்ந்த மரக்கறி கடை உரிமையாளரான செல்லையா ஜெயரூபன் (42 வயது) என ஆரம்ப கட்ட விசாரணையில் மூலம் தெரிய வந்துள்ளது. கடந்த 12ஆம் திகதி கெப் வாகனத்துடன் காணாமல் போனதாக கூறப்படும் இந் நபரின் வாகனம் அதிகாலை 2.40 அளவில் வில்கம் விகாரை பகுதியை தாண்டி மொரவெவ பகுதிக்கு செல்வது சிசிடிவி காணொளி மூலம் கண்டறியப்பட்டதாகவும் அதனையடுத்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டதாகவும் தெரிய வந்துள்ளது.



# 'கேக்' தயாரிப்பில் 45 வருடங்களை பூர்த்தி செய்த சாந்தா ஜெயராஜ்

## 500க்கும் மேற்பட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் பங்கேற்பு

கலைஞர் திருமதி சாந்தா ஜெயராஜ் இலங்கையில் பிறந்தாலும் அவுஸ்திரேலியா மண்ணில் புலம்பெயர்ந்து வாழ்ந்து வருபவர். அவர் கடந்த 45 வருடங்களாக கேக் செய்முறை அலங்காரத்தில் ஈடுபாடு கொண்டவர். சாந்தா கேக் புதிய யூடியூப் சனல் மூலம் புதிய நவீன வகையிலான கேக் தயாரிக்கின்ற முறைகளை உலகளவில் வாசகர்களுக்காக பகிர்ந்து கொண்டு வருபவர். பிறந்த நாள் கேக், திருமணக் கேக், குழந்தைகளுக்கான இன்னும் பல புதுமையான கேக்குகள், தமிழ் கலாசாரம் சம்பந்தப்பட்ட கேக்குகள் என ஒரு பெரிய கேக் சாம்ராஜ்ஜியத்தையே உருவாக்கி பெரும் புகழ்பெற்றவர். பல கண்காட்சிகளை சென்னை, சிங்கப்பூர், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் நடத்தியவர்.

இலங்கை, தமிழ் நாட்டின் பல பகுதிகள், அவுஸ்திரேலியாவின் பெரு நகரங்கள், சிங்கப்பூர், கனடா, லண்டன், அனைத்து இடங்களிலும் பயிற்சி வகுப்புக்கள் வெற்றிகரமாக நடாத்தியவர். 500க்கும் மேற்பட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை, சன், ஜெயா, மெகா, ராஜ், மக்கள், தூரதர்ஷன் ஆகிய தொலைக்காட்சிகளுக்காக வழங்கி பலருடைய பாராட்டைப் பெற்றவர். இரண்டு கேக் நூல்கள், இரண்டு சமையல் நூல்கள் ஒரு சிறுகதைத் தொகுதி, 50 கட்டுரைகள் அடங்கிய பல்சுவை நூல் என்று இதுவரையிலும் ஆறு நூல்களை எழுதியுள்ளார்.



இவற்றுள் மூன்று நூல்கள் 'விகடன்' பிரசுரத்தில் வெளிவந்தவை என்பது குறிப்பிடத்தக்கது. உலகளவில் பல பாராட்டுக்களையும் விருதுகளையும் பெற்ற இவரை அமெரிக்கா பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டம் வழங்கி மேலும் பெருமைப்படுத்தியுள்ளது. தான் கற்றுக் கொண்ட கலைகளையும் தமது அனுபவங்களையும் 'சாந்தாஸ் கேக்ஸ்' மற்றும் 'சாந்தா டேபிள்' எனும் இரண்டு யூடியூப் செனல்கள் மூலமாக இன்று உலக மக்களுடன் பகிர்ந்து கொள்வதில் இவர் பெருமகிழ்ச்சியும் திருப்தியும் கொள்கிறார். திருமதி சாந்தா ஜெயராஜ் கேக் அலங்காரம் தொடர்பில் தினகரன் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி.

**உங்கள் சாந்தாஸ் கேக் அலங்காரம் செய்முறை அனுபவங்கள் பற்றிக் கூறுவீர்களா?**

இந்தக் கேக் கலையில் கடந்த 45 வருடங்களாக என்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறேன். இதில் திருமண கேக், பிறந்த நாள் கேக், இன்னும் எத்தனையோ வகை வகையான கேக் வகைகளைச் செய்வதோடு கற்பித்தலையும் மேற்கொண்டு வருகின்றேன். இன்னும் இது வரையிலும் பல ஆயிரக் கணக்கான கேக் வகைகளை கண்காட்சிகளுக்காகவும், திருமணங்களுக்காகவும் பிறந்த நாள் வைபவங்களுக்காகவும், பூஜைகள், பஜனைகளுக்காகவும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்காகவும் மற்றும் வகுப்புக்கள் நடத்துவதற்காகவும் செய்துள்ளேன். இந்த அரிய கலையை மக்கள் அறிந்து கொள்ள பொது மக்களுக்காக 'சாந்தாஸ் கேக்ஸ்' என்ற பெயரில் ஒரு யூடியூப் சனலை ஆரம்பித்து கற்பித்து வருகின்றேன். இந்தச் சனலை தொடர்ந்து பார்த்தால் வாசகர்களும் நிச்சயமாக கேக் செய்வதில் அனுபவம் வாய்ந்தவராக மாறலாம் என்பது எனது நம்பிக்கை. அது மட்டுமல்லாது இந்தக் கலையை சரிவரக் கற்றுக் கொண்டால் ஒரு வாழ் வாதாரத்தையே தரக் கூடியது என்பது உறுதி.

1977 இல் இருந்து கேக் வகுப்புக்கள் நடத்திக்



கொண்டு வருகிறேன். இலங்கையில் எட்டு வருடங்கள். பின்னர் தமிழ் நாட்டில் ஐந்து வருடங்கள், பின்னர் 1989 ஆண்டு முதல் இன்று வரை அவுஸ்திரேலியாவில் நடத்தி வருகிறேன். அவுஸ்திரேலியாவின் முக்கிய நகரங்களான சிட்னி, மெல்போன், பெர்த் ஆகிய இடங்களிலும் லண்டன், கனடா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலும் வகுப்புக்கள் நடத்தி இருக்கின்றேன்.

கேக் செய்முறைகளை ஆரம்பத்தில் இருந்து கற்றுக் கொண்டால்தான் இந்தக் கலை பற்றிய முழுமையான அறிவு கிடைக்கும். இது ஒரு கட்டடத்திற்குப் போடுகின்ற அத்திவாரம் போன்றது. அத்திவாரம் உறுதியாக இருந்தால் தன் அதன் மேல் எழுப்பப்படும் கட்டடமும் உறுதியாக இருக்கும். இதே போன்றுதான் கேக் செய்முறையிலும் அடிப்படைய முறைகளை முதலில் கற்றுக் கொள்ள வேண்டும். அது ஒரு சாதாரண கேக்காக இருந்தாலும் சரி, பல அலங்காரங்களோடு கூடிய கேக்காக இருந்தாலும் சரி, எதுவானாலும் முறைப்படி கற்றுக் கொள்வது மிக அவசியம்.

**நீங்கள் ஆரம்பத்தில் கேக் செய்கையினை எங்கு கற்றுக் கொண்டீர்கள்?**

நான் ஆரம்பத்தில் கேக் செய்கையை முறையை இலங்கையில் கண்டியில் தான் கற்றுக் கொண்டேன். எனது ஆசிரியை திருமதி 'அமீதா வீரதுங்க' என்பவர். கம்பஹாவில் இருந்து கண்டிக்கு வந்து ஒவ்வொரு வார இறுதியிலும் வகுப்புக்கள் நடத்துவார். நான் வத்தேகம எனும் இடத்தில் இருந்து இந்த வகுப்புகளுக்கு வாரம்தோறும் செல்வதுண்டு. இந்த வகுப்புக்கள் தொடர்ந்து ஆறு மணி நேரம் நடைபெறும். இங்கு நான் கேக் செய்முறை மட்டும் கற்றுக் கொள்ளவில்லை. சமையல் கலை, மலர் செய்முறை, சிகை அலங்காரம், ஒப்பனைக் கலை மணப்பெண் அலங்காரம் எனப் பல கலைகளை ஒரே இடத்தில் கற்றுக் கொள்ள பெரிய வாய்ப்பு எனக்கு கிடைத்தது.

இவ்வாறு பல கலைகளைப் பயிலும் போது அதில் ஏற்படுகின்ற பெரிய வாய்ப்பு என்னவென்றால் ஒரு கலையோடு வேறு ஒரு கலையையோ அல்லது பல கலைகளையோ நிச்சயமாகத் தொடர்புபடுத்தலாம். மலர் செய்முறையை எடுத்துக் கொண்டால் காகிதம், கஞ்சி போடப்பட்ட துணி, ஸ்பாஞ்ச் ஆகிய பொருட்கள் மூலம் அழகழகான மலர்கள் செய்யக் கற்றுக் கொள்கிறோம். பின்னர் அவற்றை எந்த வகையிலே ஒழுங்குபடுத்தலாம். என்பதையும் கற்றுக் கொள்கிறோம். இது ஒருபுறம் இருக்க, 1970 களில் யப்பானில் இயற்கை மலர்களின் அலங்காரம் முன்னணியில் இருந்த கால கட்டம் அது. இதற்கு 'இக்கபானா' என்ற பெயர் இந்த கலையையும் திருமதி அமீதா வீரதுங்கவிடமிருந்தே கற்றுக் கொண்டேன். ஒவ்வொரு கலையைக் கற்றுக் கொள்ளும் போது அதில் புதைந்து கிடக்கின்ற கலை நுட்பங்களையும் தெரிந்து கொண்டேன்.

இந்தக் கலை நுட்பங்களை எல்லாம் எனது கேக் அலங்காரத்தில் புகுத்துகின்ற ஒரு புதிய முயற்சியையும் மேற்கொண்டேன். ஐசிங்கில் பல புதுப் புது மலர்களைச் செய்வதும் அவற்றை அழகாக ஒழுங்குபடுத்தி கேக்குகளை அழகுபடுத்துவதும் எனக்கு கைவந்த கலையானது. கேக் கலை அலங்காரத்தில் பல புதுப்புது கண்டு பிடிப்புக்களையும் என்னால் வெளிக்கொணர முடிந்தது.







நான் இலங்கையில் கேக் செய்கை முறையினை ஆரம்பித்த காலத்தில் இருந்தே எனது அடி மனதில் ஓர் ஆசை. கேக் என்னும் அரிய கலை நமது நாட்டுக்கு உரியதல்ல. அது மேல் நாடுகளில் உருவான ஓர் அரிய நுண்கலை. அது மேலை நாடுகள் எனக் கூறும் பொழுது அது இங்கிலாந்தோ அமெரிக்காவோ என்று நான் குறிப்பிடவில்லை. இந்தக் கேக் முறை முதலில் ஆரம்பமானது எகிப்து நாட்டில் தான். அதன் பின்னர் தான் இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் ஆசியா நாடுகளுக்குப் பரவியது.

இந்த கேக் சித்திரம் பற்றிப் பேசுவதானால் தனிப்பட்டு ஓர் ஆராய்ச்சி நூலே எழுதலாம். எனது மனதில் ஏற்பட்ட ஆசை எல்லாம் வெளிநாட்டினருக்குச் சொந்தமான இந்த அரும் கலையினை தமிழ் கலாசாரத்தோடு இணைக்க வேண்டும். என்பதே. தமிழ் மொழி , தமிழ் கலாசாரம் சம்பந்தப்பட்ட கேக் வடிவங்களை புதுமையான முறையில் உருவாக்க வேண்டும் என்பதே பெரும் ஆவலாக எனக்கு இருந்தது.

**முதன் முதலாக நீங்கள் செய்த தமிழ் கலாசாரக் கேக் எது என்று கூற முடியுமா?**

நிச்சயமாகக் கூறமுடியும். மாத்தளையில் நாங்கள் வாழ்ந்த காலத்தில், எனது பெற்றோர்களுடைய 40ஆவது வருட திருமண நாளைக் கொண்டாடிய போது ஒரு சுவையான கேக் செய்து அதன் மேல் இரண்டு பூமாலைகள் ஒன்றுள் ஒன்று இணைந்திருப்பது போல ஐசிங்கினால் அலங்கரித்தேன். பார்ப்பதற்கு மிக அழகாகவும் மிகவும் புதுமையாக இருந்ததாக என் குடும்பத்தினர்களும், நண்பர்களும் பாராட்டினார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக எனது தாய் தந்தையர்களுக்காக இத்தகையதொரு கலாசார கேக்கினைச் செய்யும் வாய்ப்பும் ஆதரவும் கிட்டியதே எனக்கு பெருமகிழ்ச்சி தந்தது. பெற்றோர்களுடைய ஆசியைப் பெற்றது பெரும் திருப்தியை ஏற்படுத்தியது.



இலங்கையில் வசித்த போது இரண்டாவது நான் செய்த ஒரு கலாசாரக் கேக் 'குத்துவிளக்கு' வடிவில் அமைந்தது இது எனது மகன் கோபியின் பிறந்த நாளுக்காகச் செய்தேன். இதுவும் ஒரு புதிய முயற்சி. அதன் பின்னர் பல கலாசார கேக்குகள் செய்கின்ற வாய்ப்புக்கள் என்னைத் தேடி வந்தன. இந்தியாவில் வாழும் போதும் சரி, அவுஸ்திரேலியாவுக்குப் குடிபெயர்ந்த பின்னரும் சரி, பல தமிழ் கலாசார கேக்குகளைச் செய்தேன். இச் செவ்வியில் வரும் படங்களில் நீங்கள் அவதானிக்கலாம்.



நானும் எனது கணவரும் குழந்தைகளுடன் அவுஸ்திரேலியாவுக்கு குடி புகுந்து ஒரே வாரத்தில் அங்கு இருக்கும் தொழில் நுட்பக் கல்லூரியில் சேர்ந்து அவுஸ்திரேலியக் கேக் செய்முறை நுணுக்கங்களைக் கற்றுக் கொள்ள ஆரம்பித்தேன். நான் ஏற்கெனவே செய்து வைத்திருந்த கேக் அலங்காரங்களுக்கும் அவுஸ்திரேலியா முறைகளுக்கும் பல வித்தியாசங்கள் இருப்பதைக் நான் கண்டேன். என் மனதின் அடித்தளத்தில் இருந்த 'ஆசை' மேலும் வலுப்பெற்றது. மேலும் இந்தப் புதிய கலை நுணுக்கங்களைப் பயன்படுத்தி நமது கலாசார கேக்குகளுக்கு மேலும் மேலும் மெருகூட்டலாம் என்ற நம்பிக்கை மேலோங்கியது.

"பிற நாட்டு நல்லறிஞர் சாஸ்திரங்கள்'
தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்"

என்று மகாகவியின் வாக்கு ஏற்ப எனது கேக்குகள் மூலமாகவும் நடைமுறைக்கு வருவதை உணர்ந்தேன்.

**நீங்கள் சென்னையில் வாழ்ந்தபோது நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்கு 60ஆவது பிறந்த தினத்துக்கு கேக் பரிசாக கொடுத்தீர்களாமே?**

ஆமாம். 1984 இல் இருந்து 1989 வரை நாம் சென்னையில் அண்ணா நகரில் குடியிருந்தோம். 1987 இல் நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் 60 வது பிறந்த தினம். அக்டோபர் முதலாம் தேதி. அதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் ஒரு பத்திரிகை நண்பர் எங்களைச் சந்திக்க வந்தார். ' அடுத்த வாரம் நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்கு 60 வது பிறந்த தினம். புதுமையான டிசைன்களில் ஏதாவது கேக் செய்து தரமுடியுமா? அதை நீங்களே அவருக்குப் பரிசாகக் கொடுக்கலாம். நமது பத்திரிகையில் நாம் அதைப் பதிவு செய்து வெளியிடலாம் என்று கூறினார்கள். கரும்பு தின்னக் கைக் கூலியா வேண்டும்? நான் உடனடியாகச் சம்மதித்தேன். இத்தனை பெரிய கலைஞருக்கு கேக் செய்ய பாக்கியம் கிடைத்தது. நினைத்துப் பெருமை கொள்வதா அல்லது நடிகர் திலகத்தை முதன் முறையாக் சந்திக்கப் போகிறோம் என்று பெருமகிழ்ச்சியடைவதா? உண்மையிலே என் மனம் பெரும் பூரிப்பு அடைந்தது. அவர்கள் கேட்டதென்னவோ ஒரு கேக்தான். ஆனால் நான் மூன்று கேக்குகள் செய்தேன். ஒரு குத்து விளக்கு, ஒரு பூரண கும்பம், ஒரு வெற்றிலை பாக்குத் தட்டு என மூன்று மங்களகரமான கேக்குகளைச் செய்து எடுத்துக் கொண்டு நடிகர் திலகத்தின் இல்லத்திற்குச் சென்றோம். பத்திரிகையாளரும் நம்மோடு வந்தார். கூடவே ஒரு புகைப்படக் கலைஞரையும் அழைத்து வந்திருந்தார். மறைந்த நடிகர் திரு சுந்தராஜன் , நடிகர் திலகத்தின் மகன் மார்கள் ராம்குமார், பிரபு எங்களை அன்போடு வரவேற்றார்கள்.

**நடிகர் திலகத்தை முதல் முதலாக நேரில் பார்த்த போது உங்களுக்கு எப்படி இருந்தது.?**

எனக்கா? மேலெல்லாம் ஒரே நடுக்கம். அவர் பக்கத்தில் நிற்கும் போது எனது தந்தைக்கு அருகாமையில் நிற்கின்ற ஓர் உணர்வுதான் எனக்கு ஏற்பட்டது.

**உங்கள் கேக்குகளைப் பார்த்து என்ன கூறினார்..?**

அவர் கண்கள் ஆச்சரியத்தால் அகல விரிந்தன. என்னம்மா? கேக்கா இது? இப்படியெல்லாம் கூட கேக் பண்ண முடியுமா? என்று கேள்விக் குறியோடு என்னிடம் கேட்டார். அவருடன் பேச எனக்கு வார்த்தைகளே வர மறுத்தன. விஜிபி சகோதரர்கள் போன்ற தொழிலதிபர்கள் எல்லோரும் சூழ்ந்திருந்தார்கள். நடிகர் திலகம் நம்மோடு உரையாடிக் கொண்டிருந்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு முக்கியமான விடயத்தைப் பதிவு செய்ய விரும்புகிறேன். என்னருகில் நின்ற எனது பையன் கோபியை நன்கு உற்றுப் பார்த்தார் நடிகர் திலகம். 'ஒங்க பையனா? என்று கேட்டார். 'ஆமாம்' என்றேன்.

'பையனோட கண் சரியில்லையே'.... என்றார். எனக்கோ ஒன்றுமே புரியவில்லை.. 'டாக்டர் கிட்ட காட்டுங்க' என்றார். இவர் எதற்காக இதைச் சொல்லுகிறார் என்பது எனக்கு உண்மையாகவே புரியவில்லை. மறுநாளே நாம் பையனை வைத்தியரிடம் அழைத்துச் சென்றோம். என்ன ஆச்சரியம்? ஆச்சரியம் மட்டுமல்ல! அதிர்ச்சியும் கூட !!

பையனுக்கு 'மஞ்சள் காமாலை' என வைத்தியர் கூறினார். உடனடியாகவே அதற்காக சிகிச்சைகளை மேற்கொண்டோம். இறைவன் அருளால் பையனும் குணமாகி விட்டான்.

இப்பொழுதும் இந்தச் சம்பவத்தை நினைத்துப் பார்த்தாலும் எனக்குக் கனவு போல் இருக்கிறது. இவ்வளவு பெரிய ஒரு பெரும் கலைஞர். அவருக்கு அன்று 60ஆவது பிறந்த தினம். அவருடன் பல வருட காலமாகப் பழகிய பலரின் மத்தியில் நம்முடன் அன்புடன் உரையாடியது மட்டுமல்ல. பையன் கண்களைக் கூர்ந்து நோக்கி அவருக்கு இருந்த வியாதியைக் கண்டு பிடித்தமையை அவரது திறமை என்பதா? அக்கறை என்பதா? எதையும் அவதானிக்கும் தன்மை என்பதா? அல்லது எல்லாம் தானா?

இந்தச் சம்பவம் நினைவுக்கு வரும் போதெல்லாம் நடிகர் திலகம் அவர்களுக்கு மானசீகமாக நான் நன்றி சொல்லத் தவறுவதில்லை. எதையும் உற்று நோக்குகின்ற தன்மை எதையுமே அலட்சியப்படுத்தாத தன்மை இருந்ததால் தான் இவர் 'நடிகர்' திலகம் ஆனார். இத்தனை நூறு கதாபாத்திரங்களை நமது மனதில் நிலைக்கும் படி இவரால் நடிக்க முடிந்தது என்றால் அதற்கு காரணம் அவதானிக்கின்ற தன்மை, இவர் தன்னுடைய பேட்டியில் கூட இதைக் குறிப்பிட்டுள்ளார்.

தனது இல்லத்தில் இருந்து படப்பிடிப்புக்காக காரில் செல்லும் போது வழி நெடுக இருக்கின்ற விடயங்களையும், பல மனிதர்களையும் கூர்ந்து அவதானித்துக் கொண்டே செல்வாராம். வழியில் ஒரு பிச்சைக்காரன் இருந்தால் கூட அவனது நடவடிக்கைகளை உற்று நோக்குவாராம். ஏனெனில் பிச்சைக்காரனாக தான் நடிக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படுமானால் அது கொடுக்கும் என்றார். நடிகர் திலகம் ஒரு 'சதாவதானி' 100 விடயங்களை ஒரே நேரத்தில் கிரகிக்கக் கூடியவர். எனது கேக்குகள் இத்தனை பெரியதொரு மனிதரை சிந்திக்க வைத்ததற்கும் எனது பையனின் நோயைக் குணமாக்க வழி வகுத்ததற்கும் நான் இறைவனுக்கு நன்றி சொல்வதோடு எனது கேக்குகளுக்கு நிச்சயமாக நன்றி சொல்ல வேண்டும்.

**இந்தக் கலாசாரக் கேக்குகளைச் செய்யும் போது அந்த உருவங்களை வெட்டுவதற்குச் சிலர் தயங்க மாட்டார்களா?**

நிச்சயமாக, இந்தக் கேள்வியை என்னிடம் சிலர் கேட்டிருந்தார்கள்தான். உண்மையிலேயே இந்தப் புனிதமான உருவங்கள் வெட்டுவதற்காகச் செய்யப்படுபவை அல்ல. அதன் கீழே இருக்கும் கேக்தான் வெட்டப்படுகிறது. குத்து விளக்கின் மேல் பகுதியை அப்படியே கேக்கில் இருந்து வேறாகப் பிரித்தெடுத்து ஒரு நினைவுச் சின்னமாக வைத்திருக்கலாம். ஒரு கேக்கிலே பிள்ளையாரின் உருவம் செய்வதாக இருந்தால் அதில் பிள்ளையாரை ஐசிங்கில் செய்து கேக்கின் மேல் தூக்கி வைத்து விடுவேன். கேக் வெட்டப்படும் போது முதலில் பிள்ளையார் உருவத்தை வேறாக எடுத்து வைத்து விட்டுக் கேக்கினை வெட்டலாம். இந்தப் பிள்ளையார் ஒருவத்தைப் பல வருட காலங்கள் ஒரு நினைவுச் சின்னமாகப் பாதுகாத்து வைக்கலாம். அப்படிப் பல கேக்குகளை நான் பாதுகாத்து வைத்திருக்கிறேன்.

அவுஸ்ரேலியாவில் நான் கற்றுக் கொண்ட ஐசிங் வகைகள்தான் இதற்கு முக்கிய காரணம். இங்கு இருக்கின்ற கால நிலையும் இதற்கு ஒத்துழைக்கின்றது என்பது இதற்கு முக்கிய காரணம். பல வருடங்களுக்கு கேட்டுப் போகாத வண்ணம் இவற்றைப் பாதுகாக்கலாம். ஒரு நினைவுச் சின்னமாக மட்டுமே. இது சாப்பிடுவதற்காக அல்ல.

**அவுஸ்திரேலியா கேக் செய்முறைகளுக்கும் இங்கிலாந்து கேக் செய்முறைகளுக்குமிடையே நிறைய வித்தியாசங்கள் இருக்கின்றன.**

**அவை பற்றி சற்று விரிவாகக் கூற முடியுமா?**

அவுஸ்திரேலியர்கள் செய்கின்ற கேக் அலங்காரங்களும் அவர்கள் உபயோகப்படுத்துகின்ற பொருட்களும் தென் ஆபிரிக்க கேக் செய்முறை அலங்காரங்களை ஒத்தவை. உதாரணமாக 'பொண்டன்ட் ஐசிங்க' என்பது இங்கு அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது. இது பயன்படுத்துவதனால் தான் பல காலம் இந்த ஐசிங் வகைகள் பாதுக்காக்கக் கூடியவையாக இருக்கின்றன.

இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் கூடிய அளவில் பட்டர் ஐசிங், ராயல் ஐசிங், ஆகியவை பயன்படுத்தப்படுவதனால் இந்த ஐசிங் வகைகளை பாதுகாக்க முடிவதில்லை. உடனடியாகவே உபயோகப்படுத்த வேண்டும். பல காலமாக இந்த நாடுகள் இந்தப் பழைய வகை ஐசிங்குகளையே உபயோகப்படுத்தி வந்தார்கள். ஆனால் இன்றைய நிலைமை மாறியுள்ளது. எல்லோரும் எல்லா வகை ஐசிங்கும் பயன்படுத்துகின்ற வழக்கம் தற்சமயம் ஏற்பட்டிருக்கிறது.

நேர்காணல் : இக்பால் அலி

# நகர்வலம்



## இன அடிப்படையில் கட்சிகள் இருக்கும் வரை நாட்டில் ஜனநாயகம் தலை தூக்க முடியாது

### நீதி, அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்ச

லோரன்ஸ் செல்வநாயகம்

இன அடிப்படையில் கட்சிகள் இருக்கும்வரை நாட்டில் ஜனநாயகம் தலைதூக்க முடியாது என நீதி, அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்ச தெரிவித்தார்.

நாட்டில் ஜனநாயகம் தலை தூக்க வேண்டுமானால் இனவாத முறையில் கட்சிகள் அமைப்பதை தடை செய்ய வேண்டும் என்றும் அதற்கு தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்துவது அவசியம் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் மதத் தீவிர வாதத்தினை தடுப்பதன் அவசியம் தொடர்பில் எதிர்க்கட்சி எம்.பி. ஹேஷா விதானகே முன்வைத்த தனி நபர் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்..

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்,

அடிப்படைவாதம் நாட்டில் எந்தவகையில் தலைதூக்கினாலும் அதனை தடுப்பது பாராளுமன்றத்தின் கடமையாகும். ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் இடம்பெறுவதற்கு முன்னர் ஐ,எஸ். எஸ். அமைப்பு தொடர்பில் நான் பாராளுமன்றத்தில் தெரிவித்த விடயங்கள் தொடர்பாக அன்றிருந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தால் அந்த தாக்குதல் இடம்பெற்றிருக்காது.



எமது நாட்டில் இனவாதம், மதவாதம், அடிப்படைவாதம் இவை அனைத்தும் அரசியலுடன் ஒன்றி பிணைந்துள்ளன. இந்த முறைமையை பிரித்தானியர் காலத்திலேயே எமக்கு விட்டுச்சென்றார்கள்.

நாட்டிலுள்ள தேர்தல் முறைமையே இதற்கு காரணமாகும். இன அடிப்படையில் எமது நாட்டில் கட்சிகள் இருக்கும்வரை ஜனநாயகம் தலைதூக்க முடியாது. அதனால் ஜனநாயகம் தலைதூக்க வேண்டுமானால இனவாத முறையில் கட்சி அமைப்பதை தடை செய்ய வேண்டும்.

எமது அண்டை நாடான இந்தியாவில் இனவாத மதவாத அடிப்படையில் கட்சிகள் இல்லை. அந்த வகையில் எமக்கும் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

ஜனநாயக நாடுகளில் இவ்வாறான முறைமைகள் இல்லை. எமது நாட்டில் இருந்த ஆட்சியாளர்கள் அடிக்கடி அரசியலமைப்பில் திருத்தம் மேற்கொள்ளும்போது. அவர்களுக்காக அல்லது அவர்களது கட்சியின் நலனுக்காக இந்த இனவாத, மதவாத நடவடிக்கைகளுக்கு இடமளித்து வந்துள்ளனர் அதனால் அடிப்படைவாதம் எந்த உருவத்தில் வந்தாலும் அதற்கு நாம் இடமளிக்கக்கூடாது.

அதனால் இனவாதம் மதவாதத்துக்கு எதிராக பிரேரணை கொண்டுவருவதுடன் முடித்துக்கொள்ளாமல் அதற்கு எதிராக தேவையான சட்டங்களை இயற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்கு எம்மால் முடிந்த அர்ப்பணிப்பை மேற்கொள்ள நாம் தயார்.

அத்துடன் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் பல்வேறு விசாரணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டு, அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. என்றாலும் பாதிக்ககப்பட்வர்களுக்கு நீதி கிடைக்கவில்லை என்ற குற்றச்சாட்டு தொடர்ந்தும் இருந்து வருகிறது.

அதேநேரம், இந்த தாக்குதல் தொடர்பில் இன்னும் ஒருசில தரப்பினருக்கு சந்தேகம் இருந்து வருகிறது. இவ்வாறு சந்தேகங்களை வைத்திருப்பது பயங்கரமான விடயமாகும். சமூகத்தில் இவ்வாறு சந்தேகம் இருப்பது நல்லதல்ல. அது எந்த வகையில் வெளிப்படும் என்பது தெரியாது. அதனால் தாக்குதல் தொடர்பில் ஏதாவது ஆதாரங்கள் இருக்குமானால் அது தொடர்பில் விசாரணை மேற்கொள்வதே முக்கியமாகும்.

### நீதவானின் கையொப்பமிட்டு

## பொய்யான முறையில் வழக்கு அறிக்கை தயாரித்த நபர் கைது

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் நிலுவையில் இருந்த வழக்கு தொடர்பில், குற்றஞ்சாட்டப்பட்டவர் அனைத்துக் குற்றச்சாட்டுக்களிலிருந்தும் விடுவிக்கப்பட்டுள்ளார் என நீதவானின் கையொப்பமிட்டு வழக்கு அறிக்கையொன்றை தயாரித்து மோசடி செய்த நபர் ஒருவர் நேற்று முன்தினம் (14) நீர்கொழும்பு விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் குழுவினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் பணியாற்றிய முன்னாள் உத்தியோகத்தர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. குறித்த பொய்யான வழக்கு அறிக்கையை தயாரிப்பதற்காக சந்தேக நபர் 35 இலட்சம் ரூபாவை பெற்றுக்கொண்டுள்ளார் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்டவர் வெலிசர நீதிமன்றத்தில் அலுவலக உதவியாளராக கடமையாற்றிய போது, இவ்வாறான முறையற்ற மோசடியில் ஈடுபட்டு வேலையிழந்து சிறையில் இருந்தவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

வென்னப்புவ பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவருக்கு எதிராக கட்டுநாயக்க விமான நிலைய குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் விதித்திருந்த விமானத் தடையை நீக்கும் வகையில் இந்த பொய்யான வழக்கு அறிக்கையை வழங்கி சந்தேக நபர் 35 இலட்சம் ரூபாவை மோசடியாக பெற்றுக்கொண்டார் எனக் கூறப்படுகிறது.

## வாகன விபத்தில் இருவர் காயம்

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

பாதெனிய அநுராதபுரம் வீதியில் செனரத்கம பகுதியில் (13) பிற்பகல் இடம்பெற்ற வாகன விபத்தில் இரு இளைஞர்கள் காயமடைந்துள்ளனர்.

அநுராதபுரத்திலிருந்து பயணித்த கெப் வாகனம் ஒன்றின் சாரதிக்கு தூக்கம் ஏற்பட்டமையினால் எதிர்த் திசையில் பயணித்த மோட்டார் சைக்கிளுடன் நேருக்கு நேர் மோதி குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர்கள் இருவரும் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



மாத்தளை கல்வி வலயத்திற்குட்பட்ட புத்தகோச மகாவித்தியாலயத்தில் 10 இலட்சம் ரூபா செலவில் பாதுகாப்பு சுற்று மதில் கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது. இதன் நிர்மாண பணியை விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோஹண திஸாநாயக்க ஆரம்பித்து வைப்பதை படத்தில் காணலாம்.

(படம்: மாத்தளை சுழற்சி நிருபர்)

## "தூண்டில்கள் துடிக்கின்றன" கவிதை நூல் வெளியீட்டு விழா







கம்மல்துறை கவிஞர்களின் 100 கவிதைகள் தொகுக்கப்பட்ட "தூண்டில்கள் துடிக்கின்றன" கவிதை நூல் வெளியீட்டு விழாவும், கவியரங்கும் ஞாயிற்றுக்கிழமை (14) கம்மல்துறை, அல்பலாஹ் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் கலை இலக்கிய வட்டத்தின் தலைவர் கலாபூஷணம் எம். ஜே. எம். தாஜுதீன் தலைமையில் கவிஞர் போருத்தொட்ட ரிஸ்மி அரங்கத்தில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக ஓய்வு நிலை தேர்தல் ஆணையாளர் நாயகமும், தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினருமான எம். எம். மொஹமட் (நளீமி) கலந்து கொண்டு நூலின் முதல் பிரதியை தலைவரிடம் பெற்றுக் கொண்டு வெளியிட்டு வைத்தார்.

அதிதிகளாக கலந்துகொண்ட தினகரன், தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர். தே. செந்தில் வேலவர், ஒலிபரப்பாளர் அஷ்ரப் சிஹாப்தீன், வலம்புரி கவிதா வட்டத்தின் தலைவர் கலாபூஷணம், கவிமணி என். நஜ்முல் ஹுசைன், சிரேஷ்ட ஊடகவியலாளரும் 'ஈழத்து நூன்' கலா பூஷணம் எம். ஏ. எம். நிலாம், கம்மல்துறை அல் பலாஹ் கல்லூரியின் அதிபர் எம். யு. பாயிஸ் (நளீமி), பலகத்துறை பெரிய பள்ளிவாசல் தலைவர் எம் முஹம்மத் ஆகியோர்கள் சிறப்புப் பிரதிகளை பெற்றுக்கொண்டனர். இந்நிகழ்வில் கவிஞர்கள் பலரும் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை விசேட அம்சமாகும்.

(இஸ்மதுல் றஹுமான்)

## தென் மாகாண தமிழ் மொழித்தின மாவட்ட எழுத்தாக்கப் போட்டிகள் இன்று

(வெலிகம தினகரன் நிருபர்)

தென் மாகாண தமிழ் மொழித் தின மாவட்ட எழுத்தாக்கப் போட்டிகள் இன்று 16ம் திகதி செவ்வாய்க் கிழமை நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக தென் மாகாண தமிழ் மொழித் தின செயலாளர் அஷ்ஷேக் எம்.எம்.எம். முன்திர் (நளீமி) தெரிவித்தார்.

இதன் பிரகாரம், காலி மாவட்ட போட்டிகள் உஸ்வதுல் ஹஸனா கல்லூரியிலும், பலபிட்டிய வெலிதர பாடசாலையிலும் நடைபெறவுள்ளன. மாத்தறை மாவட்டப் போட்டிகள் வெலிகம மதுராபுர அஸ்ஸபா கல்லூரி, திக்குவல்லை மின்ஹாத் தேசிய பாடசாலை மற்றும் தெனியாய ஹென்பார்ட் கல்லூரி ஆகியவற்றில் நடை பெறவுள்ளதோடு, ஹம்பாந்தோட்டை மாவட்ட போட்டிகள் ஹ/ ஸாஹிரா கல்லூரியில் இடம் பெறவுள்ளன. இப் போட்டிகளில் 561 போட்டியாளர்கள் கலந்து கொள்கின்றனர்.

எழுத்தாகப் போட்டிகள் தவிர்ந்த ஏனைய போட்டிகள் எதிர்வரும் 20ம் திகதி ஹம்பாந்தோட்டை (மாவட்ட போட்டிகள்) யகஸ்முல்ல அல் மீரா முஸ்லிம் வித்தியாலயத்திலும் காலி மாவட்ட போட்டிகள் 24ம் திகதி கிந்தோட்டை ஸாஹிரா தேசிய பாடசாலையிலும் மாத்தறை மாவட்ட போட்டிகள் இம் மாதம் 29ம் திகதி தெனியாய பெவரலிய தமிழ் மகா வித்தியாலயத்திலும் இடம் பெறவுள்ளன.

மாவட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்கள் மாகாண மட்டப் போட்டிகளுக்கு தகுதி பெறுவர்.

## பாஸியதுல் நஸ்ரியாவில் இன்று ஸ்மார்ட் வகுப்பறை திறப்பு

பேருவளை விசேட நிருபர்

பேருவளை மருதானை அல்பாஸியதுல் நஸ்ரியா முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலயத்தில் ஸ்மார்ட் வகுப் பறை திறப்பு விழா மற்றும் இணையதள அங்குராப்பண நிகழ்வு இன்று (16ம் திகதி) மு.ப.9:30 மணிக்கு அதிபர் மஸ்னவியா மூசீன் தலைமையில் நடைபெறவுள்ளது.

களுத்துறை கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.பி. பீரிஸ் பிரதம அதிதியாக கலந்து கொள்வார். பேருவளை கோட்ட கல்விப் பணிப்பாளர் திருமதி எம்.ஆர்.பி.லியனகே, தர்கா நகர் தேசிய கல்வியியற் கல்லூரி முதல்வர் எஸ். பவானந்தன், ரூமி ஹாஷிம் பவுண்டேசன் ஸ்தாபகர் டொக்டர் ரூமி ஹாஷிம் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் முன்னாள் கோட்டக் கல்விப்பணிப்பாளர் டப்ளியூ.ஏ.ஜே.யு. சோமரத்ன, முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் எம். ரி.எம். இல்யாஸ் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து கொள்வர். நூற்றாண்டு விழாவை கொண்டாடும் இப்பாடசாலை இலங்கையில் முதலாவது முஸ்லிம் மகளிர் கல்லூரி என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில், ஊர் பிரமுகர்கள், பெற்றோர்கள், பழைய மாணவிகள் என பலரும் பங்குபற்றுவர்.

## மதுரங்குளியில் அல்ஹாபிழ் நஸ்மிர் நஸ்ருதீன் (தீனி)க்கு மக்களால் வரவேற்பு

புத்தளம் தினகரன் நிருபர்



மதுரங்குளி கனமூலையில் அஷ்ஷெய்க் அல்ஹாபிழ் நஸ்மிர் நஸ்ருதீன் (தீனி) அவர்களை வரவேற்கும் நிகழ்வு அண்மையில் (12) மஸ்ஜிதுன் நூர் தைக்கா பள்ளியில் கனமூலை உலமா ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

இவர், தனது ஆரம்பக் கல்வியை புத்தளம் கனமூலை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தரம் 7 வரை கல்வி கற்று பின்னர் பாணந்துறை தீனியா அரபுக் கல்லூரியில் அல்ஹாபிழ் மற்றும் அல் ஆலிம் பட்டத்தை பெற்றுக் கொண்டு தனது அல்குர்ஆன் மேற்படிப்புக்காக பாகிஸ்தான் ஜாமிஆ பின்னூரியா கலையகத்துக்குச் சென்று (ஸப்உ கிராஅத்) கிராஅத் ஓதக் கூடிய ஏழு முறைகளைக் கற்று பட்டம் பெற்று நாடு திரும்பிய அவருக்கு மகத்தான வரவேற்பளிக்கப்பட்டுள்ளது.

கனமூலை உலமா ஒன்றியத்தின் தலைவரும், கனமூலை உம்முல் பழ்ல் பெண்கள் அரபு பாடசாலை அதிபருமான அஷ்ஷெய்க் அல் ஹாபிழ் ஏ.ஏ. முஜிபுர் ரஹ்மான் (மனாரி) தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் உலமாக்கள், ஊர்மக்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

குறித்த ஆலிம் இப்பிராந்தியத்தில் கிராஅத் ஓதக் கூடிய ஏழு முறைகள் என்ற கலையை கற்று பட்டம் பெற்றிருக்கும் முதல் ஆலிம் என்பது குறிப்பிடத்தக்கது.



அல் அஷ்ரப் மஹா வித்தியாலய பழைய மாணவ சங்க ஏற்பாட்டில் முதல் முறையாக ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வு மாபோலை ஜும்ஆ மஸ்ஜித் திருமண மண்டபத்தில் பாடசாலை அதிபர் அஷ்ஷெய்க் இர்ஷாட் (நளீமி) தலைமையில் நடைபெற்றது. இதன்போது ஆசிரியர் ஒருவர் கௌரவிக்கப்படுவதை படத்தில் காணலாம்.

## வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் பெண் ஒருவர் கைது

லோரன்ஸ் செல்வநாயகம்

ஒரு தொகை வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் பெண் ஒருவர் நேற்றுக்காலை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி பெண் துபாயில் வீட்டுப் பணிப் பெண்ணாக பணி புரிந்து நாடு திரும்பிய நிலையில் அவரிடமிருந்து இந்த வெளி நாட்டு சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் விமான நிலைய சுங்கப் பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள மேற்படி பெண்ணிடமிருந்து 100 வெளிநாட்டு சிகரெட் பெட்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.



## கொழும்பு சாஹிராவின் 80ஆவது குழுவினால் மனிதாபிமான உதவிகள்

ருஸைக் பாரூக்

முஹர்ரம் புத்தாண்டை முன்னிட்டு கொழும்பு சாஹிரா கல்லூரி 80ஆவது குழு பழைய மாணவர்கள் அலுமாரிகள், எழுதுபொருட்கள், சுவர் கடிகாரங்கள், டி சேர்ட் மற்றும் சீருடைப் பொருட்கள் ஆகியவற்றை இரத்மலானையிலுள்ள இஸ்லாமிய அநாதை இல்லத்திற்கு மேமன் மனிதாபிமான சங்கத்தின் ஆதரவுடன் ஞாயிற்றுக் கிழமை (14) வழங்கியது.

இதனை '80 குழுவின் தலைவர் எம்.எம்.எம். முஹீனுத்தீன் மேற்படி பொருட்களை இல்ல முகாமையாளர் மொஹமட் இம்தியாஸ் கௌஸிடம் கையளித்தார்.

இந்நிகழ்வில் 80 வது குழுவின் துணைத் தலைவர்கள் மிஷ்காத் சயிட், இப்தி ஷசான், செயலாளர் இல்யாஸ் பாபு, குழுவின் தலைவர் நுஸ்ரத் ரமீஸ், முன்னாள் தலைவர்கள் ஏ.எல்.அன்வர், அஷ்ரப் ரூமி, ராபி ரசாக், எம்.யு.எம். அஸ்மி, மில்ஹான் லாபிர் உள்ளிட்ட உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

# பலத்த மழை காரணமாக மத்திய மலைநாட்டின் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் வெகுவாக உயர்கிறது

**மஸ்கெலியா நிருபர்**

மத்திய மலைநாட்டில் மேற்கு சரிவு பகுதிகளில் தொடர்ந்து கனத்த மழை பெய்து வருவதால், நீர்த் தேக்கத்தின் நீர் மட்டம் வெகுவாக உயர்ந்து வருகிறது.

மவுஸ்சாக்கலை நீர் தேக்கத்தின் நீர் மட்டம் கொள்ளளவை எட்ட இன்னும் மூன்று அடி மட்டுமே உள்ளது, கென்யோன் கொள்ளளவை எட்டியுள்ளது, விமலசுரேந்திர கொள்ளளவை எட்டியுள்ளது, லக்சபான நீர் மட்டம் வெகுவாக உயர்ந்து இன்னும் நான்கு அங்குலம் மட்டுமே நிறைய உள்ளது, மேல் கொத்மலை கொள்ளளவை எட்ட 6 அங்குலமே நிரம்ப உள்ளது.

தற்போது பெய்து வரும் மழையால் நுவரெலியா மாவட்டத்தில் உள்ள அனைத்து ஆறுகள் அருவிகள் ஒடைகளில் நீர் வரத்து அதிகரித்துள்ளது. இதனால் சகல நீர் தேக்கங்களின் நீர் மட்டம் வெகுவாக உயர்ந்து எந்த நேரத்திலும் வான் கதவுகள் வழியாக நீர் வெளியேற்றப்படலாம். ஆகையால் தாழ் நில பகுதியில் உள்ள அனைத்து மக்களும் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என நுவரெலியா மாவட்ட அரசாங்க அதிபர் நந்தன கலபட வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கன மழை காரணமாக பெருந்தோட்ட தொழிலாளர்கள் இயல்பு வாழ்க்கையும் பண்ணையாளர்களின் இயல்பு வாழ்க்கையும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது அத்துடன் பாடசாலை மாணவர்கள் வருகை மிகவும் குறைந்த நிலையில் காணப்படுகிறது.

# மனிதநேயமுள்ள ஊடகவியலாளர்களால் சமூக மாற்றத்தை கொண்டுவர முடியும்

**(மாவத்தகம தினகரன் நிருபர்)**

உண்மைக்கு உண்மையாக மனித நேயத்தை நேசித்து ஊடகப் பங்களிப்பு செய்பவர்களினால் தான் சிறந்த சமூக மாற்றத்தையும் சுபீட்சமான நாட்டையும் கட்டியெழுப்ப முடியும் என்று ஸம் ஸம் பவுண்டேசன் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் யூசுப் முப்தி தெரிவித்தார்.

ஸம் ஸம் பவுண்டேசன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் கண்டி மாவட்டத்தை மையப்படுத்தி ஊடகவியலாளர்களுக்கான மாநாடு கண்டி தவுலகலவில் அமைந்துள்ள ஸம் ஸம் பவுண்டேசன் பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது.

ஸம் பவுண்டேசன் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் யூசுப் முப்தி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார்.

இதில் அச்சு, இலத்தினியல் சிரேஷ்ட ஊடகவியலாளர்கள், சமூக டிஜிட்டல் இளம் ஊடகவியலாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது ஸம் ஸம் நிறுவனம் நாடளாவிய ரீதியில் நாட்டின் பல்லின மக்களின் மேம்பாட்டுக்காக ஆற்றி வருகின்ற தொண்டுப் பணிகள் தொடர்பான விடயங்களும் வளவாளர்களினால் தெளிவுபடுத்தப்பட்டன.



கேகாலை மாவட்டத்தின் உயன்வத்தை வை.எம்.எம்.ஏ.இன் பெண்கள் பிரிவான வை.டப்ளியூ. எம்.ஏ.இன் அங்குரார்ப்பண நிகழ்வும், வை.எம்.எம்.ஏ. ஏற்பாட்டிலான பெண்களுக்கான தையல் பயிற்சி நெறியை நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வும், உயன்வத்தை வை.எம்.எம்.ஏ. தலைவர் எம். எஸ்.எம். தாரிக் அவர்களின் தலைமையில் மஸ்ஜிதுல் நூர் மத்ரஸா மண்டபத்தில் நடைபெற்ற போது பிடிக்கப்பட்ட படங்கள்.

### மாத்தளை மாவட்டத்தில்

# மதவழிபாட்டுத் தலங்களின் புனர்நிர்மாண பணிக்கு ரூ. ஒன்றரை கோடி ஒதுக்கீடு

**(மாத்தளை சுழற்சி நிருபர்)**

மாத்தளை மாவட்டத்தில் காணப்படும் கஷ்டப் பிரதேச மத வழிபாட்டுத் தலங்களின் புனர்நிர்மாண பணிகளுக்காக ஒரு கோடி ஐம்பத்தைந்து இலட்சம் ரூபா தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக விளையாட்டு துறை மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோஹண திஸாநாயக்க தெரிவித்தார்.

மாத்தளை மாவட்டத்தில் உள்ள 11 செயலாளர் பிரிவுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பௌத்த, இந்து, இஸ்லாம் ஆகிய மத வழிபாட்டுத் தலங்களின் புனர்நிர்மாண பணிகளுக்கே இந்நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் இரத்தோட்ட பிரதேசத்திலுள்ள 17 மத வழிபாட்டுத் தலங்களுக்கு 22,50,000 ரூபாவும் உக்குவளை 19 மத வழிபாட்டுத் தலங்களுக்கு 24 இலட்சம் ரூபாவும் அம்பன் கங்கை கோரள பிரதேசத்தில் 06 வழிபாட்டுத் தலங்களுக்கு 7,50,000 ரூபாவும் நாவுல பிரதேசத்திலுள்ள வழிபாட்டுத் தலங்களுக்கு 11,25,000 ரூபாவும் யட்டவத்த பிரதேசத்தில் உள்ள 16 வழிபாட்டுத் தலங்களுக்கு 1,70,000 ரூபாவும் லக்கல பிரதேசத்தில் உள்ள 05 வழிபாட்டுத் தலங்களுக்கு 8,75,000 ரூபாவும் கலேவல பிரதேசத்தில் உள்ள 09 வழிபாட்டுத் தலங்களுக்கு 10,75,000 ரூபாவும் மாத்தளை பிரதேசத்தில் உள்ள 06 வழிபாட்டுத் தலங்களுக்கு 2,70,000 ரூபாவும் பல்லேபொல பிரதேசத்தில் உள்ள 11 வழிபாட்டுத் தலங்களுக்கு 1,10,000 ரூபாவும் தம்புள்ளை பிரதேசத்தில் உள்ள 11 வழிபாட்டுத் தலங்களுக்கு 1,00,000 ரூபாவும் வில்கமுவ பிரதேசத்தில் உள்ள 05 வழிபாட்டுத் தலங்களுக்கு 70,000ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.






# Invitation for Bids (IFB)

## KARACHCHI PRADESHIYA SABHA, KILINOCHCHI DISTRICT

1. The Chairman , Local Authority Procurement Committee (LAPC)on behalf of the Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi invites sealed bids from eligible and qualified bidders for the works listed in the table below.
2. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty of **Highway Constructions** for grade mentioned in the table below with the Construction Industry Development Authority (CIDA).
3. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB).**
4. Interested bidders may obtain further information from **Secretary, Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi (T.P No : 0212285761, Fax No : 0212285690)** and inspect the bidding documents at the address given below **from 16.07.2024 until 30.07.2024 between 9.00 a.m. and 2.00 p.m.** on normal working days.
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the **Secretary, Karachchi Pradeshiya Sabha,A9 Road, Kilinochchi, from 16.07.2024 until 30.07.2024 between 9.00 a.m. and 2.00 p.m.** upon payment of a non-refundable fee as mentioned in the below table. The method of payment will be by cash.
6. Bids shall be delivered in duplicate to the address **The Chairman, Local Authority Procurement Committee (LAPC), Karachchi Pradeshiya Sabha , A9 Road, Kilinochchi** at or before **2.00 p.m. on 30th July 2024.** Late bids will be rejected. Bids will be opened at above place soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
7. All bids shall be accompanied by a "Bid-Security", as in the table below.
8. The pre-bid meeting will be held on **23.07.2024 at 10.00 a.m. at the Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi.**

**Table**

| S. No. | Bid No. | Name of the Work | Estimated Cost (without VAT) (Rs.Mn.) | Required Bid Security | | CTAD Grade Required (Highways) | Bid shall be valid up to | Contract Period | Non Refunda-ble Fee (Rs.) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | Amount (Rs.) | Validity Period | | | | |
| 1 | NP/KN/ KPS/2024/ PSDG/01 | Construction of 5th Road (Kanakapuram Road – GS Road) | 12.72 | 128,000.00 | 12.11.2024 | C6 or C5 | 15.10.2024 | 3 Months | 3,500.00 |
| 2 | NP/KN/ KPS/2024/ Stamp Duty/01 | Re-Construction of Medras Road Stage - IV | 1.97 | 20,000.00 | 15.11.2024 | C9 or C8 | 17.09.2024 | 3 Months | 3,500.00 |

The address referred to above is :

**Chairman,**
**Local Authority Procurement Committee (LAPC )**
**Karachchi Pradeshiya Sabha, Kilinochchi.** 16.07.2024

**Repeat Your ad For Better Offers**

# உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு

## மருத்துவ உதிரிப்பாகங்களை வழங்குவதற்கான பெறுகை அறிவித்தல்

1. கோரப்பட்ட பொருட்களுக்காக எந்தவொரு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இந்த ஒப்பந்தங்களின் தொழில்தருநர் சார்பாக சுகாதார அமைச்சின் அமைச்சுப் பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

| இல. | உருப்படிகள் | எண்ணிக்கை | மதிப்பீட்டுக் கிரயம் (ரூபா) (மில்லியன்களில் | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | Gas Flow Analyzer | 05 | 40 | 12,500.00 |
| 02 | Patient Simulator (ECG Tester, Respirometer) | 08 | 46 | 12,500.00 |

2. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் இடம்பெறும்.
3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமைப் பெறுவதற்கு, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராகவிருத்தல் வேண்டும்.
4. கொழும்பு-10, இல. 27, டி சேரம் பிளேஸ், உயிரியல் மருத்துவ பொறியியல் சேவை பிரிவின் கணக்காளர் அலுவலகத்தில் விலைக்கோரல்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின் உடன் திறக்கப்படும்.
5. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதிக்காக, ஒவ்வொரு விலைமனுதாரரும் 5 மில்லியன் இலங்கை ரூபாவை விஞ்சும் கேள்வியிடல் தொகையின் பொருட்டு 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ஆம் பந்தியின் கீழ் கம்பனிப் பதிவாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2024-07-16ஆம் திகதி முதல் 2024-08-12ஆம் திகதி வரையான பொதுவான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கொழும்பு-10, இல. 27, டி சேரம் பிளேஸ், உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவிலிருந்து முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்தில் செலுத்துதல் வேண்டும்.
7. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென இரு பிரதிகளில் முன்வைத்தல் வேண்டும். மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளை வெவ்றோன இரு உறைகளில் இட்டு ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' எனக் குறிப்பிட்டு முத்திரைக்குறியிடப்பட்ட உறையினுள் இட்டு, அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு, முத்திரைக் குறி பொறித்து அவ்வுறையின் இடதுபக்க மேல் மூலையில் ''ஒப்பந்தப் பெயர் மற்றும் இலக்கம்'' என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும். விலைமனுக்களை 2024-08-13ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் தலைவர், பிரதேச பெறுகைக் குழு, உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு, இல. 27, டி சேரம் பிளேஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்குக் கிடைக்கச்செய்தல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
8. விலைமனுக்கள் 2024-11-12ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும். விலைக்கோரல் பிணைமுறியாக நிபந்தனையற்ற மற்றும் கோரிக்கை வங்கி உத்தரவாதம் 2024-12-10ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
9. மேலதிக விபரங்களை உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவின் கணக்காளரிடமிருந்து 2684732 எனும் தொலைபேசி இலக்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**அமைச்சுப் பெறுகைக் குழு,**
**சுகாதார அமைச்சு,**
**கொழும்பு 10.**

## கேள்விகோரல் அழைப்பு

### முதலமைச்சு
### சபரகமுவ மாகாண சபை

சபரகமுவ மாகாண சபையின் முதலமைச்சின் கீழான விடயங்களுடன் சம்பந்தப்பட்ட பல அபிவிருத்தி திட்டங்களுக்கு தகைமையுள்ள மற்றும் திறமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து சபரகமுவ மாகாண முதலமைச்சு பெறுகைக் குழுவின் தலைவரால் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

மேலதிக விபரங்கள் www.sg.gov.lk இணையதளத்திற்கு சென்று அங்குள்ள முதலமைச்சு இணையதள பக்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இக் கைத்தொழில் பற்றிய விபரங்களை முதலமைச்சிற்கு வருகைதந்து அல்லது தொ. பே. இலக்கம் 045-2222204 இடமிருந்து அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். தேவைப்படும் ஒருவருக்கு இலவசமாக வாரத்தின் வேலை நாட்களில் கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

2024.07.16 முதல் 2024.08.05 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கேள்விப் பத்திரங்கள் விநியோகிக்கப்படும்.

2024.08.06 பி.ப 2.30 வரை கேள்விப் பத்திரங்கள் ஏற்கப்படும்.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**முதலமைச்சு**
**சபரகமுவ மாகாண சபை**
**நவநகரம், இரத்தினபுரி.**
**045-2222204**

---

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு அரசாங்கம்

### போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
### வீதி அபிவிருத்தி அதிகாரசபை

**1500கிமீ திட்டத்தின்கீழ் அகலவத்த நிறைவேற்று பொறியியலாளரின் பிரிவில் வாகனம் செல்லக்கூடிய தூரம் வரையிலான வீதியின் புனர்நிர்மாணம்**

| Contract No. | Description of work | CIDA Registration Grade required |
|---|---|---|
| RDA/ SP/1500KM/ WP/10 | Paving of Interlocking concrete blocks inclusive 50mm Sand bedding material (included supply & transport of sand) in Kuduneriya Samagi Mawatha. (Paving blocks will be supplied by RDA | C6/C7 |
| | Construction of Edge Concrete (grade 20) for Interlock sections including formwork in Kuduneriya Samagi Mawatha (including material) | |

தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் 1500 கிமீ திட்டத்தின் கீழ் வாகனம் செல்லக்கூடிய தூரம் வரையிலான வீதிகளின் புனர்நிர்மாணத்திற்காக விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர் **www.rda.gov.lk** என்ற வீஅஅ மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணையபக்கத்தை 2024 ஜூலை 16 ஆம் திகதியிலிருந்து 2024 ஆகஸ்ட் 06 ஆம் திகதியன்று வரையும் பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

---


Best way to fulfil your Future Dreams

Marriage Proposals

in the

Sunday Observer


---

## பெறுகை அறிவித்தல்

### நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு
### தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்

DNCWS

## கேள்வி மனுக்கோரல்

திணைக்கள குழுவின கொள்முதல் தலைவரினால் பின்வரும் பணிகளுக்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

| பெயர் மற்றும் ஒப்பந்தத்தின் பெயர் | தகைமைகள் | மீளளிக் கப்படாத கட்டணம் LKR | மனு செல்லுப டியாகும் (நாட்கள்) | மனுப் பாதுகாப்பு LKR | மனுப் பாதுகாப்பு செல்லுபடி யாகும் (நாட்கள்) | மனுக்கள் மூடப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|
| Civil Works at Galle District Niyagama Maththaka, Parakum CBO **Contract No: DNCWS/ PRO/2024/ CV/GA/03** | CIDA Grade C5/C4/C3 | 10,000.00 | 91 | 470,000 | 04.12.2024 | 2024.08.06 மு.ப.10.00 |
| Civil Works at Galle District,Thawalama , Weerapana West, Ekamuthu CBO , **Contract No: DNCWS/PRO/2024/CVGA/04** | CIDA Grade C5/C4/C3 | 12,000.00 | 91 | 515,000 | 04.12.2024 | |
| Civil Works at Galle District,Thawalama , Thalangalla , Panvila CBO , **Contract No: DNCWS/PRO/2024/CVGA/05** | CIDA Grade C4/C3 | 16,000.00 | 91 | 885,000 | 04.12.2024 | |
| Civil Works at at Kegalle District, Deraniyagala Dikellakanda, Dikellakanda CBO **Contract No: DNCWS/PRO/2024/CV/KG/05** | CIDA Grade C4/C3 | 14,000.00 | 91 | 800,000 | 04.12.2024 | |
| Civil Works at Rathnapura District, Kuruvita, Miyanadeniya , Owitigama CBOs **Contract No: DNCWS/PRO/2024/CV/RT/02** | CIDA Grade C6/C5/C4 | 7,500.00 | 77 | 250,000 | 21.11.2024 | |
| Civil Works at Nuwaraeliya District, Hagurankethа Karamidula Nildiya CBO **Contract No: DNCWS/PRO/2024/CV/NE/03** | CIDA Grade C6/C5/C4 | 3,000.00 | 77 | 125,000 | 21.11.2024 | |
| Civil Works at Kandy District, Medadumbara ,Maneluwa, Randiya CBO **Contract No: DNCWS/PRO/2024/CV/KA/01** | CIDA Grade C6/C5/C4 | 7,500.00 | 77 | 245,000 | 21.11.2024 | |
| Civil Works at Vavunia District, Periyakattu ,Periyakattu CBO , **Contract No: DNCWS/PRO/2024/CV/VU/01** | CIDA Grade C7/C6/C5 | 2,500.00 | 77 | 75,000 | 21.11.2024 | |
| Construction of Plant Rooms and Installation RO/Nano Plants Monaragala , Batticaloa ,Puttalam District, CBO **Contract No: DNCWS/PRO/2024/Nano/01** | CIDA Grade C7 /3Year Experience of Nano Plants Installation | 4,000.00 | 77 | 180,000 | 21.11.2024 | |
| நீர் வழங்கல் மற்றும் கழிவுநீருக்கான CIDA பதிவு கட்டாயமாகும் | | | | | | |

**மேல் குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கான பொது விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் :**

01. கோள்விப்பத்திரங்களை **கடிதத்தலைப்பில் எழுதப்பட்ட கோரிக்கை மற்றும் மீள்ச்செலுத்தப்படாத கட்டணத்தைச் செலுத்திய பற்றுச்சீட்டினை** தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் 2 வது மாடியில் உள்ள கொள்முதல் பிரிவில் சமர்ப்பித்து மனு ஆவணங்கள் பெற்றுக்கொள்ளலாம் (மனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள கொள்முதல் பிரிவைத் தொடர்பு கொள்ளவும்).
02. மனு ஆவணங்கள் **2024.08.05 ஆம் திகதி வரை** வழங்கப்படும். **(மு.ப.09.00 மணி முதல் பி.ப. 2.45 வரை)**
03. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களை தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்வதுடன் **சாதாரண வேலை நாட்களில் (மு.ப.09.00 மணி முதல் பி.ப. 3.00 வரை)** ஆவணங்களை வழங்கும் இடத்தில் **மனு ஆவணங்களை** இலவசமாகப் பரிசீலனை செய்யலாம்.
04. கேள்வி மனுக்களை திணைக்களத்தின் 2வது மாடியில் **(கொள்முதல் பிரிவில்)** வைக்கப்பட்டுள்ள விலைமனுக்கோரல் பெட்டியினுள் இடல் அல்லது கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு **பதிவுதபால் மூலமாக அல்லது விரைதூதர் மூலமாக** அனுப்பிவைக்க வேண்டும்.
05. மேலதிக தகவலுக்கு, பணிப்பாளரை **(கொள்முதல்)** தொடர்பு கொள்ளவும் - **தொலைபேசி 011 2 774927.**
06. கேள்வி மனுக்கள் மனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அதே முகவரியில் **2024.08.06** ஆம் திகதி **மு.ப.10.15** மணிக்கு மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி கலந்துகொள்ளத் தேர்ந்தெடுக்கும் மனுதாரரின் பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும். தாமதமான ஏலங்கள் திறக்கப்படாமல் திருப்பி அனுப்பப்படும்.
07. **மனுப் பாதுகாப்பு பணிப்பாளர் நாயகம், தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம், இல-1114, பன்னிபிட்டிய வீதி, தலவத்துகொடைக்கு** முகவரியிடப்படல் வேண்டும்.
08. மேலே உள்ள அனைத்து ஒப்பந்தங்களுக்கான மனு ஆவணத்துடன் PCA 03 படிவம் இணைக்கப்பட வேண்டும்.

தலைவர்,
திணைக்களத்தின் பெறுகை குழு,
**தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்,**
இல-1114, பன்னிபிட்டிய வீதி, தலவத்துகொட.
**2024.07.16**

SELACINE

---

## விலைமனுக்களுக்கான அழைப்பு
## மாவட்டச் செயலகம் நுவரெலியா

நுவரெலியா மாவட்டச் செயலகத்தினால் 2024-07-08ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட பெறுகை அறிவித்தலில் விலைமனுக்கள் வழங்கப்படும் இறுதி நாள் 2024-07-26ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதென்பதுடன் விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் மற்றும் நேரம் 2024-07-29ஆம் திகதி மு.ப. 11.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது. விலைமனுக்கள் திறக்கப்படுதல் அன்றைய தினமே மு.ப. 11.15 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும். அவ்வாறே விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2024-07-22ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இடம்பெறும்.

**பீ.கே.ஜீ.ஏ.ஆர்.பீ.கே. நந்தன,**
**அரச அதிபர் / மாவட்டச் செயலாளர்,**
**நுவரெலியா நிர்வாக மாவட்டம்.**

---

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கம்
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
### வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## ABC ஐ வழங்குவதற்கான விலைமனுக்களுக்கான அழைத்தல்

**[IFB No.: RDA/CE/MNG/2024/01]**

மேலேயுள்ள IFB இலக்கத்தின் கீழ் மொனராகல மாவட்டத்தில் ABC ஐ வழங்குவதற்காக முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சார்பாக மொனராகல பிரதான பொறியியலாளரின் பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

ஆர்வமுள்ள விலைமனுதாரர் 2024.07.16 ஆம் திகதியிலிருந்து 2024.08.05 ஆம் திகதியன்று வரையும் www.rda.gov.lk என்ற வீஅஅ இன் இணைய பக்கத்தை பார்வையிடுமாறும் அல்லது 055-2276597/0572222170 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**பிரதான பொறியியலாளர் (மொனராகல)**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

---

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
### சுகாதார அமைச்சு
திருகோணமலை துறைமுக பயணிகள் தனிமைப்படுத்தப்படும் பிரிவின் வசதிகளை மேம்படுத்தல்

## விலைமனுக்கோரல்

| | |
|---|---|
| Date: | 04.07.2024 |
| Loan/Grant No. and Title | ADB Grant No.: 0618 - SRI, Health System Enhancement Project |
| Contract No. and Title | HSEP/PMU/PRO/W30.4/04/2024 Procurement of Facility improvements to Trincomalee Harbour Passenger Quarantine Unit W30.4 |
| Deadline for Submission of Bids | 08.08.2024 at 10.00 a.m |

**2024.07.04** ஆம் திகதி வெளியிடப்பட்ட மேற்படி கொள்முதலுக்கான விலைமனுக்கோரலில் பின்வரும் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

விலைமனுக்களை ஏற்றுக்கொள்வதற்கான கடைசித் திகதி மற்றும் நேரம் **2024.08.08 ஆம் திகதி மு.ப.10.00 வரை** நீடிக்கப்பட்டுள்ளது.

கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள முகவரியில் **2024.08.08 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு** முன் சமர்ப்பிக்கப்பட வேண்டும் மேலும் மனுக்கள் கிடைத்தவுடன் உடனடியாக திறக்கப்படும்.

தலைவர்/திட்ட பணிப்பாளர்,
செயற்திட்ட கொள்முதல் குழு,
சுகாதார அமைப்பு மேம்படுத்தும் செயற்திட்டம்,
இல-3/19, கின்சி வீதி, கொழும்பு 08, இலங்கை.
திகதி : 2024.07.16

SELACINE

---

## மஹரகம பௌத்த இளைஞர் சங்கம்

### 1998 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க மஹரகம பௌத்த இளைஞர் சங்கத்தினை கட்டிணைக்கும் சட்டத்தினை திருத்தியமைக்கும் உத்தேச சட்டம்.

உதய கம்மன்பிள ஆகிய நான் ஜனநாயகக் குடியரசுப் பாராளுமன்ற 53 (1) இலக்க நிலையான கட்டளைகளுக்கு அமைவாக “1998 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க மஹரகம பௌத்த இளைஞர் சங்கத்தினை கட்டிணைக்கும் சட்டத்தினை திருத்தியமைப்பதற்கான உத்தேச சட்டத்தினை” பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு கருதுவதாக இத்தால் அறியத்தருகின்றேன்.

சட்ட வரைவின் நோக்கமாவது கீழ்க்கானும் திருத்தங்களை குறித்த அச்சட்டத்திற்கு உள்வாங்குவதாகும்.

01. பிரதான சட்டத்தின் “முகாமைத்துவக் குழு” எனும் சொற்களுக்குப் பதிலாக “நிர்வாகக் குழு” எனும் சொல்லினை பதிலீடு செய்தல்.
02. பிரதான சட்டத்தின் 5 ஆம் பிரிவில் 1 ஆவது உப பிரிவில் “தலைவர், உப தலைவர் மூவர் செயலாளர், உப செயலாளர், பொருளாளர், உப பொருளாளர் மற்றும் மேலும் இருபத்தி நான்கு உறுப்பினர்கள் என்பதற்குப் பதிலாக தலைவர் ஒருவர், செயலாளர் ஒருவர், பொருளாளர் ஒருவர், பிரதித் தலைவர் ஒருவர், பிரதி செயலாளர் ஒருவர், பிரதிப் பொருளாளர் ஒருவர், உப தலைவர்கள் மூவர், உப செயலாளர்கள் மூவர், உப பொருளாளர்கள் மூவர் மற்றும் இருபத்தி நான்கு உறுப்பினர்களுடன்” என்ற விடயம் பதிலீடு செய்யப்பட்டு குறித்த அந்தப் பிரிவு திருத்தம் செய்யப்படல்.

உதய கம்மன்பிள
பாராளுமன்ற உறுப்பினர்

---


Trusted Marketplace of Classified Advertisers

Sunday Observer adz Classified




For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-

077 7 278 948 / 011 2 429 342/ 343 / 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk

Hand over your Classified Advertisements to Our nearest Branch Office

Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

### 112 மெஸ்டா கார்கள் விற்பனைக்கு

KL-2770 MAZDA, 2004, CAR கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பி எல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு - 03. தொ.பே 0714542958. 047299

### 118 ஜீப்புகள், பிக்கப்புகள் விற்பனைக்கு

KV-6206 MITSUBISHI MONTERO, 2013, கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு - 03. தொ.பே 0714542958. 047311

### 119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு

PV-9323 TATA ACE, 2012, கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு - 03. தொ.பே. 0711210810. 047297

### 122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

AAS-382 2 BAJAJ - 2014, ABH-2008 BAJAJ - 2015, THREE W HEEL கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பி எல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு - 03. தொ.பே. 0711210810. 047304

### 128 டயர்கள், டியூப்புகள் விற்பனைக்கு

டயர் டியூப் - வெளிநாட்டிலிருந்து டயர் தருவிப்போர் - JCB, மோட்டர் கிரேடர், பெகோ, போக்லிப்ட், செலினிட்டர் - 600 x 9 - 700 x 12 ஆர்பிடெக் டயர் நிரப்பும் போது தேவைப்படும். 700 x 1670 - 16 x 100 x 20 பஸ் உரிமையாளர்களுக்கு விசேட விலை 135, கிரவுன் டயர், கொழும்பு - 14. 077 - 3134060 044401

## வர்த்தகம்

### 207 வியாபார ஸ்தலம் விற்பனைக்கு

நிட்டம்புவ 316ல் அமைந்துள்ள வர்த்தகக் கட்டிடம் ஒன்று விற்பனைக்கு உள்ளது. இடம் நிட்டம்புவ - கண்டி வீதி பிரதான சந்தியில் அமைந்துள்ளது. தொடர்பு கொள்ள - 0726545355, 0756811351. 047703

## வேலைவாய்ப்பு

### 312 வெற்றிடங்கள் தொழில் நுட்பம்

சுத்திகரிப்பு ஆண்/ பெண் ஊழியர் வெற்றிடங்கள். 20 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்ட ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். தங்குமிட வசதிகள் மற்றும் உணவு பானங்கள் இலவசம். சீருடை இலவசம். கவர்ச்சியான சம்பளத்துடன் மேலதிக நேர கொடுப்பனவுகள். சுத்திகரிப்பு மற்றும் பராமரித்தல் வேலைகள் பற்றிய அனுபவம் மற்றும் கடும் நம்பிக்கை, ஆர்வம் உள்ள உங்களுக்கு கல்வித் தகைமைகள் முக்கியமில்லை. அழையுங்கள் தொ.பே. இலக்கம் - 0766845349. (நாட்டின் எப்பாகத்தில் உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்.) 046170

OBSERVER adz TRUSTED CLASSIFIED GUIDE it's what you want | தினகரன் வாரமஞ்சரி

Promotional Rates for Classified Advertisements (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,000/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,300/- |

Gampaha District

Gampaha - 033 22 23 464
1602 - A. L. T. L. Liyanarachchi - Hemas Bookshop, No. 12, Orutota Road, Gampaha.

Wattala - 011 2 937 989
1522 - K. Dharmadasa - Dasa Brothers, Supermarket Building, Hendala Junction, Wattala.

Nilpanagoda - 077 8 627 321
1570 - K. L. Somasiri - 233/5, Diyulapitiya Road, Nilpanagoda.

Wattala - 011 2 932 511
1589 - J. A. Ranil Virendra Anthony Rodrigo - 660/12, Mabola Wattala.

Kochchikade - 031 22 78 359
1606 - M. S. A. Chaminda Fernando - Vinoda Advertising, No. 119/A, Chilaw Road, Kochchikade.

Batuwatta - 071 8 921 271
1626 - H. D. George - Renuka Grocery, No. 118/1, Station Road, Batuwatta.

Dunagaha - 077 3 517 752
1637 - H. Guththila Sarathchandra - Nelligaha Niwasa, Dunagaha.

Ja-Ela - 011 2 947 379
1659 - K. Dharmadasa - Dasa Brothers, No. 73, Main Street, Ja-Ela.

ADZ HOTLINE - 011 2 429 369

CALL - 011 2 429 342/ 343

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## கைத்தொழில் அமைச்சு

### இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்

### இல்மனைட் தரத்தை மேம்படுத்துவதற்காக பெனல் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட உதிரிப்பாகங்கள் சகிதம் பிரித்தெடுக்கும் பொறித்தொகுதியொன்றை வடிவமைத்தல், கட்டமைத்தல், நிறுவுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்

**விலைமனு எண்: LMSL/SUP/DPC/12/2024**

01. இல்மனைட் தரத்தை மேம்படுத்துவதற்காக பெனல் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட உதிரிப்பாகங்கள் சகிதம் பிரித்தெடுக்கும் பொறித்தொகுதியொன்றை வடிவமைத்தல், கட்டமைத்தல், நிறுவுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் எனும் பணிக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இராஜகிரிய, சரண மாவத்தை, 341/13ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட் சார்பில் திணைக்களப் பெறுகைக் குழுத் (DPC) தலைவர் அழைக்கின்றார்

| உருப்படி எண் | பொருட்களின் விபரம் | தேவைப்படும் விலைமனுப் பிணை (ரூபா) |
|---|---|---|
| 01 | இல்மனைட் தரத்தை மேம்படுத்துவதற்காக பெனல் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட உதிரிப்பாகங்கள் சகிதம் பிரித்தெடுக்கும் பொறித்தொகுதியொன்றை வடிவமைத்தல், கட்டமைத்தல், நிறுவுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் | 4,000,000.00 |

02. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல் நடைமுறை ஊடாக விலைக்கோரல் செயற்பாடுகள் இடம்பெறும்.

03. இராஜகிரிய, சரண மாவத்தை, 341/13, இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட், வழங்கல் முகாமையாளரிடமிருந்து ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் 2024-07-16ஆம் திகதி முதல் 2024-08-06ஆம் திகதி லரை ஆரம்பமாகும் எந்தவொரு வேலை நாளிலும், மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை அதே முகவரியில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

    தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கங்கள் 011-2882025/2883951/2883952

04. இராஜகிரிய, சரண மாவத்தை, 341/13, இலங்கை கனிப் பொருள் மணல் லிமிட்டெட் வழங்கல் முகாமையாளருக்கு ஒரு எழுத்துருவிலான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் மீளளிக்கப்படாத கட்டணமாக முப்பத்தையாயிரம் ரூபாவை (ரூ. 35,000.00) ரொக்கப் பணமாக செலுத்துவதன் மூலம் 2024-07-16ஆம் திகதி முதல் 2024-08-06ஆம் திகதி வரை மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணி வரை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணங்களின் தொகுதியொன்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

05. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை தலைவர், திணைக்களப் பெறுகைக் குழு (DPC), மே/பா இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட், 341/13, சரண மாவத்தை, இராஜகிரிய எனும் முகவரிக்கு 2024-08-07ஆம் திகதி பி.ப. 2.30 அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும் அல்லது இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தாமதமாகும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனு திறப்பில் கலந்து கொள்ள ஆர்வமுள்ள விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் மூடப்பட்டதன் பின்னர் உடனடியாகத் திறக்கப்படும்.

06. விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 91 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும்.

07. சகல விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட வகையில் இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட் பெயரிலான 2024-08-07ஆம் திகதி முதல் 2024-11-20ஆம் திகதி வரையில் அல்லது நீடிக்கப்படும் எந்தவொரு காலத்திற்கும் செல்லுபடியாகும் வகையில் விலைமனுப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

08. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று புல்மோட்டையிலுள்ள இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட் கூட்ட அறையில் நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்.**

# விவசாயத் திணைக்களம் கிழக்கு மாகாணம்

## பெறுகை அறிவித்தல்

**கிழக்கு மாகாண விவசாயத் திணைக்கள பெறுகை குழுவின் தலைவரினால் பின்வரும் விடயம் தொடர்பான கேள்விகள் கோரப்படுகின்றன.**

| S No | Bid NO | Details | Qty | Bid Security Amount | Non Refundable fee Rs | Bid Security Validity Period | Programme |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | | Intercultivator | 10 | | | | |
| 02 | | Brush Cutter | 60 | | | | |
| 03 | | Power Sprayer | 20 | | | | |
| 04 | | Knapsack Sprayer | 20 | | | | |
| 05 | | Grass Cutter | 20 | | | | |
| 06 | | Solar Powered Rechargable Knapsack Sprayer | 35 | | | | |
| 07 | | Inter Cultivator (Power Weeder) | 11 | | | | |
| 08 | | Rice Flour Grinder | 21 | | | | |
| 09 | | Chilli Grinder | 05 | | | | |
| 10 | | Popcorn Machine | 05 | | | | |
| 11 | | Multi Purpose Disc Mill | 20 | | | | |
| 12 | GOSL/EP/25/PRO/ Agri. Equipments/2024-02 | Insect Proof Net | 113 | 250,000.00 | 3,500.00 | 2024.11.18 | PSDG |
| 13 | | Decorticator | 02 | | | | |
| 14 | | Dehuller - Black Gram | 01 | | | | |
| 15 | | Tarpaulin 15' x 20' | 126 | | | | |
| 16 | | Plastic Crates | 66 | | | | |
| 17 | | Secateur | 82 | | | | |
| 18 | | Pruning saw | 82 | | | | |
| 19 | | Moth Repellent Light Trap | 06 | | | | |
| 20 | | 500M$^2$ Sprinkler Unit | 20 | | | | |
| 21 | | 1/4 Acre Sprinkler Unit | 35 | | | | |
| 22 | GOSL/EP/25/PRO/ Water & Sprinkler/2024-03 | 1" Electric Water Pump | 82 | | | | |
| 23 | | 2" Electric Water Pump | 105 | 150,000.00 | 3,500.00 | 2024.11.18 | PSDG |
| 24 | | Kerosene Water Pump | 05 | | | | |
| 25 | GOSL/EP/25/PRO/ Solar powered Fence/2024-04 | Solar Powered Electric Fence | 152 | 60,000.00 | 3,500.00 | 2024.11.18 | PSDG |

1. பெறுகை ஆவணங்களினை 16.07.2024 ஆம் திகதியிலிருந்து 05.08.2024 ஆம் திகதி வரை அலுவலக நேரத்தில் காலை 9.00 மணியில் இருந்து மாலை 3.00 மணிவரை திருகோணமலை கன்னியாவீதி, வரோதயநகரில் அமைந்துள்ள கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ள முடியும். இதற்காக இலங்கை வங்கி திருகோணமலை பிரதான கிளையில் (கிளை இல.006) மாகாணப் பணிப்பாளர், விவசாயத் திணைக்களம்,கிழக்கு மாகாணம் என்ற பெயரில் கணக்கு இலக்கம் 0005849161 இற்கு மீளச் செலுத்த முடியாத வைப்புப் பணமாக ரூபா.3,500.00 இனை தலா ஒவ்வொரு ஆவணத்திற்கும் செலுத்த வேண்டும்.
2. பெறுகை ஆவணங்களை மூடப்பட்ட உறையிலிட்டு 06.08.2024ஆம் திகதி முப 10.00 மணிக்கு முதல் கிடைப்பதற்காக தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, விவசாயத் திணைக்களம், கிழக்கு மாகாணம்,கன்னியாவீதி, வரோதயநகர், திருகோணமலை எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது கையால் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கும் பெறுகை ஆவணத்தின் உறையின் இடது பக்க மூலையில் பெறுகை இலக்கத்தினை குறிப்பிடுவது கட்டாயமானதாகும்.
3. உரிய நேரத்திற்கு பின் உடனே (06.08.2024) மு. ப. 10.01 மணிக்கு பெறுகை ஆவணங்கள் திருகோணமலை கன்னியாவீதி ,வரோதயநகரில் அமைந்துள்ள கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தில் திறக்கப்படும். இதற்காக பெறுகைதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் பங்குபற்ற முடியும்.
4. இவ் விலைமனுக் கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலோ இப்பூரண நடவடிக்கையிலிருந்து எவருக்கும் நட்ட ஈடு எதுவும் செலுத்தாமலே இவ்விலை மனுக்கோரலை இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுத் தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.
5. மேலதிக விபரங்களை கன்னியாவீதி, வரோதயநகர், திருகோணமலை, கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தில்,மாகாணப் பணிப்பாளரிடம் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளமுடியும்.

   தொலைபேசி : 026-2222665 / 026-2223077
   தொலைநகல் : 026-2222153 / 026-2223077

**D.M.S.B.திசாநாயக்க**
**மாகாணப் பணிப்பாளர்,**
**விவசாயத் திணைக்களம்,**
**கிழக்கு மாகாணம்,**
**கன்னியாவீதி, வரோதயநகர்,**
**திருகோணமலை.**

# பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை - களுத்துறை

## கேள்விக்கான அழைப்பு

01. களுத்துறை பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் பிரதேச பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ்க்காணும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விக்காக அழைப்பு விடுக்கப்படுகின்றது.

| கேள்வி இணைப்பு இலக்கம் | கேள்விப் பெயர் | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் (ரு) | கேள்விப் பிணையின் பெறுமதி (ரு) |
|---|---|---|---|
| RDHSK/PRO 02/2024/63 | Supply, Delivery, Installation and Commissioning of Air Condition Machines | 2,000.00 | 50,000.00 |
| RDHSK/PRO 02/2024/64 | Supply & Delivery of Laptops, Mini Desktop Computer, Monitor, Printers,Ups, & Multimedia Projectors | 2,000.00 | 42,000.00 |
| RDHSK/PRO 02/2024/65 | Supply and Delivery of Furniture | 2,000.00 | 35,000.00 |
| RDHSK/GB/2/5/2024 | Procurement of Annual Maintenance & Servicing of Generators 2024/2025 | 2,000.00 | 30,000.00 |

02. தேசிய போட்டி கேள்விகோரல் முறைமையின் கீழ் கேள்விகோரல் நடைபெறும்.

03. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை, த.பெ. 29, கச்சேரி கட்டிடத்தொகுதி, 04ம் மாடி, பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் நிர்வாக அதிகாரியிடம் பெற்றுக் கொள்ள முடிவதுடன் கேள்வி ஆவணங்களை மேற்படி அட்டவணையில் தரப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணங்களை பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனைக்குச் செலுத்திய பின்னர் 2024.07.16 முதல் 2024.08.05 வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கொள்வனவு செய்யலாம்.

04. கேள்விகளைச் சமர்ப்பிக்கும் போது பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் களுத்துறை பெயரில் 2024.10.31 வரை செல்லுபடியாகும் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்துள்ள, இலங்கைக்குள் செயற்படும் வர்த்தக வங்கியிலிருந்து மேலே அட்டவணையில் தரப்பட்டுள்ள தொகைக்குச் சமமான கேள்விப் பிணையொன்றை பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

05. முறைமையாக பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகள் இரு பிரதிகளுடன், மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிடப்பட்டு, வேறு வேறாக இரு உறைகளில் இட்டு பொறியிட்டு அவ் உறைகள் இரண்டையும் தனி பொறியிடப்பட்ட உறையில் இட்டு இடது பக்க மேல் மூலையில் கேள்வி இணைப்பு இலக்கம் மற்றும் கேள்விப் பெயரினைக் குறிப்பிட்டு 2024.08.06 மு.ப. 10.30 இற்கு அல்லது அதற்கு முன்பு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அல்லது மேற்படி முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்வி உள்ளிடும் பெட்டியில் உள்ளிடலாம்.

06. தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படுவதுடன் கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விப் பத்திரங்கள், கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

07. மேலதிக விபரங்களுக்காக பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையில் 034 - 2222610, 034 - 2222367ஐ அழையுங்கள்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை, களுத்துறை.**



# அறிவித்தல் – 2024

## திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை உப்புவெளி, திருகோணமலை

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட திருகோணமலை வளாகம், கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு முன்புறமாக உள்ள கோணேசபுரி வீதியில் அமைந்துள்ள 185 பேர்ச் விஸ்தீரணமான நிலப்பரப்பில் அமைந்துள்ள கடைத்தொகுதியும், அதனுடன் சேர்ந்த கட்டிடங்களும் பல்கலைக்கழக மாணவர்கள் தங்குமிடம் விடுதியாக புனர்நிர்மாணம் செய்து நடாத்துவதற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குத்தகைக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் கீழ் வரும் நிபந்தனைகளை உள்ளடக்கிய வெற்றிகரமான முன்மொழிவுகளை திருப்திகரமாக 2024.07.16 ஆந் திகதியிலிருந்து 2024.08.06 ஆந் திகதி வரை 21 நாட்களுக்குள் சமர்ப்பித்தல் வேண்டும்.

**குத்தகை நிபந்தனைகள்**

1. இவ் ஆதனம் தொடர்பான சகல உரிமைகளையும் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபையே கொண்டிருக்கும்.
2. குத்தகைக்கு பெறுபவர்கள் விடுதிக்கான கட்டிடங்களை தாங்களே புனரமைத்து மற்றும் தேவைப்படும் கட்டிட நிர்மாண வேலைகளை தமது செலவில் மேற்கொள்ள முடியும்.
3. குறித்த கட்டிட நிர்மாணங்கள் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் திட்டமிடல் குழுவின் அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.
4. குத்தகைக்குரிய காலம் நிர்மாண வேலைகள் முடிவுற்ற காலத்திலிருந்து நீண்ட கால குத்தகையின் அடிப்படையில் வழங்கப்படும்.
5. கட்டிடம் அமைப்பதற்கான செலவுகள், குத்தகைக் கட்டணங்கள், மின் கட்டணங்கள், நீர் கட்டணங்கள் போன்ற விடயங்கள் சித்திகர விண்ணப்பதாரரால் செலுத்தப்படல் வேண்டும்.
6. குத்தகை காலம் நீடிப்பது திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபையே தீர்மானிக்கும்.
7. எக்காரணத்தின் அடிப்படையிலும் குத்தகைதாரர் குத்தகைக்கு பெற்றுக்கொண்ட திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை ஆதனத்திற்கு உரிமைகோர முடியாது.
8. குத்தகையாளர் இக் கடைத்தொகுதியை உப குத்தகைக்கு கொடுக்கவோ, உரிமையை மாற்றவோ, தரகுக்குக் கொடுக்கவோ, முகாமைத்துவம் அல்லது மேற்பார்வை செய்ய எவருடனும் எந்தவித உடன்படிக்கையை எழுதவோ அல்லது வியாபார ஒப்பந்தமோ செய்யமுடியாது.
9. யாதொரு காரணமும் காட்டாது குத்தகை முழுவதையுமோ அல்லது பகுதியையோ ஏற்கவோ, நிராகரிக்கவோ சபைக்கு அதிகாரமுண்டு. இதனால் ஏற்படும் செலவுக்கு நஷ்டஈடு கோர குத்தகையாளருக்கு உரிமையில்லை.
10. கேள்வி விண்ணப்பம் சமர்ப்பிப்பது தொடர்பான எதுவித செலவினங்களும் சபையால் மீளளிக்கப்படமாட்டாது.

**செயலாளர்**
**திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை,**
**உப்புவெளி**




# விலைமனுக்களுக்கான அழைப்பு

**சிற்றுண்டிச்சாலையை நடாத்திக்கொண்டு செல்லல் 2024 - 2025 வருடம்**

## மாவட்ட பொது வைத்தியசாலை – மாத்தறை

1) மாத்தறை மாவட்டபொது வைத்தியசாலையில் சிற்றுண்டிச்சாலையை நடாத்திக்கொண்டு செல்லல் மற்றும் மருத்துவ அதிகாரிகள் பொழுதுபோக்கு இல்லத்தில் உணவுபானங்களை தயாரித்துக் கொடுக்கும் வேலைகள்.

I. 2024-09-01ஆம் திகதி முதல் 2025-08-31ஆம் திகதி வரையில் சிற்றுண்டிச்சாலையை நடாத்திக்கொண்டு செல்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

II. இது தொடர்பில் ஆர்வம் காட்டும் நிறுவனங்கள் அல்லது நபர்கள் விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு மீளளிக்கப்படாத 3500.00 ரூபா தொகையை வைத்தியசாலை சிறாப்பர் பிரிவிற்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு மற்றும் தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

III. கேள்விப் படிவங்களை 2024-07-16ஆம் திகதி முதல் 2024-07-30ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் வைத்தியசாலையின் பிரதான அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

IV. கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கோப்பிலக்கம் மற்றும் கேள்வியின் பெயர் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

V. கேள்விப் படிவங்களை இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும்.

VI. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களை 2024-07-31ஆம் திகதி மு.ப. 11.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என்பதுடன் அன்றைய தினமே மு.ப. 11.30 மணிக்கு கேள்விப் படிவங்கள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் கேள்விதாரர்கள் கலந்துகொள்ளலாம்.

VII. மேலதிக விபரங்களை 041-2222261 / 041-2222262 / 041-2222263 எனும் தொலைபேசி இலக்கங்களைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**பொது வைத்தியசாலை,**
**மாத்தறை.**

# பெயர் மாற்றம்

கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் கோயில் முன் வீதி, முறக்கொட்டான்சேனை எனும் விலாசத்தில் வசிக்கும் இராசம்மா ஆகிய நான் அறியத்தருவதாவது எனது பெயர் இராசம்மா ஆனால் எனது பிறப்பு பதிவில் அரசம்மா என்று உள்ளது எனது சகல ஆவணங்களிலும் இராசம்மா என்று உள்ளதால் எனது பிறப்புப் பதிவில் இராசம்மா என்று மாற்றம் செய்யவுள்ளேன் என்று இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் நாட்டு மக்களுக்கும் அறியத்தருகிறேன்

**வே. இராசம்மா**

# பெறுகை அறிவித்தல்

## மாகாண கல்வித் திணைக்களம் - வடமத்திய மாகாணம்

## தொழில்நுட்ப கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

வரிசை கல்வி அமைச்சிலிருந்து கிடைக்கப்பெற்றுள்ள மாணியங்களில் இங்கு கீழ்க்காணும் செயற்றிட்டங்களுக்காக வடமத்திய மாகாணத்தின் மாகாண கல்வித் திணைக்கள பெறுகைக்குழுத் தலைவரால் பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | விபரங்கள் | கேள்விப் பிணையின் பெறுமதி (இ. ருபா) | மீளளிக்கப் படாத கட்டணம் (இல. ரூபா) | ஒப்பந்தக் காலம் - நாட்கள் | பதிவுத் தரம் |
|---|---|---|---|---|---|
| 01 | அ/கெக்கிராவ மத்திய மகா வித்தியாலயத்தின் 68'X20' கட்டிடம் பழுதுபார்த்தல் | 170,000.00 | 5,000.00 | 126 நாட்கள் | C05 அல்லது C06 |
| 02 | அ/கெக்கிராவ மத்திய மகா வித்தியாலயத்தின் 80'X20' கட்டிடம் பழுதுபார்த்தல் | 120,000.00 | 3,000.00 | 112 நாட்கள் | C07 அல்லது C06 |

01) விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல்கள் மூலமாக இடம்பெறும். இந்தப் பெறுகையின் மொத்த செலவுக் கிரயம் 50 மில்லியன் ரூபாவிற்கும் குறைவாக இருப்பதால் 2016/13(ii)ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் CIDA தர முன்னுரிமை வழங்கப்படும்.

02) விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் சகல விலைமனுதாரர்களும் நிர்மாணக் கைத்தொழில் மற்றும் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) செல்லுபடியாகும் பதிவைக் கொண்ட ஒப்பந்தக்காரர்களாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உள்ளாகாதவர்களாக இருத்தல் வேண்டும்.

03) நிர்மாண ஒப்பந்தங்களுக்கு இயைபான சகல விலைமனு ஆவணங்களை அனுராதபுரத்தில் அமைந்துள்ள வடமத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் மேலதிக கல்விப் பணிப்பாளர் (நிதி) அவர்களிடம் (தொலைபேசி இலக்கம் 025-2222432 தொலைநகல் இலக்கம் 020-2222432 மற்றும் மின்னஞ்சல் முகவரி: ncpedpro@gmail.com) மற்றும் பொலன்னறுவை வலயக் கல்வி அலுவலகத்தின் கணக்காளரிடம் (தொலைபேசி: 027-2226982) அலுவலக நேரங்களில் 20024 ஓகஸ்ட் 06ஆம் திகதி வரை (மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையில்) பரீட்சித்துப் பார்க்கலாம்.

04) நிர்மாண ஒப்பந்தங்களுக்கு இயைபான சகல வேலை விபரங்கள் மற்றும் திட்டங்கள் தொடர்பானவற்றை அனுராதபுரத்தில் அமைந்துள்ள வடமத்திய மாகாண பொறியியல் திணைக்களத்தின் கட்டிடப் பொறியியலாளரிடம் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் அந்த அலுவலகத்தைத் தொடர்புகொள்ளும் வசதிகள் கீழே தரப்பட்டுள்ளன. தொலைபேசி இலக்கம் 025-2225916 தொலைநகல் இலக்கம் 025-2226157 மற்றும் மின்னஞ்சல் முகவரி: ncpengineering@gmail.com

05) தகைமை வாய்ந்த விலைமனுதாரர்கள் அனுராதபுரம் வடமத்திய மாகாணத்தின் மாகாண கல்வித் திணைக்களத்தின் கணக்காளருக்கு எழுத்துமூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனுக்கள் 2024 ஜூலை 16 ஆம் திகதி முதல் 2024 ஓகஸ்ட் 06 ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை வழங்கப்படும்.

06) விலைமனுக்களை ''மூலப்பிரதி'' மற்றும் ''இரண்டாம் பிரதி'' என வெவ்வேறான உறைகளில் இட்டு முத்திரைக் குறி பொறித்து கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் செயற்றிட்டம் மற்றும் ஒப்பந்தத்தின் பெயர், இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என்பவற்றை உள்ளடக்கிய உறையை வேறொரு உறையில் இட்டு, தலைவர், பெறுகைக் குழு, மாகாண கல்வித் திணைக்களம், வடமத்திய மாகாணம், அனுராதபுரம் எனும் முகவரிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள திகதி மற்றும் நேரத்திற்கு முன்னர் அனுப்புதல் வேண்டும் அல்லது மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் (நிதி) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

07) விலைமனுக்களின் செல்லுபடியாகும் காலம், தகைமை மற்றும் ஏனைய நிபந்தனைகள் மற்றும் அறிவுரைகள் விலைமனு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

08) விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல் 2024 ஓகஸ்ட் 07ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் சமர்ப்பிக்கப்படும் விலைமனு முறியானது நிபந்தனையற்றதாகவும் மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் அல்லது நிர்மாண உத்தரவாத நிதியத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டதாகவிருத்தல் வேண்டும். அல்லாவிட்டால் ரொக்கப் பணத்தில் செலுத்தலாம். விலைமனுப் பிணை முறியானது விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும் என்பதுடன் இந்நாட்டில் மாற்றக்கூடியதாகவிருத்தல் வேண்டும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட திகதி நேரம் முடிவடைந்த உடனேயே விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

09) கிடைக்கப்பெற்றுள்ள விலைமனுக்களில் ஒன்றை அல்லது அனைத்தையும் அல்லது ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னர் எந்தவொரு வேளையிலும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை திணைக்கள பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது என்பதுடன் அதன் காரணமாக விலைமனுதாரர்களுக்கு எந்தவொரு கடப்பாடு அல்லது பொறுப்பு இல்லையென்பதுடன் அவ்வாறான தீர்மானத்தை எடுப்பதற்கான காரணம் தொடர்பில் பிரகடனமொன்றை விடுப்பதற்கு கடப்பாடு இல்லை.

**தலைவர் / மாகாண கல்விப் பணிப்பாளர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மாகாண கல்வித் திணைக்களம்,**
**வடமத்திய மாகாணம்,**
**அனுராதபுரம்.**

திகதி: 2024.07.15

it's what you want
www.adz.lk

# பெறுகை அறிவித்தல்

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## மாகாண நிலையான அபிவிருத்தி மானியம் மற்றும் மாகாண சபை அபிவிருத்தி மானிய செயற்றிட்டம் (PSDG & PCDG)

## மாகாண கல்வித் திணைக்களம் - வடமத்திய மாகாணம்

## தொழில்நுட்ப உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள், விஞ்ஞான உபகரணங்கள் மற்றும் விளையாட்டுத்துறைப் பொருட்களை கொள்வனவு செய்தல் - 2024

01. வடமத்திய மாகாணம், மாகாண கல்வித் திணைக்களத்தின் சார்பில் பிரதான அமைச்சுப் பெறுகைக் குழுவின் தலைவரினால் பின்வரும் தொழில்நுட்ப உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக தகைமை வாய்ந்த மற்றும் திறமையான விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ இல. | நிதி வளம் மற்றும் விபரம் | ஒப்பந்த இலக்கம் | உருப்படியின் பெயர் | எண்ணிக்கை | விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி (இல. ரூபாயில்) | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் (இல. ரூபாயில்) |
|---|---|---|---|---|---|---|
| 01 | மாகாண சபை அபிவிருத்தி மானியத்தின் (PSDG) கீழ் தொழில்நுட்ப உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் - 2024 | NCP/ED/AC9/PC/PSDG/03/2024 | Desktop Computers | 17 | 67,350.00 | 3,500.00 |
| | | | UPS (650VA) | 24 | | |
| 02 | மாகாண நிலையான அபிவிருத்தி மானியத்தின் (PSDG) கீழ் தெரிவு செய்யப்பட்ட இரண்டாம் நிலை பாடசாலைகளுக்கு (அ/புரம் மற்றும் பொலன்னறுவை) விஞ்ஞான உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் - 2024 | NCP/ED/AC9/PC/PSDG/04/2024 | பாடசாலை விஞ்ஞானகூட உபகரணங்கள் | (விலைமனு ஆவணத்தில் உள்ளவாறு) | 90,000.00 | 3,500.00 |
| 03 | மாகாண நிலையான அபிவிருத்தி மானியத்தின் (PSDG) கீழ் மாகாண, வலய, கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கு அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் - 2024 | NCP/ED/AC9/PC/PSDG/05/2024 | இலிகிதர் மேசை | 36 | 75,000.00 | 3,500.00 |
| | | | இலிகிதர் கதிரை | 36 | | |
| | | | உருக்கு அலுமாரி | 26 | | |
| | | | கோவை ராக்கை | 27 | | |
| 04 | மாகாண நிலையான அபிவிருத்தி மானியத்தின் (PSDG) கீழ் ஆரம்பப் பிரிவு பாடசாலைகளுக்கு (அ/புரம் மற்றும் பொலன்னறுவை) விளையாட்டுப் பொருட்களைக் கொள்வனவு செய்தல் - 2024 | NCP/ED/AC9/PC/PSDG/06/2024 | (ஆரம்பப் பிரிவு பாடசாலைகளுக்குத் தேவையான விளையாட்டுப் பொருள் பட்டியல் விலைமனுக்களில் உள்ளடக்கப் பட்டுள்ளன) | (விலைமனு ஆவணத்தில் உள்ளவாறு) | 60,000.00 | 3,500.00 |
| 05 | மாகாண நிலையான அபிவிருத்தி மானியத்தின் (PSDG) கீழ் இரண்டாம் நிலைப் பிரிவு பாடசாலைகளுக்கு (அ/புரம் மற்றும் பொலன்னறுவை) விளையாட்டுப் பொருட்களைக் கொள்வனவு செய்தல் - 2024 | NCP/ED/AC9/PC/PSDG/07/2024 | (ஆரம்பப் பிரிவு பாடசாலைகளுக்குத் தேவையான விளையாட்டுப் பொருள் பட்டியல் விலைமனுக்களில் உள்ளடக்கப் பட்டுள்ளன) | (விலைமனு ஆவணத்தில் உள்ளவாறு) | 180,000.00 | 10,000.00 |

02. தேசிய போட்டி ரீதியான விலைக்கோரல் நடைமுறையின் ஊடாக விலைக்கோரல்கள் இடம்பெறும்.

03. ஒப்பந்தத்தைக் கையளிப்பதற்கு தகைமையைப் பெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெறாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் சட்டரீதியான அதிகார நிறுவனத்தினால் வழங்கப்பட்ட இயைபுடைய துறைக்கான செல்லுபடியாகும் வியாபாரப் பதிவுச் சான்றிதழ் இருத்தல் வேண்டும்.

04. ஆர்வம் காட்டும் தகுதிவாய்ந்த விலைமனுதாரர்கள் தேவையான மேலதிக விபரங்களை வடமத்திய மாகாணம், மாகாண கல்வித் திணைக்களத்தின் பிரதான அலுவலக கணக்காளரிடம் (தொலைபேசி – 025-2222432) 2024 ஜூலை மாதம் 16ஆம் திகதி முதல் 2024 ஆகஸ்ட் மாதம் 06ஆம் திகதி வரையில் அலுவலக நேரத்தினுள் (மு.ப. 9.00 முதல் பி.ப. 03.00 மணிக்கிடையில்) பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கும் வாய்ப்பும் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் அக்காலப் பகுதியினுள் மாகாண கல்விப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் செய்து மற்றும் மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணத்தைச் (மேற்கூறிய அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வகையில்) செலுத்தியதன் பின் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யும் வாய்ப்பும் உரித்தாகும்.

05. விலைமனுக்களின் செல்லுபடிக் காலம், தகைமை மற்றும் ஏனைய இயைபுடைய நிபந்தனைகள் மற்றும் அறிவுரைகள் விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

06. விலைமனுவுடன் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கான விலைக்கோரல் பிணை முறியொன்று இருத்தல் வேண்டும் என்பதுடன் அது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற வங்கிப் பிணை முறியாகவிருத்தல் வேண்டும். அவ்வாறல்லாவிடில் ரொக்கப் பணமாகச் செலுத்தலாம். இயைபுடைய வங்கிப் பிணை முறி, விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும் என்பதுடன் இலங்கையினுள் மாற்றக்கூடியதாகவிருத்தல் வேண்டும்.

07. இந்த விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் (மேற்கூறிய அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வகையில்) 05 பொதிகளாக செயற்படுத்தப்படும் என்பதுடன் விலைமனுதாரர்கள் இந்த ஐந்து (05) பொதிகளுக்கும் அல்லது ஒரு உருப்படிக்காக விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

08. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை (ஒரு பொதிக்கு) ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என இரு பிரதிகளில் தயாரித்தல் வேண்டும் என்பதுடன், அந்த இரு பிரதிகளையும் வெவ்வேறான முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட உறைகளில் இட்டு மீண்டும் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட தனியான உறையில் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் ''17 எண்ணிக்கையான மேசைக் கணனி இயந்திரங்கள் மற்றும் 24 UPS கொள்வனவு செய்தல் - 2024'' என 01 பொதிக்காகவும், ''விஞ்ஞான உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் - 2024'' என 02வது பொதிக்காகவும், '' அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் - 2024'' என 03ஆம் பொதிக்காகவும், ''ஆரம்பப் பிரிவுப் பாடசாலைகளுக்கு விளையாட்டுப் பொருட்களைக் கொள்வனவு செய்தல் - 2024'' என 04ஆம் பொதிக்காகவும், ''இரண்டாம் நிலை பிரிவுப் பாடசாலைகளுக்கு விளையாட்டுப் பொருட்களைக் கொள்வனவு செய்தல் - 2024'' என 05ஆம் பொதிக்காகவும் குறிப்பிட்டு ஒப்பந்த இலக்கத்தையும் குறிப்பிட்டுச் சமர்ப்பித்தல் வேண்டும்.

09. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை வடமத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் பிரதான கணக்காளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம் அல்லது தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, மாகாண கல்வித் திணைக்களம், வடமத்திய மாகாணம், அனுராதபுரம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி 2024 ஆகஸ்ட் மாதம் 07ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும். (அன்றைய தினம் விலைமனுக்கள் திறக்கப்படுவதால்) விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளும் காலம் நிறைவடைந்தவுடன் சமுகம் தருவதற்கு விரும்பும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களினால் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் இதில் கலந்துகொள்ளலாம்.

10. கிடைக்கப்பெற்றுள்ள விலைமனுக்களில் ஒன்றை அல்லது அனைத்தையும் அல்லது ஒப்பந்தத்தைக் கையளிப்பதற்கு முன் எந்தவொரு வேளையிலும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கான உரிமையை திணைக்கள பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது என்பதுடன், அந்தக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மாகாண கல்வித் திணைக்களம்,**
**வடமத்திய மாகாணம்,**
**அனுராதபுரம்.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## நகர அபிவிருத்தி அதிகாரசபை

### நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

1. கீழ் தரப்பட்டுள்ள அட்டவணையில் உள்ள முன்மொழியப்பட்ட வீதி வலையமைப்பின் நிர்மாணத்திற்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து நகர அபிவிருத்தி அதிகாரசபையின் சார்பில் அமைச்சு பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | கேள்வி இல. | திட்டத்தின் பெயர் | அரச வரிகள் தவிர்த்து கேள்விமனு தொகை (ரூபா) | குறைந்த பட்ச ICTAD தரம் | திட்டக் காலம் (நாட்கள்) | தக்க வைப்புக் காலம் (நாட்கள்) | கேள்விக் கட்டணம் (அரச வரிகள் இன்றி மீளளிக்கப் படாதது) (ரூபா) | விலைமனு பிணை பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 53/04/126-1-2024 | பாதுக்க, மில்லேவத்தவில் சிறிய மற்றும் நடுத்தர அளவான நிறுவனங்களின் (SME) தொழில்துறை பூங்கா அபிவிருத்தித் திட்டத்திற்காக முன்மொழியப்பட்ட வீதி வலையமைப்பின் நிர்மாணம் | 221,132,540.94 | C-2 (நெடுஞ் சாலை நிர்மாணம்) | 270 | 365 | 50,000.00 | 3,317,000.00 |

2. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் ரொக்கப்பண ஒப்பந்தத்திற்கு எதிராக குறிப்பிடப்பட்ட CIDA (ICTAD) பதிவுத் தேவையை பூர்த்தி செய்தவராகவும் இருத்தல் வேண்டும்.
3. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு, விலைமனுதாரர் 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின் 8 ஆவது பந்தியின் கீழ் நிறுவனப் பதிவாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.
4. விலைமனுதாரர்கள் பத்தரமுல்லை, செத்சிறிபாய கட்டம் 1, 8ஆவது மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபை, மெய் ஆதன முகாமைத்துவ மற்றும் அபிவிருத்திப் பிரிவில் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் (தொ.பே. 011 2875921, 011-3611950 அல்லது 011-2875916-20, நீடிப்பு: 2960-2967, தொலைநகல்: 011-2875900, மின்னஞ்சல்: directorred@uda.gov.lk) என்பதோடு 2024 ஜுலை 17 ஆம் திகதி தொடக்கம் 2024 ஓகஸ்ட் 30 ஆம் திகதி பி.ப. 2.45 வரை வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் மேலுள்ள முகவரியில் விலைமனு ஆவணத்தை பரீட்சிக்க முடியும்.
5. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணமாக 50,000.00 ரூபாவை (அரச வரிகள் தவிர்த்து) செலுத்தி 2024 ஜுலை 17 ஆம் திகதி தொடக்கம் 2024 ஓகஸ்ட் 30 ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 09.00 தொடக்கம் பி.ப. 2.45 வரை எழுத்து மூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து பத்தரமுல்லை, செத்சிறிபாய கட்டம் 1, 8ஆவது மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபை, மெய் ஆதன முகாமைத்துவ மற்றும் அபிவிருத்திப் பிரிவில் இருந்து வாங்க முடியும். கட்டணம் ரொக்கப்பணத்தில் இருத்தல் வேண்டும்.
6. ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்று இரு பிரதிகளில் இருத்தல் வேண்டும். விலைமனுக்களைக் கொண்ட "கடித உறை - 1" (தொழில்நுட்ப தகைமை தகவல்) மற்றும் "கடித உறை - 2" (நிதி விலைமனு) ஆகியவை ஒற்றைக் கடித உறையில் மூடப்பட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் "பாதுக்க, மில்லேவத்தவில் சிறிய மற்றும் நடுத்தர அளவான நிறுவனங்களின் (SME) தொழில்துறை பூங்கா அபிவிருத்தித் திட்டத்திற்காக முன்மொழியப்பட்ட வீதி வலையமைப்பின் நிர்மாணம்" என்று குறிப்பிட்டு 2024 செப்டெம்பர் 10 ஆம் திகதி பி.ப. 2.00 அல்லது அதற்கு முன்னர் (இறுதித் திகதி) தலைவர், அமைச்சுப் பெறுகைக் குழு, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு, 12ஆவது மாடி, செத்சிறிபாய கட்டம் II, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது கைகளால் கொண்டுவந்து சேர்த்தல் வேண்டும். விலைமனுப் பிணை "கடித உறை - 1" இல் மூடப்படுதல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் மற்றும் மின்னணு விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது.
7. விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் விலைமனுதாரர்களின் "கடித உறை - 1" (தொழில்நுட்ப தகைமை தகவல்) மாத்திரம் உடன் திறக்கப்படும் என்பதோடு "கடித உறை - 2" (நிதி விலைமனு) திறக்கப்படாது இருக்கும்.
8. தொழில்நுட்ப மதிப்பீடு பூர்த்தி செய்யப்பட்டதும், தகுதிபெற்ற விலைமனுதாரர்களுக்கு "கடித உறை - 2" (நிதி விலைமனு) திறக்கப்படும் நேரம் மற்றும் திகதி எழுத்தில் அறிவிக்கப்படும். தொழில்நுட்பத்தில் தகுதிபெற்ற விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில் "கடித உறை - 2" திறக்கப்படும்.
9. பணிகளை மேற்கொள்ள தகுதியற்றவர் என்று கருதப்படும் விலைமனுதாரர்களின் "நிதி விலைமனு" (கடித உறை - 2) அவை திறக்கப்படாது திருப்பித் தரப்படும்.
10. விலைமனுதாரர்கள் மற்றும்/ அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதிக்குப் பின்னர் அவை உடன் திறக்கப்படும்.
11. விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்காக இறுதித் திகதியில் இருந்து 91 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
12. விலைமனுக்கள் மேலுள்ள 1 இல் தரப்பட்டிருக்கும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு விலைமனுப் பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும். விலைமனுப் பிணையானது 2024 டிசம்பர் 10 ஆம் திகதி வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும் என்பதோடு அது விலைமனு ஆவணங்களில் தரப்பட்ட நிலையான வடிவத்தை பயன்படுத்திய வங்கி உத்தரவாதம் ஒன்றாக இருத்தல் வேண்டும்.
13. விலைமனுக்களை தயாரித்தல் மற்றும் விநியோகிப்பதுடன் தொடர்புபட்டு விலைமனுதாரர்களினால் ஏற்படும் எந்த ஒரு செலவுகள் அல்லது எந்த ஒரு இழப்புகளுக்கும் பெறுகைக் குழு பொறுப்பேற்காது.
14. பெறப்பட்ட எந்த ஒரு விலைமனுவையும் ஏற்பது அல்லது நிராகரிப்பது அல்லது எந்த ஒரு காரணத்தையும் குறிப்பிடாது எந்த நேரத்திலும் இந்த செயன்முறையை வருடாந்தம் செய்யவும், பொருத்தமானது என கருதப்படும் எந்த ஒரு இலக்கத்திற்கும் ஒப்பந்ததாரர்களின் பட்டியலை மட்டுப்படுத்துவதற்கும் பெறுகைக் குழுவுக்கு உரிமை உள்ளது.
15. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு பத்தரமுல்லை, செத்சிறிபாய கட்டம் 1, 9ஆவது மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபை, கேட்போர் கூடத்தில் 2024 ஓகஸ்ட் 21 ஆம் திகதி மு.ப. 10.00க்கு இடம்பெறும்.

**தலைவர்**
**அமைச்சுப் பெறுகைக் குழு**
**நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு**
**12 ஆவது மாடி, செத்சிறிபாய கட்டம் II, பத்தரமுல்லை.**

# பெறுகை அறிவித்தல்

## மாவட்ட பொது வைத்தியசாலை - சிலாபம்

01. பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்காக பெயர்பெற்ற விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மாவட்ட பொது வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைக் குழுத் தலைவரினால் ஏற்றுக்கொள்ளப்படும். குறித்த வேலைகளுக்கான மதிப்பீட்டுச் செலவு மற்றும் நிர்மாணக் காலம் என்பன அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

02. தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் நடைமுறைகள் செயற்படுத்தப்படும்.

03. ஒப்பந்தத்தைக் கையளிப்பதற்காக தெரிவு செய்யப்படும் விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியல்படுத்தப்பட்டிருத்தல் கூடாது என்பதுடன் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பின்வரும் தரப்பட்டுள்ள தரம் அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு செய்துகொண்டிருத்தல் வேண்டும். Lead கதவுகளை வழங்கி பொருத்தும்போது அதற்குரித்தான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

04. இது தொடர்பான மேலதிக விபரங்களை மாவட்ட பொது வைத்தியசாலையின் திட்டமிடல் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனுக்களை பொதுவான வேலை நேரங்களில் மாவட்டப் பொது வைத்தியசாலையின் திட்டமிடல் பிரிவிலிருந்து பரீட்சித்துப் பார்க்கலாம்.

05. 2024-07-16ஆம் திகதி முதல் 2024-07-30ஆம் திகதி வரையில் எந்தவொரு கடமை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பற்றுச் சீட்டைச் சமர்ப்பித்ததன் பின் விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான ஆவணங்களை மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளரிடமிருந்து கொள்வனவு செய்யலாம்.

06. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்களை, குறித்த விலைக்கோரல் ஆவண இலக்கத்தின் கீழ் 2024-07-31ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் பணிப்பாளர், மாவட்ட பொது வைத்தியசாலை, சிலாபம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது கணக்கிடல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து இந்நிகழ்விற்கு வருகைதந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகளின் முன்னிலையில் அவை திறக்கப்படும். பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

| விடயம் | நிர்மாணத்திற்கான மதிப்பீட்டுத் தொகை (ரூ. மில்லியன்) | விலைக் கோரல் பிணை முறி (ரூபா) | ஆகக்குறைந்த பதிவு | ஒப்பந்தக் காலம் | மீளளிக்கப் படாத தொகை (ரூபா) | விலைக் கோரல் ஆவண இலக்கம் |
|---|---|---|---|---|---|---|
| மனநல ஆரோக்கிய சிகிச்சையகத்தின் திருத்தவேலைகள் | 1.3 | 25,000.00 | C9 அல்லது C8 | 42 நாட்கள் | 2,000.00 | DGH/CH/PL/11/2024 |
| நிர்வாகக் கட்டிடத்தைச் சுற்றி உள்ள கொங்கிறீட் வரம்பின் திருத்தவேலைகள் | 1.54 | 23,000.00 | C9 அல்லது C8 | 49 நாட்கள் | 2,500.00 | DGH/CH/PL/17/2023 |
| திடீர் விபத்து மற்றும் சிகிச்சை பிரிவிற்கு வெளியே மூடப்படாதுள்ள இரும்பை பாதுகாப்பதற்காக செய்யவேண்டிய திருத்தவேலைகளைச் செய்தல் | 1.70 | 34,000.00 | C9 அல்லது C8 | 42 நாட்கள் | 2,500.00 | DGH/CH/PL/04/2024 |
| கழிவுநீர் முறைமையின் திருத்தவேலைகள் 10ஆம் இலக்க வார்ட் | 0.45 | 8,500.00 | C9 அல்லது C8 | 35 நாட்கள் | 2,000.00 | DGH/CH/PL/18/2023 |
| B சத்திரசிகிச்சையகத்திற்கு Lead கதவுகளை வழங்கி பொருத்துதல் | 7.4 | 148,000.00 | Speciality - Radiation shielding works / Average annual volume of construction work performed in last five years at least Rs. 88.80M | 42 நாட்கள் | 2,500.00 | DGH/CH/PL/13/2024 |
| வைத்தியசாலை கழிவுப் பொருட்களை களஞ்சியப் படுத்துவதற்கான களஞ்சியசாலை மற்றும் சாம்பலைக் கொட்டுவதற்கு குழியொன்றை அமைத்தல் | 5.03 | 100,000.00 | C7 அல்லது C6 | 56 நாட்கள் | 2,500.00 | DGH/CH/PL/06/2024 |

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**சிலாபம்.**

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## தேசியகல்வி நிறுவனம்

**(National Institute of Education)**
**Design, Construction and Commissioning of Virtual Classroom for NIE Maharagama (NIE/BC/2024/09)**

மஹரகமவிலுள்ள தேசிய கல்வி நிறுவனத்தில் Virtual Classroom ஐ உருவாக்கல், நிர்மாணித்தல் மற்றும் செயற்படவைத்தல் ஆகியவற்றிற்காக தகைமையுடைய அமைப்புக்களிலிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன. விலைமனுக்கள் 2024 ஓகஸ்ட் 5 ஆம் திகதியன்றுவரையும் பொறியியல் சேவைகளுக்கான பணிப்பாளரிடம் பின்வரும் ஆவணங்களை சமர்ப்பிப்பதன் மூலம்,பொறியியல் திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

தகுதியுள்ள விலைமனுதாரர்கள் பின்வரும் தகைமை தகவுத்திறனுடன் இசைந்தொழுகல் வேண்டும்.

1) ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதிக்காக,தெரிவுசெய்யப்பட்ட விலைமனுதாரர் தகுதி நீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் (CIDA - ICTAD இன் பின்னுரிமைக்காரர்) கட்டிட நிர்மாணத்தில் சி-6 அல்லது மேற்பட்டதரத்தில் பதிவு பெற்றிருத்தல் வேண்டும்.

2) விலைமனுதாரரானவர் இலங்கையில் இயைவுடைய தன்மையிலுள்ள செயற்றிட்டங்களில் உருவாக்கல், நிர்மாணித்தல் மற்றும் செயற்பட வைத்தல் ஆகியவற்றில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருட அனுபவத்தையும் **"Design, Construction and Commissioning of Virtual Classroom, Soundproof studio or Soundproof auditorium or similar nature project"** என்பதில் ஆகக் குறைந்தது ஒரு ஒப்பந்தத்தை பூர்த்தி செய்த அனுபவம் அத்துடன் கடந்த 5 வருடங்களில் உள்ளக வேலைகளின் பெறுமதியானது இலங்கைப் பணத்தில் ஏழு மில்லியனுக்கு குறைவாக இருத்தல் கூடாது (சான்று பகருவதற்காக செயற்றிட்ட பூர்த்தி செய்தலின் சான்றிதழானது விலைமனுவுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்)

அனைத்து விலைமனுக்களும் 100,000 ரூபா பெறுமதியான கேள்விப் பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருப்பதுடன் விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து 119 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

விலைமனுக்கள் பதிவுத் தபாலில் 2024 ஓகஸ்ட் 6 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு முன்னராக கிடைக்கும் தன்மையில் 'தலைவர், பெறுகைக் குழு, தேசிய கல்வி நிறுவகம்' என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விலைமனுக்கள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள திகதி மற்றும் நேரத்திற்கு முன்னராக நிருவாகம், நிதி மற்றும் ஆதரவு சேவைகள் ஆகியவற்றிற்கான பிரதி பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலும் உட்சேர்க்கப்படலாம். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **"Bids for Virtual Classroom for NIE Maharagama"** என்ற தலைப்பானது தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும். விலைமனுக்கள் அதே நாளில் பி.ப. 2 மணிக்கு திறக்கப்படும்.

2024 ஜுலை 25 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு மஹரகம தேசிய கல்வி நிறுவன பொறியியல் சேவைகளுக்கான பணிப்பாளரின் அலுவலகத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்றும் தள விஜயமும் நடைபெறும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**தேசிய கல்வி நிறுவனம்,**
**மஹரகம.**

# கொழும்பு மாநகர சபை

## விலைக்கோரல்களுக்கான அழைப்பு

கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரால் பின்வரும் சேவைகளை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | கேள்வி இலக்கம் | விபரம் | மீளளிக்கப் படாத கட்டணம் ரூபா | விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி | விலைமனுதாரர்/ கேள்விதாரரின் தகுதிகள் | மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளும் நபர் |
|---|---|---|---|---|---|---|
| 01 | ME/ME/DR/43/2024 | மாதம்பிட்டிய புனரமைத்தல் பம்பி நிலையத்தை புனரமைத்தல் | 5,900.00 | 20,000,000.00 ரூபா (நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி) | C 01 CIDA தரத்தைக் கொண்ட நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு ஒப்பந்தக்காரர்கள் மற்றும் EM1 மின்சாரம் மற்றும் இயந்திரவியல் சேவைகள் (E 1 - IV HSF) | பொறியியல் பணிப்பாளர் (திட்டங்கள்) தொலைபேசி: 011-2692403 |
| 02 | ME/ME/DR/22/2024 | C 17 C 18 புவியீர்ப்பு சாக்கடை வழிகளை புனரமைத்தல் | 5,900.00 | 8,000,000.00 ரூபா (நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி) | C 02 CIDA தரத்தைக் கொண்ட நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு ஒப்பந்தக்காரர்கள் | பொறியியல் பணிப்பாளர் (திட்டங்கள்) தொலைபேசி: 011-2692403 |

விலைமனு ஆவணங்களை (மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி) இரண்டு முறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

**முறை 01** - கொழும்பு மாநகர சபையின் இணையதளத்திலிருந்து (www.colombo.mc.gov.lk) தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.

i. மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணத்தை பின்வரும் வகையில் செலுத்துதல் வேண்டும்.
   அ) எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் மக்கள் வங்கி நகர மண்டப கிளையில் பேணப்படும் 167-1-001-6-3169425 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கலாம்.
   ஆ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கொடுப்பனவு கருமபீடங்களில் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை செலுத்தலாம்.

   . வட்டார அலுவலகம் 04, இல. 147, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, கொழும்பு-06.
   . சகல வட்டார அலுவலகங்கள்

ii. பற்றுச்சீட்டு / வங்கி வரவுத் துண்டை விலைமனு ஆவணங்களுடன் கட்டாயம் இணைத்தல் வேண்டும்.
iii. இணையதளத்திலிருந்து விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொண்ட விலைமனுதாரர்கள் பின்வரும் விபரங்களை dirproj@colombo.mc.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அறிவித்தல் வேண்டும்.

   1. நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி
   2. தொடர்புகொள்ளும் தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி

**முறை 02 - நகர மண்டப வளவில் பெற்றுக்கொள்ளலாம்.**

ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் ஆவணக் கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரையும் 2024-08-05ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரையில் நகர மண்டப காசாளர் கருமபீடத்திற்கு செலுத்தி மற்றும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மாநகர பொறியியலாளர் திணைக்களத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவிலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

அ. கொடுப்பனவுகளை 2024-08-05ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் மேற்கொள்ளுதல் வேண்டும்.

ஆ. நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்கதான விலைமனு முறி/ பிணை விலைமனுக்கள் மூடப்படும் திகதியிலிருந்து 210 நாட்கள் வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைமனு முறி/ பிணை 2025.03.04ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைக்கோரல்கள் 2025.02.02ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

இ. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்களை மூலப்பிரதி மற்றும் நகல் பிரதிகளில் கொழும்பு-07, நகர மண்டபம், செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2024.08.06ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் உள்ளிடல் வேண்டும்.

ஈ. 2024-08-06ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது முடிவுறுத்தப்படும் என்பதுடன் இறுதி நேரத்திற்கு பின் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதோடு அதன் பின்னர் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். இந்த நாள் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டால், அடுத்து வரும் வேலை நாளில் 10.00 மணிக்கு விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் பங்கேற்பதற்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர்.


உ. 'மாதம்பை பம்பி நிலையத்தை புனரமைத்தல்'' திட்டத்திற்கான விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024-07-23ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கொழும்பு-10, மாளிகாகந்த, வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவில் இடம்பெறும்.

ஊ. 'C 17 C 18 புவியீர்ப்பு சாக்கடை வழிகளை புனரமைத்தல்'' திட்டத்திற்கான விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024-07-23ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு கொழும்பு-10, மாளிகாகந்த, வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவில் இடம்பெறும்.

எ. விலைமனுக்களின் விபரங்கள் விலைமனு ஆவணங்களுடன் வழங்கப்படும். 5.0 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட விலைமனுக்களுக்கு விலைமனுதாரர் பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவு செய்து கொண்ட பின் PCA 3 படிவத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**ஜே.எம். பத்ராணி ஜயவர்தன,**
**மாநகர ஆணையாளர்**
**கொழும்பு மாநகர சபை.**

# யூரோ கிண்ணத்தை 4ஆவது முறை வென்று ஸ்பெயின் அணி சாதனை



மார்கெல் யர்சபேலின் கடைசி நேர கோல் மூலம் இங்கிலாந்துக்கு எதிரான யூரோ கிண்ண இறுதிப் போட்டியில் 2–1 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டிய ஸ்பெயின் அணி நான்காவது முறையாகவும் கிண்ணத்தை வென்று சாதனை படைத்தது.

மறுபுறம் பிரதான கிண்ணம் ஒன்றை வெல்லும் இங்கிலாந்தின் பல தசாப்த எதிர்பார்ப்பு மீண்டும் ஒருமுறை சிதைந்தது.

பெர்லின் ஒலிம்பியா அரங்கில் நேற்று முன்தினம் (14) நடைபெற்ற போட்டியில் 47 ஆவது நிமிடத்தில் நிகோல் வில்லியம்ஸ் போட்ட கோல் மூலம் ஸ்பெயின் அணி முன்னிலை பெற்றபோதும் இங்கிலாந்தின் கோலே பல்மர் 73 ஆவது நிமிடத்தில் பதில் கோல் திருப்பினார். இதனால் போட்டியின் கடைசி நிமிடங்களில் பரபரப்பு அதிகரித்திருந்தது. ஆட்டத்தின் முழு நேரம் முடியும் தறுவாயில் 86 ஆவது நிமிடத்தில் யர்சபேலின் கோல் திருப்பி ஸ்பெயின் அணியை வெற்றி பெறச் செய்தார்.

இதற்கு முன்னர் 1964, 2008 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் ஐரோப்பிய சம்பியனாகி இருக்கும் ஸ்பெயின் அந்தக் கிண்ணத்தை அதிக முறை வென்ற அணியாகவும் சாதனை படைத்துள்ளது.

மறுபுறம் இங்கிலாந்து அடுத்தடுத்து இரு யூரோ கிண்ண இறுதிப் போட்டிகளில் தோற்றிருப்பதோடு 1966 உலகக் கிண்ணத்தை வென்ற பின்னர் அந்த அணியால் தொடர்ந்து பிரதான தொடர் ஒன்றில் சம்பியன் கிண்ணத்தை வெல்ல முடியாமல் போயுள்ளது.

# கொழும்பு லீக் கிண்ணம் நியூ ஸ்டார் அணி வசம்



**பிரின்ஸ் குணசேகர**

கொழும்பு கால்பந்து லீக் ஏற்பாடு செய்த முதல் தர கால்பந்து தொடரின் சலஞ்சர்ஸ் கிண்ணத்தை நியூ ஸ்டார் விளையாட்டுக் கழகம் கைப்பற்றியது. கொழும்பு சிட்டி லீக் மைதானத்தில் நேற்று முன்தினம் (14) நடைபெற்ற நியூ ஸ்டார் மற்றும் செலஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான இறுதிப் போட்டியில் நியூ ஸ்டார் அணி பெனால்டி சூட் அவுட் முறையில் 5–3 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

அரையிறுதிப் போட்டியில் ஓல்ட் பென்ஸ் அணியை தோற்கடித்தே நியூ ஸ்டார் அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியமை குறிப்பிடத்தக்கது. கொழும்பு கால்பந்து லீக்கினால் 5 ஆண்டுகளுக்குப் பின்னரே இந்தத் தொடர் ஏற்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தொடரின் சிறந்த வீரராக நியூ ஸ்டார் அணியின் மொஹமட் செக்கி மற்றும் சிறந்த கோல் காப்பாளராக செலஞ்சர்ஸ் அணியின் எம்.எஸ். சுரங்க தெரிவாகினர். இந்தத் தொடரின் பிரதான அனுசரணையாளரான மணிவண்ணன், கொழும்பு லீக்கின் தலைவர் நஜிப்தீன் ஹாஜியார் மற்றும் செயலாளர் சஹ்ரான் சிங்ஹவன்ஷ ஆகியோர் பிரமுகர்களாக பங்கேற்றிருந்தனர்.



ஒலிம்பிக் போட்டியில் இலங்கை சார்பில் பங்கேற்க தகுதி பெற்றிருக்கும் தருஷி கருணாரத்ன, தில்ஹானி லேகம்கே மற்றும் அருண தர்ஷன ஆகியோருக்கு ரிட்ஸ்பரி நிறுவனம் தலா ஒரு மில்லியன் ரூபா நிதி உதவி வழங்கியது. சி.பி.எல். புட்ஸ் இன்டர்நஷனல் பிரைவட் லிமிடெட் சந்தைப்படுத்தல் பொது முகாமையாளர் நிலுபுல் டி சில்வா மற்றும் ரிட்ஸ்பரி பிரிவு முகாமையாளர் அருண லியனபத்திரன அதற்கான காசோலையை வழங்குவதை காணலாம்.

# கோபா அமெரிக்காவை வென்றது ஆர்ஜென்டீனா



கோபா அமெரிக்க கால்பந்து தொடரில் கொலம்பியாவை வீழ்த்தி அர்ஜென்டீனா சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.

அமெரிக்காவின் மியாமி நகரில் இலங்கை நேரப்படி நேற்று (15) நடந்த இறுதி ஆட்டத்தில் நடப்பு சாம்பியன் ஆர்ஜென்டீனா மற்றும் கொலம்பிய அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதல் மற்றும் இரண்டாவது பாதியில் இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்கவில்லை. இதனால் இரு அணிகளுக்கும் கூடுதல் அரை மணி நேரம் வழங்கப்பட்டது. அதில் இரு அணிகளும் கோல் அடிக்க முழு முயற்சியுடன் போராடின.

இருந்தாலும் அந்த கூடுதல் நேரத்தின் முதல் 15 நிமிடத்திலும் இரண்டு அணிகளாலும் கோல் அடிக்க முடியவில்லை. இந்த நிலையில் இரண்டாவது 15 நிமிடத்தில் ஆர்ஜென்டீனா வீரர் லாடாரோ மார்டினஸ் வெற்றி கோலை பெற்றார்.

இந்த வெற்றியின் மூலம் 16ஆவது முறையாக கோபா அமெரிக்கா தொடரை ஆர்ஜென்டீனா கைப்பற்றியது.

## சர்வதேச செய்திகள்

# காசாவில் எட்டு நாட்களில் ஐந்தாவது பாடசாலை மீது தாக்குதல்: 17 பேர் பலி

## வான், தரை மற்றும் கடல் வழியாக தொடர்ந்து குண்டு மழை



காசாவில் இடம்பெயர்ந்த பலஸ்தீனர்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் மற்றொரு பாடசாலை மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 17 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

நுஸைரத் அகதி முகாமில் இருக்கும் இந்த பாடசாலை மீது கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு நடத்தப்பட்ட வான் தாக்குதலில் மேலும் 80 பேர் காயமடைந்திருப்பதாக காசா சிவில் பாதுகாப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதில் ஐ.நாவினால் நடத்தப்படும் அபூ ஒரைபான் பாடசாலையே இலக்கு வைக்கப்பட்டுள்ளது. காசாவில் கடந்த எட்டு நாட்களில் மக்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் பாடசாலை மீது நடத்தப்படும் ஐந்தாவது தாக்குதலாக இது உள்ளது.

அபூ ஒரைபான் பாடசாலையில் ஆயிரக்கணக்கான இடம்பெயர்ந்த மக்கள் தங்கி இருப்பதாக பலஸ்தீன சிவில் பாதுகாப்பு நிறுவனத்தின் பேச்சாளர் மஹ்மூத் பசால் குறிப்பிட்டதோடு இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்ட பெரும்பாலானவர்கள் பெண்கள் மற்றும் சிறுவர்கள் என்றும் தெரிவித்தார்.

இஸ்ரேல் இராணுவம் வெளியிட்டிருக்கும் அறிவிப்பில், நுஸைரத்தில் உள்ள பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா. நிவாரண மற்றும் பணிகள் நிறுவனத்தின் அபூ ஒரைபான் பாடசாலை கட்டடம் இருக்கு பகுதியில் செயற்படும் பல பயங்கரவாதிகள் மீது விமானப் படை தாக்குதல் நடத்தியது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

காசாவில் உள்ள ஐ.நா. கட்டடங்கள், பாடசாலைகள் மற்றும் பாதுகாப்பு வலயங்களாக அறிவிக்கப்பட்ட அகதி முகாம்கள் மீது இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருகிறது. பாதுகாப்பு வலயம் என்று அறிவிக்கப்பட்ட அல் மவாசி மீது கடந்த சனிக்கிழமை நடத்தப்பட்ட கடும் தாக்குதல்களில் குறைந்தது 92 பேர் கொல்லப்பட்டனர்.

காசாவில் ஐ.நாவின் பிரதான நிவாரண நிறுவனங்களாக செயற்படும் 190 அல்லது பாதிக்கும் அதிகமான வசதிகள் இஸ்ரேலிய இராணுவத்தின் தாக்குதல்களுக்கு இலக்காகி இருப்பதோடு இவைகளில் சில ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் தாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாடசாலைகள் மீதான தாக்குதல்கள் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம், பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி விசாரணை ஒன்றுக்கு கடந்த வாரம் அழைப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

எவ்வாறாயினும் காசாவில் இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடர்ந்து இடம்பெற்று வருவதோடு கடந்து ஒன்பது மாதங்களுக்கு மேலான காலத்தில் 38,600க்கும் அதிகமான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்றைய தினத்திலும் காசா மீது இஸ்ரேல் வான், கடல் மற்றும் தரை வழியாக உக்கிர தாக்குதல்களை தொடர்ந்த நிலையில் இந்தப் போர் தணிவதற்கான எந்த சமிக்ஞையும் இன்றி நீடித்து வருகிறது. முன்னெடுக்கப்பட்டு வரும் போர் நிறுத்தப் பேச்சுவார்த்தைகளில் இருந்து வெளியேறியதாக ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

மத்திய காசாவில் அல் மகாசி முகாமில் இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதல்களை அடுத்து அங்கிருந்து மூன்று சிறுவர்கள் உட்பட ஐந்து சடலங்களை மீட்டதாக பலஸ்தீன செம்பிறை சங்கத்தின் துணை மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேநேரம் தெற்கு காசாவின் கான் யூனிஸ் நகரில் இஸ்ரேல் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும் தெற்கு முனை நகரான ரபாவில் செல் குண்டுகளை வீசியும் ஹெலிகொப்டர் மூலமும் கடும் தாக்குதல்களை நடத்தியதாகவும் குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேபோன்று இஸ்ரேலிய கடற்படையும் காசாவை இலக்கு வைத்து தாக்குதல்களை நடத்தி வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஹமாஸ் ஆயுதப் பிரிவு தலைவர் முஹமது தெயிபை இலக்கு வைத்து நடத்தியதாக இஸ்ரேல் கூறும் அல் மவாசி மீதான தாக்குதலை அடுத்து ஹமாஸ் பேச்சுவார்த்தையில் இருந்து வெளியேறியது.

எனினும் போர் நிறுத்த உடன்படிக்கை ஒன்றை எட்டுவது மற்றும் பணயக்கைதிகள் பரிமாற்றத்தில் இஸ்ரேல் உண்மையான தயார் நிலையை காண்பிப்பதாயின் மீண்டும் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கத் தயாராக இருப்பதாக ஹமாஸ் அரசியல் பிரிவு தலைவர் இஸ்மைல் ஹனியே குறிப்பிட்டுள்ளார்.

காசாவில் போர் நிறுத்த உடன்படிக்கை ஒன்று நெருங்கி இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கடந்த வாரம் குறிப்பிட்டிருந்தார். கடந்த மே மாதம் முன்மொழியப்பட்ட திட்டத்திற்கு இரு தரப்பும் இணங்கி இருப்பதாக நேட்டோ மாநாட்டின்போது பைடன் கூறியிருந்தார்.

இந்நிலையில் நேற்று (15) அமெரிக்காவை கடுமையாகச் சாடிய ஹமாஸ், சர்வதேசம் தடை செய்த ஆயுதங்களை இஸ்ரேலுக்கு வழங்கி இனப்படுகொலைக்கு ஆதரவு அளிக்கிறது என்று குற்றம்சாட்டியது.


'இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்கு அனைத்து வகையான தடைசெய்யப்பட்ட ஆயுதங்களையும் வழங்கியதன் மூலம், எமது பலஸ்தீன மக்களின் குழந்தைகள் மற்றும் பெண்களின் இரத்தத்தின் மீதான அமெரிக்க வெறுப்புணர்வை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்' என்று ஹமாஸ் அரச ஊடகம் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

போர் தரப்புகளுக்கு இடையிலான பேச்சுவார்த்தைக்கு அமெரிக்காவின் ஆதரவுடன் எகிப்து மற்றும் கட்டார் மத்தியஸ்தம் வகிக்கின்றன. எனினும் இதுவரை இடம்பெற்ற போர் நிறுத்தப் பேச்சுவார்த்தைகள் எந்த முன்னேற்றமும் இன்றி நீடித்து வருகிறது.

இஸ்ரேலின் முற்றுகைக்கு மத்தியில் காசாவில் தொடரும் தாக்குதல்களில் அந்தப் பகுதி சின்னாபின்னமாக்கப்பட்டிருப்பதோடு அங்குள்ள 2.4 மில்லியன் மக்களில் அதிகப் பெரும்பான்மையானவர்கள் தமது வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டிருக்கும் நிலையில் அங்கு உணவு, மருந்து மற்றும் ஏனைய அடிப்படை பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருகிறது.

# டிரம்ப் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியவரின் மர்மம் நீடிப்பு






முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்பின் பேரணி மீது சூடு நடத்திய துப்பாக்கிதாரியின் நோக்கம் தொடர்ந்து தெளிவில்லாமல் இருக்கும் நிலையில் அமெரிக்க மத்திய புலனாய்வாளர்கள் விசாரணைகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.

பென்சில்வேனியாவில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற பேரணியில் இடம்பெற்ற இந்த தாக்குதலில் டிரம்பின் வலது காதில் காயம் ஏற்பட்டதோடு பேரணியில் பங்கேற்றிருந்த ஒருவர் கொல்லப்பட்டு மேலும் இருவர் காயமடைந்தனர்.

ஓவல் அலுவலகத்தில் இருந்து ஞாயிற்றுக்கிழமை இரவு பேசிய அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், துப்பாக்கிதாரியின் நோக்கம் இன்னும் தெளிவாகவில்லை என்றும் அரசியல் நோக்கமுடைய வன்முறைகளை அமெரிக்கர்கள் நிராகரிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இதில் 20 வயதான பென்சில்வேனியாவின் பெதல் பார்க் பகுதியைச் சேர்ந்த தோமஸ் மத்தியூ குரூக்ஸ் என்ற இளைஞரே துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்டிருப்பதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. அவர் சம்பவ இடத்திலேயே சுட்டுக்கொல்லப்பட்டார். துப்பாக்கிதாரியின் வீடு மற்றும் வாகனத்தில் இருந்து குண்டு தயாரிக்கும் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் உள்ளூர் துப்பாக்கி சங்கம் ஒன்றின் உறுப்பினராக இருப்பதோடு உயர் பாடசாலை துப்பாக்கி குழுவில் இடம்பெற முயன்றபோதும் அது முடியாமல் போனதாகவும் முன்னாள் சக மாணவர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

குரூக்கின் தொலைபேசியை புலன்விசாரணையாளர்கள் ஆராய்ந்து வருவதாக நீதித் திணைக்கள அதிகாரிகள் செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளனார்.

சனிக்கிழமை பேரணியில் டிரம்ப் பேசும் இடத்தில் இருந்து சுமார் 400 அடி தூரத்தில் கூரையின் மீது குரூக்கை கண்டதாக அங்கிருந்த பலரும் முறையிட்டுள்ளனர். இதனை அடுத்து உள்ளூர் பொலிஸ் அதிகாரி ஒருவர் அவரை பார்க்க கூரை மீது ஏறியபோது அவர் மீது துப்பாக்கியை நீட்டியதால் அந்த அதிகாரி பின்வாங்கியதை அடுத்தே அவர் டிரம்ப்பை நோக்கி சூடு நடத்தி இருப்பதாக பட்லர் கௌன்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குரூக்ஸ், டிரம்பின் குடியரசு கட்சிக்காரர் என பதிவாகியுள்ளார். அவர் அந்தக் கட்சிக்காக நிதி உதவிகளையும் செய்திருப்பதாக தெரியவருகிறது.

குரூக்ஸ் அமைதியானவர், புத்திசாலி என்று பலரும் அவரை வர்ணிக்கின்றனர்.

சமூக ஊடகக் கணக்குகளில் அவர் கடுஞ்சொற்களைப் பயன்படுத்தவில்லை, அவருக்கு மனநல நோய் இருப்பதாகத் தகவல் இல்லை என்று அமெரிக்க மத்தியப் புலனாய்வுத் துறை தெரிவித்தது.

குரூக்ஸ் தனிநபராகச் செயல்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# நேபாள பிரதமராக சர்மா ஒலி 4ஆவது முறையாக நியமனம்

நேபாள நாட்டின் புதிய பிரதமராக நேபாள கம்யூனிஸ்ட் கட்சி – ஐக்கிய மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சித் தலைவர் கே.பீ. சர்மா ஒலி நேற்று பதவி ஏற்றார்.

அந்நாட்டின் பிரதமராக சர்மா ஒலி நான்காவது முறையாக பதவி ஏற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நேபாள பாராளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நம்பிக்கையில்லா தீர்மானத்தில் முன்னாள் பிரதமர் புஷ்பா கமல் தாஹால் விரசண்டா தோல்வி அடைந்தார். இதையடுத்து ஜனாதிபதியை சந்தித்து கே.பீ. சர்மா ஒலி, தனது தலைமையில் ஆட்சி அமைக்க உரிமை கோரியிருந்தார்.

ஜனாதிபதி ராம் சந்திரா பவுடலால் புதிய பிரதமராக சர்மா ஒலி கடந்த ஞாயிற்றுக்கிழமை நியமிக்கப்பட்ட நிலையிலேயே அவர் நேற்று பதவி ஏற்றார்.



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜூலை மாதம் 16ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.